சாந்துறைப் படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்.

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஏப்ரல் 09 - 15, 2014

பக்கம் 24

விலை : 30/-

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



# கனவு பலித்தது

1717 FOLLOW US www.mobitel.lk

ரூ. 100 இற்கு ரீலோட் செய்து 2 IDD நிமிடங்களை 50 சதம் வீதம் அனுபவியுங்கள்

விஷேட அழைப்புமுறை தேவைப்பட மாட்டாது.

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 கனவு பலித்தது

ஒருமாதிரி இலங்கை அணியின் 18 வருடக்காத்திருப்பு முடிவுக்கு வந்திருக்கிறது. எப்படியாவது உயிரைக் கொடுத்து விளையாடி இறுதிப்போட்டிக்கு முன்னேறும் இலங்கை அணி 1996 க்கு பின்னர் உலகக்கிண்ணம் எதனையும் வெல்லவில்லை. இறுதிக்கு செல்லும் மார்க்கத்தை அறிந்திருந்தவர்களுக்கு கிண்ணத்தை வெல்லும் அதிர்ஷ்டம் கிட்டவில்லை.

கடந்த 7 வருடங்களில் 5 ஆவது முறையாக இம்முறை 20/20 உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்கு இலங்கை அணி தெரிவாகியிருந்தது. வழமை போலவே இந்த முறையும் இலங்கை இறுதிப்போட்டியில் சொதப்பும் என்றே எல்லோரும் ஆருடம் கூறினர். அதற்குக் காரணமும் இருந்தது. ஒன்று, இலங்கை அணியை இறுதிப்போட்டிகளில் விடாது துரத்தி வந்த துரதிர்ஷ்டம். இரண்டாவது, பலமிக்க இந்திய அணியைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்த முறை நடைபெற்ற 20/20 உலகக்கிண்ணத்துக் கான போட்டிகளில் ஒன்றில் கூட தோற்காமல் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருந்தது. டோனி,விராட் கோஹ்லி, யுவ்ராஜ், ரெய்னா, ஜடேஜா, ரஹானே என்று கடைசிவரை அதிரடி காட்டும் துடுப்பாட்டமலைகள் அந்த அணியில் இருந்தன. கூடவே வேகத்தில் கலக்கும் புவனேஷ்குமார், மொஹிட் சர்மா, சுழலில் மாயாஜாலம் காட்டும் அஸ்வின், மிஸ்ரா என்று எல்லாப்பக்கமும் வலிமை கொண்டதாகவே இந்திய அணி காணப்பட்டது. எனவே இந்தமுறையும் கிண்ணத்தை இலங்கைக்கு செல்லவிடாமல் இந்தியாவே இரண்டாவது முறை யாகவும் வெல்லும் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் இந்தப்போட்டி இலங்கைக்கு இன்னொரு வகை யில் முக்கியமானது. இலங்கையின் இரட்டைத்தூண் களாக மஹேல ஜெயவர்த்தனவும், குமார் சங்க காரவும் இந்தமுறை நடைபெற்ற 20/20 உலகக் கிண்ணப்போட்டியோடு 20/20 போட்டிகளில் இருந்து ஓய்வுபெறும் முடிவை அறிவித்திருந்தனர். எனவே இவ்வளவுகாலமும் இலங்கை அணியைத் தாங்களின் தோள்களில் சுமந்த இருவருக்கும் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த வெற்றியோடு விடைகொடுக்க இலங்கை வீரர்கள் விரும்பினர்.

போட்டி மழையால் 45 நிமிடங்கள் தாமதமாகவே தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் மலிங்கா களத்தடுப்பை தேர்வு செய்ய, களம் புகுந்தது இந்தியா. ஆரம்பத்தில் ஓட்டங்களைப் பெறக்கஷ்டப்பட்ட இந்திய அணி, தனது முதலாவது இலக்கையும் வேகமாக இழந்தது. ரஹானேயின் வெளியேற்றத்தோடு விராட் கோஹ்லி உள்நுழைய ஆட்டம் சூடுபிடித்தது. இந்த தொடரில் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தி அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமை பெற்றிருந்த கோஹ்லி பந்தை பறக்க விடத்தொடங்கினார். அவரின் அனல்வேக ஆட்டத்தைப் பார்த்தபோது இந்தியா இமாலய இலக்கை நிர்ணயிக்கப்போகிறதோ என்ற எண்ணம் பிறந்தது. ஆனாலும் ஒருபக்கத்தில் கோஹ்லியை ஆடவிட்ட இலங்கை வீரர்கள் மறுபக்கத்தில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தத் தொடங்கினர். கடைசி 20 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் இந்திய அணி 130 ஓட் டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

20/20 போட்டிகளில் 131 என்பது மிகச்சாதாரணமான இலக்கே. ஆனால் வேகப்பந்திலும், சுழல் பந்திலும் வல்லவர்களைக் கொண்ட இந்திய அணியை எதிர்த்து 131 ஓட்டங்களைப் பெற முடியுமா? என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனாலும் இலங்கை வீரர்கள் நம்பிக்கையோடு போராடினார்கள். அதி லும் இந்தப்போட்டியே தங்களின் கடைசி 20/20 போட்டி என்பதால் மஹேலவும் சங்காவும் வெளுத்து வாங்கினார்கள். கடைசியாக 18 வருடக்கனவு பலித்தே விட்டது. 20/20 உலகக்கிண்ணம் இலங்கை அணி யின் கரங்களில். கூடவே தரவரிசைப்பட்டியலிலும் இலங்கை முதலிடத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்தியா, மேற்கிந்தியா போல பிரபலமான அதிரடி வீரர்கள் இல்லாவிட்டாலும் கூட தங்களின் கூட்டு முயற்சியால் இந்த வெற்றியை இலங்கை அணி சாதித் திருந்தது. 20/20 உலகக்கிண்ண வரலாற்றில் ஏற்கனவே 2 தடவைகள் இறுதிப்போட்டிக்கு முன்னே றிய போதும் பாகிஸ்தானிடமும், மேற்கிந்தியாவிடமும் வெற்றியைத் தாரைவார்த்திருந்த இலங்கை அணி , தவறுகளில் இருந்து பாடம் படித்து தன் கனவை நனவாக்கியிருக்கிறது. தங்களின் இத்தனை வருட கிரிக்கெட் வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்த போதும் ஒரு உலகக்கிண்ணத்தைத்தானும் வெல்லமுடியவில்லையே என்ற ஏக்கத்துடன் இருந்த குமார் சங்ககாரவையும், மஹேல ஜெய வர்த்தனவையும் மகிழ்வோடு உலகக்கிண்ண வெற்றியோடு வழியனுப்பி வைத்துள்ளனர் இலங்கை வீரர்கள்.








## தோல்விக்கு காரணம் யுவ்ராஜா?

இலங்கை வீரர் சங்கக்காரவின் பொறுப்பான ஆட்டத்தால் இலங்கையிடம் இந்தியா 20/20 கிரிக்கெட்டின் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் தோல்வியடைந்துள்ளது. இந்தப் போட்டியில் மிக அருமையாக ஆடிக்கொண்டிருந்த இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான விராட் கோஹ்லிக்கு அதிக பந்துகள் கிடைக்காமல் போனதற்குக்காரணம் யுவ்ராஜ் சிங் என்ற பரப்புரையும் அவருக்கு எதிரான எதிர்ப்பலைகளும் மிகப் பயங்கரமாக அவரையும் அவரது குடும்பத்தையும் அடுத்த சில மாதங்களுக்கு ஆட்டுவிக்கப்போகின்றன.

யுவ்ராஜ் சிங் இந்தப்போட்டியில் 21 பந்துகளில் 11 ஓட்டங்களை எடுத்ததென்பதை ஏற்றுக் கொள்வது கஷ்டம்தான். ஆனால் இதே யுவ்ராஜ் சிங்தான் சில நாள்களுக்கு முன்பு நடைபெற்ற போட்டியில் 43 பந்துகளில் 60 ஓட்டங்களை எடுத்து இந்திய அணியை வெற்றியடைய வைத்தவர் என்பதையும் ..அன்றைக்கு நாயகனாக இருந்தவர் என்பதையும் மறக்கக் கூடாது.

இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 20/20 இறுதிப் போட்டியில் விராட் கோஹ்லி மிக மிக நன்றாக விளையாடியுள்ளார்தான். ஆனால் அவர் சந்தித்த ஆரம்ப ஓவர்களில் அவர் எந்தப் பந்து வீச்சாளர்களைச் சந்தித்தார் என்பதையும், எத்தனை ஓட்டங்களை எடுத்திருந்தார் என்பதையும் சிந்தித்துப்பார்க்கிறோமா ??? ஆரம்ப ஓவர்களில் எதனால் அவரால் அடித்தாட முடியாமல் போனது என்பதை அறிவுபூர்வமாக சிந்தித்துப் பார்த்தால் உண்மை புரியும்.

போட்டி நடைபெற்ற ஆடுகளத்தில் விளையாடும் எந்த வீரனாக இருந்தாலும் பந்தை அடித்தாடத் தொடங்குவதற்கு முன்பு, பந்தின் நகர்வு , வேகம், அசைவு , போன்றவற்றை அனுமானிப்பதற்கு அவனுக்கு அவகாசம் தேவை. எடுத்தோம் கவிழ்த்தோம் என ஆஸ்திரேலியப் ஆடுகளங்களில் அடித்தாடுவதைப் போல அடித்தாட முடியாதவை பங்களாதேஷ் ஆடுகளங்கள் . சரி இப்போது யோசித்துப் பாருங்கள்.. யுவ்ராஜ் சந்தித்த மலிங்காவுடன் ஒப்பிடுமிடத்து கோலி சந்தித்த பந்து வீச்சாளர்கள் கடினமானவர்கள் அல்லர் என்பது புலனாகும். அதுமட்டுமல்லாமல் விக்கட் அல்லது ஆடுகளத்தின் வேகம் குறைவானதாக இருந்ததன் காரணமா கவும் துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வரும் வேகத்தை துல்லி யமாகக் கணித்து அடித்தாட முடியாமல் போய்விட்டது என்ற உண்மையும் புரியும்.

இதுதான் யுவ்ராஜ்"க்கும் நடந்தது. அவரால் பந்தின் வேகத்தை சரியாகக் கணித்து அடித்து ஆட முடியாமல் போனதே 20/20 இறுதிப்போட்டியில் யுவ்ராஜின் துடுப்பாட்டத் தோல்விக்குக் காரணம்.

சரி அவரால்தான் அடித்தாட முடியாமல் போய்விட்டது. ஏன் டோனி யாலும் அடித்தாட முடியவில்லை. ??? சிக்ஸர்களும் பவுண் டரிகளும் அடிப்பது டோனிக்கு ஒன்றும் சிரமமான விடயமல்ல. ஆனால் அன்று அப்படி அடித்தாட முடியாமற் போனதற்குக்காரணம் என்ன ?? அதுதான் ஆடுகளத்தில் இருந்த உண்மையான நிலைமை.

கோஹ்லி அடித்தாடத் தொடங்கியபோது 20 க்கும் மேற்பட்ட பந்துகளை சந்தித்து இருந்தார் என்பதையும் யுவ்ராஜ் சிங் 21 பந்துகளையே சந்தித்திருந்தார் என்பதையும் நினைவில் கொண்டுவந்துவிட்டு யுவ்ராஜ் சிங்கின் நிலைமையை விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந்திய அணியின் தோல்விக்கு வெறுமனே யுவ்ராஜ் மட்டும் காரணமல்ல . ஆனால் கிரிக்கெட்டில் ஓட்டங்களையும் வெற்றி களையும் மட்டுமே பார்க்கும் ரசிகர்களால் அதற்கான காரணம் அலசி ஆராயப்படுவதில்லை. இதனால் எதிர்வரும் நாள்கள் யுவ்ராஜ்"க்கு மிகப்பெரும் மனச் சஞ்சலத்தையும் வேதனையை யும் அளிக்கும் நாட்களாகவே இருக்கப் போகின்றன. ஆனால் புற்றுநோயையே எதிர்த்து வென்ற யுவ்ராஜ்"க்கு.. சக மனித னின் புரியாமை காரணமாக ஏற்படப்போகும் சவால்களையும் கேள்விகளையும் எதிர்த்து வெல்வது பெரிய விடயமாகவா இருக்கப்போகின்றது ?????

கனகச் செல்வன் ரெக்ஸி (சிட்னி, அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்னொரு இணையக்கொலை

மீண்டும் ஒருமுறை முகப்புத்தகத்தில் தகவல் சொல்லிவிட்டு யாழ்ப்பாணத்து இளைஞன் ஒருவன் உயிரை மாய்த்துள்ளான். சில மாதங்களுக்கு முன்னரும் யாழ். பல்கலைக் கழக மாணவியான வித்தியா என்பவரும் தன்னுடைய புகைப்படங்களை முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்துவிட்டு கடைசியாகத் தன்னுடைய வாழ்வு முடிந்து விட்டதைக் குறிக்க முற்றுப்புள்ளி ஒன்றைப் பதிவிட்ட சில நொடிகளில் தூக்கிட்டுத் தற்கொலை செய்திருந்தார். வித்தியாவின் தற்கொலை பெரும் அதிர்வலைகளை இளையோரிடத்தே ஏற்படுத்தியிருந்தது. அதிலும் அவரவரும் நீதிபதி இருக்கைகளில் அமர்ந்து கொண்டே எதிர்ப்பட்டோரைக் குற்றவாளி ஆக்கி இருந்தனர்.

வித்தியாவின் சாவுபற்றிய அதிர்வுகள் அடங்கத் தொடங்கிய பொழுதில் இன்னொரு சாவு முகப்புத்தக வாக்குமூலத்தின் பின்னர் நிகழ்ந்திருக்கிறது. சிறுப்பிட்டியைச் சேர்ந்த நிருபன் என்ற இளைஞனே இவ்வாறு முகப்புத்தகம் வழியே தன் மனக்குமுறலைக் கொட்டிவிட்டு அப்படியும் ஆற்ற முடியாமல் தூக்கிட்டுத் தன்உயிரைப்போக்கியுள்ளார்.

ஆனாலும் நிருபனின் சாவுக்கும் வித்தியா

## நிரூபனின் சாவுபற்றிய சில பதிவுகள்

வின் சாவுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. வித்தியா வெறும் முற்றுப்புள்ளியோடு தன் முகப்புத்தக வாக்குமூலத்தைச் சுருக்கி இருந்தார். ஆனால் நிருபன் அப்படியல்ல.

தன்னுடைய சாவுச்செய்தியை முகப்புத்தகம் ஊடாகத் தன் நண்பர்களுக்குச் சொல்லிவிட்டு வித்தியா மறைந்ததால் அவள் உயிரை தங்களால் காப்பாற்ற முடியவில்லையே என்ற குற்ற உணர்வில் அவளின் பல்கலைக்கழக நண்பர்களும் முகப்புத்தக நண்பர்களும் துடித்தனர். வித்தியாவின் சாவு நிகழ்ந்த பின்னர் எல்லோரும் தங்கள் முகப்புத்தகக் கணக்குகளில் இதைப்பற்றியே மாய்ந்து மாய்ந்து எழுதினர்.

**நிருபனின் சாவுக்கும் வித்தியாவின் சாவுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. வித்தியா வெறும் முற்றுப்புள்ளியோடு தன் முகப்புத்தக வாக்குமூலத்தைச் சுருக்கி இருந்தார். ஆனால் நிரூபன் அப்படியல்ல. தன்னை ஒரு பெண் ஏமாற்றிவிட்டாள் என்றும், அதற்கு நண்பர்கள்தான் நியாயம் கேட்க வேண்டும் என்றும் ஒரு மிக நீண்ட காதல் கதையைப் பதிவேற்றியிருந்தார்.**

தன்னுடைய வாழ்வின் கடைசித் துளியை முற்றுப்புள்ளி மூலம் உணர்த்திய வித்தியா அவ்வாறான முடிவை எடுக்க என்ன காரணம் என்று எந்தத் தடயத்தையும் விட்டுவைக்கவில்லை. இதனால் பல்வேறு ஊகங்களும் எழுந்தன. சிலர் மீது "வித்தியாவின் சாவுக்கு இவரே காரணம்" என்று சுட்டுவிரலும் நீட்டப்பட்டிருந்தது. ஆனால் அவற்றுக்கெல்லாம் எந்தவித ஆதாரங்களும் இருக்கவில்லை. போகிற போக்கில் தங்கள் நினைப்புக்கு கைகால் வரைந்து தன்னை ஒரு பெண் ஏமாற்றிவிட்டாள் என்றும், அதற்கு நண்பர்கள்தான் நியாயம் கேட்க வேண்டும் என்றும் ஒரு மிக நீண்ட காதல் கதையைப் பதிவேற்றியிருந்தார். இந்தப் பதிவில் தனது காதலி என்று அடையாளப்படுத்திய ஒரு பெண்ணின் 188 புகைப்படங்கள் அந்தப் பெண் பயன்படுத்திய தொலைபேசி இலக்கங்கள், குறித்த பெண்ணின் சார்பில் தன்னை மிரட்டிய நபரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றோடு அந்தப் பெண்ணின் முன்னாள் காதலர்கள் என்று இன்னும் சிலரின் பெயரையும் நிருபன் குறிப்பிடத் தவறவில்லை. இவையெல்லாவற்றையும் ஒரே மூச்சில் பதிவிட்ட பின்னர்தான் தனது மூச்சை முடிவுக்குக் கொண்டுவர நிருபன் நினைத்திருக்கிறான். ஆனாலும் இந்தப் பதிவில் எந்த ஒரு இடத்திலும் தன்னுடைய வாழ்க்கையை இத்தோடு முடித்துக் கொள்ளப் போவதாக நிருபன் கோடிட்டுக்காட்டவேயில்லை.

"யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவனான நிருபன் வழக்கமான இளைஞர்கள் போல கலகலப்பானவர் அல்ல. அவர் ஒரு தனிமை விரும்பி. தானுண்டு தன் சோலியுண்டு என்று மிகக் குறுகியது நிருபனின் உலகம். நண்பர்கள் கூட அவருக்கு அதிகளவில் இல்லை" இவையெல்லாம் நிருபனை அறிந்தவர்கள் சொல்கின்ற தகவல்கள். இந்தத் தகவல்கள் உண்மைதான் என்பதை நிருபனின் முகப்புத்தகக் கணக்கில் உள்ள புகைப்படங்கள் ஊடாக அறியமுடிகிறது. அந்தப் புகைப்படங்களில் அநேகமாக தனியனாகவே நிருபனைக் காணமுடிகிறது. எந்தப் படத்திலும் நண்பர்கள் எவரும் இல்லை. ஆக மொத்தத்தில் நிருபன் ஒருதனியனாகவே இருக்க ஆசைப்பட்டுள்ளான்.

வெளியுலகோடு மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளை வைத்திருப்பதற்கு நிருபனிடம் இயல்பாகவே உள்ள கூச்ச சுபாவமே பிரதான காரணம். ஆனால் முகப்புத்தக வெளி அவருக்கு இன்னொரு விரிந்த உலகத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது. யதார்த்த வாழ்வில் நத்தை போல ஒடுங்கி இருப்பவர்களில் அநேகர் முகப்புத்தகத்தில் அதற்கு எதிரான வடிவமெடுக்க முடிகிறது. இதற்கான வசதிகளைக் கொண்டிருப்பதால்தான் விட்டில்கள் போல இன்றைய இளையோர்கள் முகப்புத்தகமே தங்கள் பிறவிப் பயன் என்று அதற்குள்ளேயே மூழ்கிக்கிடக்கிறார்கள். நிருபனும் தனக்கான புதிய வெளியாக முகப்புத்தகத்தைக் கண்டறிந்து அதற்குள்ளேயே வாழப் பழகிக்கொண்டுள்ளான்.

இந்தப் பழக்கம்தான் அவனுடைய முன்னாள் நண்பியொருத்தியோடு நட்பைப்புதுப்பித்திருக்கிறது. அந்த நட்பு நாளும்பொழுதும் இறுக்கமடைந்து ஒரு கட்டத்தில் காதலாகவும் அரும்பியிருக்கிறது. இந்த நிலையில்தான் குறித்த காதலி ஏற்கனவே இருவரைக் காதலித்தது தனக்குத் தெரியவந்ததாகவும் ஆனால் தன்னை அவள் கைவிடமாட்டாள் என்று நம்பியதாகவும் நிருபன் தன் இறுதி வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார்.


ஏற்கனவே தன் காதலிக்கு காதலர்கள் இருந்துள்ளார்கள் என்பதைக்கூட ஏற்றுக் கொண்ட நிருபனுக்கு சில நாள்களின் பின்னர் அவளிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளும் குறுஞ்செய்திகளும் குறையத் தொடங்கியதை ஏற்க முடியவில்லை. இருவருக்கும் இடையே பிணக்குகள் தொடங்குகின்றன. ஒரு கட்டத்தில் தன் காதலிக்கு இன்னொரு ஆணின் நட்புக் கிடைத்திருப்பது நிருபனுக்குத் தெரியவருகிறது. ஆனாலும் அது சாதாரண நட்புத்தான் என்று அவள் சொன்னாலும் அவனைத்தான் காதலிக்கிறாள் என்று நிருபனுக்கு உறுதியான தகவல் கிடைக்கவே தொலைபேசி ஊடாக சற்றுக் கடினமான வார்த்தைகளால் காதலியோடு உரையாட முற்படுகிறான். ஆனால் நிருபன் தன்னை தொந்தரவு செய்வதாக தனது தந்தையிடம் அந்தப் பெண் சொல்ல, வேறு சில நபர்கள் நிருபனை மிரட்டியிருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில்தான் எல்லாவற்றையும் முகப்புத்தகத்தில் ஒப்புவித்துவிட்டு உயிரை விடத் துணிந் திருக்கிறான் நிருபன்.

இவையெல்லாமே நிருபனின் முகப்புத்தக வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல்களே. இதில் எந்தளவு தூரம் உண்மை என்று நிருபனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் மாத்திரமே வெளிச்சம். சிலவேளைகளில் குறித்த பெண்ணின் அதீதமான நட்பு வெளிப்பாட்டை நிருபன் காதல் என்று அர்த்தப்படுத்தி, அவளோடு கனவுலகில் வாழ்ந்திருக்கலாம். நிருபன் நட்பு வட்டத்தைத் தாண்டி காதல் என்ற உலகிற்குள் தன்னை அழைத்தபோது அந்தப் பெண் அதுகுறித்து தன் தந்தையிடம் முறையிட்டிருக்கலாம். ஏனெனில் நிருபனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையிலான உறவு முகப்புத்தகம் வழியேயும் தொலைபேசி ஊடாகவுமே வளர்ந்திருக்கிறது.

நிருபன் சொல்வது போல இருவருக்கும் இடையே திரும்பவும் உறவு ஏற்பட்ட பின்னர் ஒருதடவைகூட நேரில் சந்தித்தமை பற்றியும் அவர் சொல்லவில்லை. இறுதியாகத் தனது முகப்புத்தகத்தில் "முன்னாள் காதலி" என்ற தலைப்புடன் பதிவேற்றியுள்ள 188 படங்களில் ஒன்றில்கூட அந்தப் பெண் நிருபனுடன் இணைந்து நிற்கவில்லை.

'ஸ்கைப்' உரையாடலின்போது எடுத்த புகைப் படமாகவோ அல்லது தொலைபேசி ஊடாக

(20 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடடா! இதுவல்லவோ நல்லிணக்கம்




அக்கினிபுத்திரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏ.எப்.பி. செய்திச் சேவைக்கு ஒரு பேட்டி வழங்கியிருந்தார். அவரின் பேட்டி வழமை போலவே சர்வதேசத்தை அலட்சியப்படுத்தும் வகையிலும், இலங்கையின் இறைமையில் வெளிநாடுகள் தலையீடு செய்வதாகக் குற்றம் சுமத்தும் வகையிலும் அமைந்திருந்தது.

இப்படியான கருத்துக்கள் அவராலும் அவரது அமைச்சர்களாலும் மீண்டும் மீண்டும் முன் வைக்கப்பட்டே வருகின்றன. தங்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எவருமே தட்டிக் கேட்க முடியாது என்ற இறுமாப்பு நிறைந்த கருத்துக்கள் இவர்களால் அடிக்கடி வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும் ஏ.எவ்.பி செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிடப்பட்ட ஒரு விடயத்தையும், அதன் போலித் தன்மையையும், இன்னொருமுறை சர்வதேசத்தை ஏமாற்ற முனையும் நப்பாசையையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது. அதாவது குறித்த பேட்டியின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தாம் முற்றாக நிராகரிப்பதாகவும்,அதே வேளையில் தம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகள் தொய்வின்றித் தொடரும் எனவும் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருந்தார்.

ஜெனிவாத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதோ, நிராகரிப்பதோ நிறைவேற்று அதிகாரம் கொண்ட மஹிந்தவினதும் ,அவரின் விரலசைவில் செயற்படும் அரசாங்கத்தையும் பொறுத்த விடயம்.ஆனால் குறித்த தீர்மானத்தால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை அவர்கள் மட்டுமல்ல முழு இலங்கை மக்களுமே அனுபவிக்க வேண்டி வரும்.

ஆனால் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகள் தொய்வின்றித் தொடரும் என்று ஜனாதிபதி கூறியிருப்பது தொடர்பாகவே தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களும் அச்சமடைய வேண்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தவைப் பொறுத்த வரை நல்லிணக்கம் என்பது தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதாகும். மூச்சுக் கூட விட முடியாத ஒரு அடக்குமுறை மூலம் செயற்கையான அமைதியை நிலைநாட்டுவதே அவரின் அடிப்படைக் கொள்கையாகும்.அதுவே அவர் மேற்கொண்டு வரும் நல்லிணக்க வழிமுறையாகும். அதை அவர் மேலும் வலுப்படுத்தத் தயங்கப் போவதில்லை.

2009 ஆண்டு மே மாதம்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு ஒடுக்குமுறை என்பது கட்டற்ற விதத்தில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான்கீமூன், இந்தியா ஆகிய தரப்புக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் தூர வீசப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் கைவிடப்பட்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற 'மாயமான்' முன் நிறுத்தப்பட்டது. எனவே நல்லிணக்க நடவடிக்கைகள் 5 வருடங்கள் கடந்தும் ஓர்அங்குலம் கூட முன் நகரவில்லை.

ஆனால் வெவ்வேறு சட்டங்கள் மூலம் மாகாண சபையின் அதிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டன. 13 ஆவது திருத்தம் வலுவிழக்கச் செய்யப்பட்டது. அவற்றை விட வடபகுதி மக்களின் அதி கூடிய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாணசபை கூட சீராக இயங்க இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. மாகாணசபை ஒருபுறமிருக்க ஆளுநரும் தலைமைச் செயலரும் தாங்கள் நினைத்தபடி நிர்வாகத்தை நடத்தும் நிலையே நிலவுகின்றது.

இப்படித்தான் அரசியல் ரீதியான நல்லிணக்கம் ஜனாதிபதியால் தொடரப்படுகின்றது. பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலங்கள் அரசால் அபகரிக்கப்படுகின்றன. நாட்டிலேயே சிறந்த விவசாய பூமிகளாகவும், மீன்பிடி மையங்களாகவும் விளங்கும் வலி. வடக்கு, சம்பூர் ஆகிய பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்படாமல் அங்கு படைத்தரப்பின் தோட்டங்களும், விடுதிகளும் அமைக்கப்படுகின்றன.

மணலாறு , முசலி போன்ற பல பகுதிகளிலுமுள்ள விவசாய நிலங்களும், மீன்பிடி மையங்களும் படையினரின் உதவியுடன் பேரினமக்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதனால் போர் முடிவுற்ற பின்னரும் கூட ஏராளமான தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் , முஸ்லிம் மக்களின் நி உரிமை தொடர்பாக இப்படித்தான் இலங்கையில் நல்லிணக்கம் பேணப்படுகிறது. அதே போல் பள்ளிவாசல்களை இடித்தல், கிறிஸ்தவ ஆலயங்களில் புகுந்து தாக்குதல் நடத்துதல், இந்துக் கோவில்களை உடைத்தல் என விநோதமான நல்லிணக்கம் இங்கு பேணப்பட்டு வருகிறது.

இப்படியான நிலையில் தான் ஜனாதிபதி மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிராகரித்துடன் தற்போதைய நல்லிணக்க முயற்சிகளைத் தொடரப் போதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் இவர்களின் நல்லின கம் தொடர்பாகச் சர்வதேசம் நன்றாகப் புரிந்து வைத்துள்ளமைக்கு ஜெனிவாத் தீர்மானம் நல்லதொரு சாட்சியமாகும்.

ஜனாதிபதி அதை நிராகரிக்கலாம். ஆனால் சர்வதேசமும் மக்களும் அவரை நிராகரிக்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை.

# காதலால் பிறந்த ஏ.ரி.எம்

இயந்திர சாதனம் ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான வரலாறுகள் உண்டு. இன்றைய அவசர உலகில் வங்கிக்கு சென்று கால் கடுக்கக் காத்திருந்து பணம் எடுப்பதென்பது கடுப்பேற்றும் விடயம். அதனால் பெரும்பாலானோருக்கும் கை கொடுப்பது ஏ.ரி.எம் எனப்படும் தன்னியக்கப் பணப்பரிமாற்றக் கருவி தான். இந்த ஏ.ரி.எம். (Automatic Teller Machine) உருவான கதை கூட சுவாஸ்யமானது. ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பர்ட் பேரோன் தன் மனைவியின் பிறந்ததினத்துக்கு பரிசளிக்க விரும்பினார். பணத்தை எடுக்க வங்கியில் வரிசையில் நின்றார். அவரது முறை வந்த போது பணத்தைக் கொடுக்க வேண்டிய காசாளர், நேரம் முடிந்து விட்டது என்று கவுண்டரைப் பூட்டி விட்டுச் சென்றுவிட்டார்.

ஜோன் வெறுங்கையோடு மனைவியைப் பார்க்க விரும்பவில்லை. கையில் இருந்த சொற்ப சில்லறையை வைத்து, கொஞ்சம் சொக்லேட்களை வாங்கிக் கொடுத்து மனைவியை சமாதானப்படுத்தலாம் என்று நினைத்தார். ஸ்கொட்லாந்தில் சில்லறைக்காசைப்போட்டால் சொக்லேட்டைப் பெறக்கூடிய 'வெண்டிலேட்டர்' என்ற இயந்திரம் நடைமுறையில் இருந்தது. கிட்டத்தட்ட நாணயக்குற்றிகளைப் போட்டு உரையாடும் பொதுத்தொலைபேசியின் தொழினுட்பத்தை இது ஒத்திருந்தது.

"இப்படி இயந்திரத்தில் சொக்கலேட் கொட்டுண்டுவதற்கு பதிலாக காசே வந்தால் எப்படி இருக்கும்? என்ற சிந்தனை ஜோனுக்கு விளையாட்டுத்தனமாக எழுந்தது. அந்த விளையாட்டுத்தனத்துக்கு வடிவம் கொடுக்க முற்பட்டதன் விளைவுதான் முதல் ஏ.ரி.எம். உருவாக வித்திட்டது.

196 9இல் ஜோன் உருவாக்கிய முதல் ஏ.ரி.எம். வடக்கு லண்டனின் பார்க்லேஸ் வங்கியில் வைக்கப்பட்டது. அதிலும் ஒரு சிக்கல். ஜோனின் மனைவியால் அப்போதைய ஏ.ரி.எம். அட்டைக்கான ஆறு இலக்க குறியீட்டு எண்களை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. உடனே செயலில் இறங்கிய ஜோன், அதை நான்கு இலக்கங்களாகக் குறைத்தார். ஏ.ரி.எம். தற்போது ஏராளமான மாற்றங்களைக் கண்டு விட்டாலும், அதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது ஜோனின் காதல்தான்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாத்

# நிராகரிக்கப்பட்ட தரகர்கள்



அண்மையில் இடம்பெற்ற மேல் மாகாண தென் மாகாண சபைத் தேர்தல்களில் பலரும் எதிர்பார்த்ததைப் போன்றே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றியை பெற்று ஆட்சியையும் கைப்பற்றியுள்ளது. கடந்த தேர்தலை விடக் குறைவான வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றிருந்தாலும் கூட எதிர்க்கட்சிகள் எட்டித் தொட முடியாத அளவுக்கு அரசதரப்பு வெற்றியைப் பெற்றுள்ளது. வன்முறைகள், ஆட்சி அதிகார பலம், அரச வளங்களைப் பயன்படுத்தியமை போன்ற பல வகைகளிலும் மீறல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்கள் கணிசமான ஆதரவை வழங்கியுள்ளனர் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

ஜெனிவாவில் இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்பட்ட வேளையில் அதை ஏகாதிபத்தியங்களின் இலங்கை மீதான மேலாதிக்க முனைப்பு என வர்ணித்து சிங்கள மக்களின் தேசபக்தி ஆளும் வர்க்கத்தால் கட்டியெழுப்பப்பட்டது. சிங்கள மக்களும் அதன் பின்னால் இழுபட்டனர். தங்களையொத்த சகோதர இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நியாயம் வழங்கப்படுவதை விட அநீதி இழைத்தவர்களை இனத்தின் பேராலும் தேசத்தின் பேராலும் காப்பாற்றுவதே முக்கியம் என அவர்கள் முடிவு செய்தனர்.

**அதாவது தமிழ் மக்கள் மீது ஏற்கனவே இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அநீதிகளுக்கும் அவர்கள் தங்கள் மனப்பூர்வமான ஆணையையும் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளனர்.**

இதுவே மேல்மாகாண, தென் மாகாணத்தேர்தல் மூலம் சிங்கள மக்கள் வழங்கிய செய்தியாகும்.

அதே வேளையில் முஸ்லிம் மக்கள் வழங்கிய சில செய்திகளை எந்தவிதத்திலும் அலட்சியம் செய்து விட முடியாது. அதாவது இனத்தின் அடையாளத்தைச் சொல்லிக் கொண்டு முஸ்லிம் மக்களை விலைபேசும் வழி முறைகள் தொடர்ச்சியாகச் செல்லுபடியாகாது என்பதை அவர்கள் இந்தமுறை தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேலானவர்கள் முஸ்லிம்களே. அங்கு வாழும் முஸ்லிம்கள் ஐக்கியப்பட்டு ஒரே தலைமையில் போட்டியிட்டால் கணிசமான ஆசனங்களைப் பெறுவதற்கான வாய்ப்புண்டு.

எனினும் கொழும்பு மாவட்டத்தில் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஒரேயொரு வேட்பாளரே வெற்றி பெற்றுள்ளார். அதே போன்று ரிசாட்பதியூதின் தலைமையிலான அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் ஒருவரே வெற்றி பெற்றுள்ளார். இவ்விரு கட்சிகளும் அரசின் பங்காளிக் கட்சிகள் என்பதுடன் இவர்கள் முக்கிய அமைச்சர்களாகவும் பதவிவகித்து வருகின்றனர். எனினும் இவர்கள் தனித்தனிச் சின்னங்களில் முஸ்லிம் அடையாளத்தை முன் வைத்துப் போட்டியிட்டனர். இருந்த போதிலும் இவர்களுக்கு கொழும்பு வாழ் முஸ்லிம் மக்கள் ஆதரவை வழங்க மறுத்து விட்டனர்.

**அரசுக்கு எதிரான முஸ்லிம் மக்களிடம் முஸ்லிம் அடையாளத்தைக் காட்டி வாக்குகளைப் பெற்று பின்பு அரசுக்கு ஆதரவளிக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் மக்கள் இந்தத் தரகர்களை நிராகரித்து நேரடியாக அரச எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு முஸ்லிமை அமோக வெற்றி பெற வைத்துள்ளனர்.**

ஆனால் கொழும்பு மாவட்டத்தில் மரிக்கார் என்ற முஸ்லிம் வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அது மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று முதலாவது இடத்தையும் பிடித்துள்ளார்.

**இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் முஸ்லிம் அடையாளத்துடன் போட்டியிட்டவர்களை விட ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட தங்கள் இனத்தவர் ஒருவரையே முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.**

**அப்படியானால் முஸ்லிம் அடையாளத்தை முஸ்லிம்** களே ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லிவிட முடியுமா? நிச்சயமாக அப்படிச் சொல்லிவிட முடியாது தான். ஏனெனில் என்றுமே முஸ்லிம் மக்கள் தங்கள் தனித்துவத்தை விட்டுக் கொடுத்ததில்லை. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தங்கள் சொந்தக் கட்சியில் சொந்தத் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்டாலும் கூட இவர்கள் அரசின் பங்காளிக் கட்சிகள். இவர்கள் பெறும் வெற்றி அரசுக்கே அனுசரணையாக இருக்கும்.



பள்ளிவாசல்களை தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தாமை, அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமை உட்பட முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் அரசின் மேல் வெறுப்புற்றுள்ளனர். எனவே அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை ஆதரிக்கப் போவதில்லை.

எனவே அரசுக்கு எதிரான முஸ்லிம் மக்களிடம் முஸ்லிம் அடையாளத்தைக் காட்டி வாக்குகளைப் பெற்று பின்பு அரசுக்கு ஆதரவளிக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் மக்கள் இந்தத் தரகர்களை நிராகரித்து நேரடியாக அரச எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு முஸ்லிமை அமோக வெற்றி பெற வைத்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸ் அரசை எதிர்த்துப் பரப்புரை செய்து முஸ்லிம் வாக்குகள் மூலம் வெற்றி பெற்ற பின்பு அரசுடன் சேர்ந்து ஆட்சியமைத்ததை மக்கள் இலகுவில் மறந்து விட மாட்டார்கள். இதன் காரணமாகத் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கிடைக்க வேண்டிய கிழக்கு மாகாணத்தின் ஆட்சியதிகாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் தூக்கிக் கொடுத்த பெருமை முஸ்லிம் காங்கிரஸுக்குரியது என்பதையும் முஸ்லிம் மக்கள் மறக்கவில்லை.

அரசின் பங்காளியான இ.தொ.கா சேவல் சின்னத்தில் போட்டியிட்ட போதும் மக்கள் அவர்களை நிராகரித்து வருகின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

**எதிர்காலத்தில் தங்கள் பதவிகளுக்காகவும் அதிகாரங்களுக்காகவும் தங்கள் இனத்துக்கே துரோகம் செய்யும் தரகர்கள் நிராகரிக்கப்படுவார்கள். இதற்கான முன்னறிவிப்பே மேல் மாகாண சபைத் தேர்தலாகும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 09–15 , 2014
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

# உலகக் கிண்ணமும் விலை உயர்வும்

20/20 உலகக் கிண்ணத்தை இலங்கை வென்றுவிட்டது. இலங்கையின் விளையாட்டுத் துறைக்கு இதுவொரு நல்ல செய்திதான். ஆனால் சாதாரண மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கை வென்ற கணத்தில் அதைக் கொண்டாடினாலும் இதன் பின்னால் உள்ள ஆபத்துக்களை உணர்ந்துகொண்டதால் கவலையிலேயே இருக்கிறார்கள்.

இலங்கையில் ஆட்சிக்கு வருகின்ற எல்லா அரசுகளும் மக்களுக்கு எதிரான சில நடவடிக் கைகளை எடுக்க தருணம் பார்த்துக் காத்திருப் பதுண்டு. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மக்களின் கவனம் இன்னொரு திசை நோக்கி இழுபடும் போது அதனைப் பயன்படுத்தி தங்கள் திட்டத்தை செவ்வனே செய்துமுடிப்பதில் இலங்கை ஆட்சி யாளர்கள் கில்லாடிகள். அதிலும் இலங்கை ஆதிக்கம் செலுத்தும் கிரிக்கெட் போட்டிகளை மையமாகக் கொண்டே இத்தகைய திட்டங்கள் போடப்படுவதுண்டு.

ஜனாதிபதியாக சந்திரிகா பதவியில் இருந்த போது கிரிக்கெட் உலகில் கொடிகட்டிப் பறந்தவர் சனத்ஜெயசூரிய. இலங்கை ரசிகர்களுக்கு மிக வும் பிடித்தமான வீரர். ஆனால் அவர் ஒவ்வொரு முறையும் ஏதாவது சாதனையை நிகழ்த்தினால் இலங்கை மக்களின் அடிவயிறு கலங்கும். ஏனெனில் இந்தச் சாதனைச் செய்தி வெளிவந்த அன்றிரவே ஏதாவது ஒருபொருளின் விலை மலைபோல ஏறிவிடும். எனவே ஜெயசூரியாவின் ஓட்டவேகத் திற்கேற்ப எந்தப் பொருளின் விலை நாளைக்கு அதிகரிக்கப் போகிறதோ என்ற ஏக்கம் மக்களிடம் குடிகொண்டிருந்தது.

அதேபோன்ற நிலையே இப்போதும் ஏற்படுமோ என்று பெரும்பாலானோர் அஞ்சுகின்றனர். ஏனெனில் போருக்காக வாங்கிய கடனை திருப்பிக்கட்ட முடியாமல் அல்லாடிக்கொண்டிருக்கும் அரசுக்கு இருக்கும் ஒரே மார்க்கம் விலைவாசிகளை உயர்த்துவதுதான். ஆனால் எத்தனைமுறைதான் பொருளின் விலையை உயர்த்திக்கொண்டிருப் பதை மக்கள் பொறுத்துக்கொள்வார்கள். இதனால் அண்மைக்காலமாகப் பெரிதாக எந்தப் பொருளின் விலையும் உயரவில்லை. அதற்காக இலங்கை யின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையை அடைந்துவிட்டதாக அர்த்தம் கிடையாது. மாறாக தொடர்ச்சியான விலையேற்றங்கள் அரசின் மீதான அதிருப்தியை இன்னும் அதிகரிக்கச் செய்து தேர்தல் வெற்றியை பாதித்துவிடும். எனவே விலையேற்ற வேண்டிய கட்டாயம் இருந்தாலும் அதைத்தள்ளிவைக்கவேண்டிய நிர்ப்பந்தம் அர சுக்கு இருந்தது. எனவே மக்களுக்குப் பாதிப்பை உண்டு பண்ணும் நடவடிக்கைகளை அரங்கேற்ற அரசுக்கு வாய்ப்பான தருணம் ஒன்று தேவைப் பட்டது.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று இலங்கை அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற் றிவிட்டதால் நாடெங்கும் உற்சாக ரேகைகள் உற்பத்தியாகியுள்ளன. கிட்டத்தட்ட 18 வருடங் களாக இலங்கை மக்கள் எதிர்பார்த்திருந்த வெற்றி இப்போதுதான் சாத்தியமாகி இருக்கிறது. அத னால் அவர்கள் வெற்றியினால் உண்டான மகிழ்ச் சிக்கடலில் மூழ்கியிருக்கிறார்கள். இப்படி தென் னிலங்கையின் கவனம் உலகக் கிண்ண வெற்றி பற்றியும், வென்றவர்களை வரவேற்பது பற்றியும் திரும்பியிருக்கும் சமயத்தில் அரசு விலைவாசியை உயர்த்தக்கூடும் என்று பலரும் ஆருடம் கூறு கின்றனர். இந்த ஆருடத்தின் உண்மைத்தன்மை இன்னும் சில நாள்களில் வெளிப்பட்டுவிடும்.

# யமனுக்கே சவாலா?

பிரமன்



யமலோகம் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது. ஒருவருக்கும் வேலை ஓடவில்லை. சித்திரபுத்திரனாருக்கு வியர்த்து விறுவிறுத்து தலையெல்லாம் கிறுகிறுத்தது. அவருடைய வேலையில் இப்படியொரு தவறும் முன்னெப்போதும் நிகழ்ந்திருக்கவில்லை.

“எப்பிடி இது நடந்திருக்கும்? அதுக்கு ‘சான்ஸே’ இல்லையே” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கணனிக்கு முன்னால் போராடிக்கொண்டிருந்தார். அவர் பதிவேற்றியிருந்த எல்லாத் தரவுகளையும் ஒன்றுக்கு ஓராயிரம் முறை மீளாய்வு செய்துவிட்டார். ஊகூம்! பலன் எதுவும் இல்லை.

“என்ன சித்திரபுத்திரா? கண்டுபிடித்துவிட்டாயா?” என்று கர்ஜித்தபடியே யமதர்மன் எட்டிப்பார்த்தார். சித்திரபுத்திரருக்கு கைகால் வெடவெடத்தது.

“இல்லைபிரபு. என்சிற்றறிவுக்கும் இந்தக் கொம்பியூட்டரின் பேரறிவுக்கும் எட்டியவகையில் அந்தத் தவறு எப்பிடி நடந்தது எண்டு பிடிபடவேயில்லை.”

சித்திரபுத்திரரின் இந்தப் பதில் யமனுக்கு ஆத்திரத்தின் அளவை இன்னும் அதிகப்படுத்தியிருக்க வேண்டும். வார்த்தைகள் அறம்புறமாகப் புறப்பட்டன.

“காலம் முழுக்க கதிரையில சொகுசா குந்தியிருக்கத்தான் நீர் சரி. ஒருவேலை ஒழுங்காச் செய்யத்தெரியாது. அவங்கள் மனிசரா இருந்தாலும் எவ்வளவு கெட்டிக்காரர். எங்கேயோ இருந்தெல்லாம் தகவல் எடுத்து ‘கெஸட்’ பண்ணியும் விட்டுட்டாங்கள். நீர் என்னெண்டால் இன்னும் உந்தக் கொம்பியூட்டருக்கு முன்னால தவண்டுகொண்டு கிடக்கிறீர். சிலவேளை சிவன் என்னக் கூப்பிட்டு விளக்கம் கேட்டால் என்ன சொல்லுறது?” சொல்லிவிட்டு அரியணையில் யோசனையில் அமர்ந்துகொண்டார் யமன்.

அப்போது எமலோகத்தின் ஒரு மூலையில் கிற்றார் இசை முழங்க,‘கங்ணம்’ டான்ஸ் ஆடியபடியே பிரசன்னமாரார் நாரதர். வந்தவருக்கு என்றுமில்லாத புதினமாக வியர்வை ஆறாகப் பெருக சித்திரபுத்திரனார் வேலை செய்வதைக் காண ஆச்சரியமாக இருந்தது.

“ஹாய்! சித்ஸ் என்ன அப்பிடி தலைபோற வேலை?” என்று வழக்கம் போல கேட்டார். யமனை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு நாரதரை ஒரு மூலையாக அழைத்துச் சென்றார் சித்திரபுத்திரன்.

“மச்சான்! அதையேன் கேக்கிறாய். உவங்கள் சிறிலங்கன் கவர்மண்ட் கிட்டடியில ஒரு கெஸட் விட்டவங்கள். ‘வெளிநாட்டில இருந்து புலியளுக்கு வேலை செய்யிற 424 பேர் இலங்கைக்குள்ள கால் வைக்கக் கூடாது. வைச்சால் பிடிப்பம்’ எண்டு சொல்லி அவையின்ர பெயர், அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் விலாவாரியாப் போட்டவங்கள். அதாலதான் இப்ப என்ர தலை பறக்கப்போகுது” என்று அவர் அழுதுவிடும் தோரணையில் நாரதரின் காதில் குசுகுசுத்தார்.

“அதுக்கும் உம்மட தலைபோறதுக்கும் என்ன சம்பந்தம்?” திருப்பிக்கேட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாரதர்.

"அதையேன் கேக்கிறாய். அவங்கள் துலைவாங்கள் ஏற்கனவே செத்தது எண்டு யமலோகத்தில பதிவில உள்ள ஆக்களின்ட பெயரையெல்லாம் அந்த லிஸ்ரில போட்டிருக்கிறாங்கள். இப்ப அவங்கட உயிரை எடுக்காமல் நான் பொய்க்கணக்கு காட்டிப்போட்டன் எண்டும் உந்தாள் (யமனைக் காட்டி) துள்ளிக்குதிக்குது. இப்ப அவங்கள் உண்மையிலேயே செத்து இங்கதான் இருக்கிறாங்கள் எண்டத நான் நிரூபிக்க வேணும். இவ்வளவு கோடிக்கணக்கான ஆன்மாக்களுக்குள்ள அவங்கள நான் எப்பிடிக் கண்டுபிடிச்சு 'புறூவ்' பண்ணுவன்?"

நாரதருக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது. யமலோக கணக்குவழக்குகள் எல்லாம் கணனிமயப்படுத்தப்பட்டுவிட்டாலும் இறந்தவர்களின் ஆன்மாக்களை கண்டுபிடிக்கும் வசதி இருக்கவில்லை. ஏனென்றால் எல்லா ஆன்மாக்களும் இறப்பின் பின் அவரவர் பாவபுண்ணியத்துக்கேற்ற தண்டனையை அனுபவித்துவிட்டு ஒரே நிலையை அடைந்துவிடும். அவற்றுக்கு அடையாளம் கிடையாது. ஆகவே எந்த ஆன்மா எவருக்குரியது என்பதை யமன்கூட கண்டறிவது கஷ்டம்தான்.

"பாவம் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் சித்திரபுத்திரனாருக்கும் சிக்கலைக் குடுத்திட்டுதே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அப்பால் நகர்ந்தார் நாரதர். சித்திரபுத்திரன் மீண்டும் தேடினார். தேடிக்கொண்டே இருந்தார்.

***



# வேர்களை அறுக்கும் வேட்டை

**ஈழத்தில் கூட யாழ்ப்பாணக் கோட்டையும், ஆனையிறவும் இப்படித்தான் புலிகளிடம் வீழ்ந்தன. அதிலும் "இனிமேல் அமெரிக்க இராணுவம் வந்தால்கூட ஆனையிறவை அசைக்க முடியாது" என்று அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் புகழ்ந்து தள்ளிய பாதுகாப்பு வளையத்தை உடைத்து ஆனையிறவை புலிகள் கைப்பற்றியது இலங்கைப் படைகளுக்கான விநியோகத்தை முடக்கியதால்தான்.**

இந்த முறை ஏமாற்றியதைப் போல அடுத்த முறையும் ஜெனிவாவை ஏமாற்றுவது கடினம் என்று இலங்கை அரசுக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் அடுத்த கட்ட ஜெனிவாச் சமருக்கான முன்னாயத்தங்களில் இப்போதே அது இறங்கிவிட்டது. வழமையாகவே ஜெனிவாவில் மனித உரிமைகள் தொடர் ஆரம்பிப்பதற்கு சிலநாள்களுக்கு முன்னர்தான் அதற்குரிய பதில் திட்டங்களை இலங்கை வகுப்பதுண்டு. ஆனால் இதற்கு எதிர்மாறாக தமிழர் தரப்பு தன்னுடைய வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாகவே மேற்கொண்டு வந்திருக்கிறது. இங்கே தமிழர் தரப்பு என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் புலம்பெயர் தமிழர்கள்தான் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவருவதற்கும், அது வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கும் பின்னின்று உழைத்துவருகிறார்கள். தமிழர் சார் அமைப்புக்கள் தாயகத்தில் இருந்து போர்க்குற்றம் தொடர்பான ஆதாரங்களைப் பெறுதல், சாட்சியங்களை ஜெனிவாவுக்கு அழைத்தல், புலம் பெயர் நாடுகளில் இலங்கைக்கு எதிரான வெகுஜனப்போராட்டங்களை நடத்துதல் என்று தொடர் செயற்பாடுகளில் இறங்கியிருந்தார்கள். இதனால்தான் இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கருத்தியல் இன்னமும் அதே உயிர்ப்போடு உலகளாவிய ரீதியில் பேணப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவைத் தொடரில் வெல்லவேண்டுமானால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் செயற்பாடுகளை முடக்குவதே இலங்கைக்குள்ள ஒரே தெரிவு. அதாவது கிளைகளை வெட்டுவதை விட வேரை வேட்டையாடும் பொறிமுறை.

எதிரியை இலகுவாக வெல்வதற்கு அவர்களின் விநியோகத்தை இல்லாதொழிப்பதே அநேக படைகளும் கைக்கொள்ளும் பொதுவான தந்திரம். இதனால்தான் தங்களுடைய எதிரியின் முக்கியமான நிலைகளை முற்றுகையிட்டு அவர்களுக்கான எந்தவித உதவியையும் அணுகமுடியாதபடி செய்வதன் ஊடாக மண்டியிட வைத்த வரலாறுகள் நிறைய உண்டு. ஈழத்தில் கூட யாழ்ப்பாணக் கோட்டையும், ஆனையிறவும் இப்படித்தான் புலிகளிடம் வீழ்ந்தன. அதிலும் "இனிமேல் அமெரிக்க இராணுவம் வந்தால்கூட ஆனையிறவை அசைக்க முடியாது" என்று அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் புகழ்ந்து தள்ளிய பாதுகாப்பு வளையத்தை உடைத்து ஆனையிறவை புலிகள் கைப்பற்றியது இலங்கைப் படைகளுக்கான விநியோகத்தை முடக்கியதால்தான். இயக்கச்சியில் இருந்தே ஆனையிறவுக்கான நீர் விநியோகம் இடம்பெற்றுவந்தது. எனவே படைகள் எதிர்பாராத தருணத்தில் எதிர்பாராத களமுனையூடாக உட்புகுந்த புலிகள் இயக்கச்சியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தண்ணீரில்லாமல் ஆனையிறவுப் படைத்தளம் தத்தளித்து கடைசியில் வீழ்ந்தே விட்டது.


போரியலில் கைக்கொள்ளப்படும் இத்தகைய விநியோக மறிப்பு உத்தியை அரசியல் ரீதியிலும் இலங்கை பிரயோகிக்க முயன்று வருகிறது. இதனால்தான் ஜெனிவாச் சமருக்கான அடுத்த கட்ட நடவடிக்கைக்காக புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புக்களை இலங்கையில் தடைசெய்திருக்கிறது அரசு. இதன் மூலம் குறித்த தமிழ் அமைப்புக்களோடு இலங்கையில் உள்ள எவரும் தொடர்பு கொள்வதோ, அந்த அமைப்புக்களின் உதவியைப் பெறுவதோ பாரதூரமான குற்றமாகக் கருதப்படும். அவர்கள் கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வுக்கோ அல்லது விசாரணைகள் அற்ற நிலையில் சிறைக்கூடங்களுக்கோ தள்ளப்படக்கூடும். இந்தப் பயத்தில் எவரும் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களோடு உறவுகளைப் பேண விரும்பமாட்டார்கள். இதனால் எதிர்காலத்தில் தாயகத்தில் இருந்து போர்க்குற்றங்களைச் சேகரித்தல், பாதிப்புற்ற மக்களுக்கான உதவிகளைச் செய்தல் என்பவற்றை குறித்த அமைப்புக்கள் மேற்கொள்ள முடியாமல் போய்விடும்.

காலப்போக்கில் குறித்த அமைப்புக்களுக்கும் ஈழத்தில் உள்ள மக்களுக்குமிடையிலான உறவில் பெரும் இடைவெளி தோன்றி அவர்களுக்கிடையிலான தொடர்பாடல் பாலம் துண்டிக்கப்பட்டுவிடும். எனவே, இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் புதிய ஆதாரங்கள் எதனையும் இத்தகைய புலம் பெயர் அமைப்புக்களால் சர்வதேசத்திடம் சமர்ப்பிக்க முடியாத நிலை தோன்றும். அதன் பின்னர் "இலங்கையில் நாங்கள் சமாதானத்தை உண்டுபண்ணிவிட்டோம். எங்கு பார்த்தாலும் பாலாறும் தேனாறும்தான் ஓடுகின்றன. போர் என்றால் என்னவிலை என்று கேட்கும் அளவுக்கு மக்கள் அதை மறந்தே விட்டார்கள். இராணுவத்தினர் கூட சிவில் உடையில் மக்களின் எடுபிடிகளாக சமூக சேவை செய்துவருகிறார்கள் தவிர மக்களை ஒருபோதும் இம்சிப்பதில்லை" என்று வாய்க்கு வருகின்ற பொய்களையெல்லாம் வரிசையாக ஜெனிவா அமர்வுகளில் இலங்கை அடுக்கலாம். இந்த வாய்ப்பந்தல் எல்லாமே அப்பட்டமான கட்டுக்கதைகள் என்பதை நிரூபிக்க புலம் பெயர் அமைப்புக்களால் முடியாமல் போய்விடும். ஏனெனில் அவை படைகளின் அட்டூழியங்கள் பற்றியும் சமாதானத்தின் சீத்துவம் பற்றியும் தகவல்களைத் தாயகத்தில் இருந்த திரட்ட முடியாதல்லவா. எனவே அரசு சொல்வதை சர்வதேச நாடுகள் நம்பித்தான் ஆகவேண்டும். அல்லாது விடில் இலங்கைக்கு நேரடியாக வந்து நிலைமைகளை கண்டறிந்தால் மாத்திரமே உண்மை புரியும். இதனைக் கருத்தில் கொண்டுதான் புலம் பெயர் அமைப்புக்களையும் அவற்றை பின்னின்று இயக்கும் 424 தமிழர்களையும் இலங்கைக்குள் நுழையக்கூடாது என்று இலங்கை தடை போட்டிருக்கிறது. ஆனால் தடை செய்ய வேண்டிய அவசரத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானியால் பெரும் குழப்பம் தோன்றியுள்ளது. குறித்த வர்த்த மானியில் வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்டோர் பட்டியலில் இறந்து போன சிலரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இது தவிர அரச தரப்பின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர் ஒருவரின் பெயரும்கூட இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது) இதன் மூலம் இறந்தவர்களும் நாட்டுக்குள் வர தடை விதித்த ஒரே நாடு என்ற பெருமையை இலங்கை தட்டிச் சென்றிருக்கிறது. முன்னர் எல்லாம் ஏதாவது பிரச்சினைகள் எழும்போது பொதுவாக எல்லோரும் "இப்பிடி சீரழியிறதைவிட பேசாமல் செத்துப்போனால் நிம்மதியாக இருக்கும்" என்று புலம்புவார்கள். ஆனால் செத்துப்போனவர்களைக் கூட கால்வைக்கக் கூடாது என்று மிரட்டி உருட்டும் தேசத்தில் இந்தக் கூற்றுகள் எல்லாம் இனிமேல் எடுபடாது. செத்தாலும் இலங்கையில் நிம்மதியாக இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்



## ஈழத்தில் பெண்

– மகாலிங்கம் பத்மநாதன்
(பரந்தன்)

கற்றவர் கல்லார்
ஏழைகள் செல்வர்
உயர்ந்தவர் தாழ்ந்தவர்
எவரையும் விடாது
தமிழனாகப் பிறந்த
காரணத்தாலே
ஏவுகணைகள்
கூவிவந்து அழித்தன.

தந்தையை இழந்தவர்
தாயை இழந்தவர்
கணவரை இழந்தவர்
மனைவியை இழந்தவர்
மகனை மகளை
மட்டுமல்லாது
குடும்பமாகப் பலரும்
மாண்டு போயினர்

பசியால் துடித்த
பிள்ளைகளுக்கு- பால்
வாங்கச் சென்ற
எந்தன் கணவனை
குறிபார்த்துச் சுடும்
கொடூரன் ஒருவனின்
குண்டு ஒன்று
கொன்றே விட்டது

துடியாகத் துடித்தேன்
துவண்டு அழுதேன்
மயக்கம் தீர்ந்து
எழுந்த நானும்
மகளை மகனை
நிமிர்ந்து பார்த்தேன்
கணவர் கனவை
நினைவில் கொண்டேன்

பசியில் பிணியில்
பயத்திலிருந்து
பிள்ளைகளை நான்
காத்திட வேண்டும்
கல்விச்செல்வம்
வழங்கிட வேண்டும்
கைம்பெண் என்னைக்
காப்பவர் யாரோ?

தாயகத்தோரே!
புலம் பெயர்ந்தோரே!
விதியால் யானும்
விதவையானேன்
என்னைப் போல
பெண்கள்
எண்பதினாயிரம்
ஏதிலிகளாக
பரிதவிக்கின்றோம்
பாவியரானோம்

கணவனைஇழந்தவர்
பல வகை உண்டு
பிள்ளைகள் பெற்றவர்
பிள்ளைகள் பெறாதோர்
வயது முதிர்ந்தோர்
பதின்ம வயதினர்
சிலநாள் மட்டும்
வாழ்ந்து முடித்தோர்

எங்கும் மனித
உணர்வுகள் உண்டு
அண்ணல் நபியின்
கதைதனை அறிவீர்
காந்தி மகானும்
வேண்டுதல் செய்தார்
இன்னொருவாழ்வை
நினைப்பதும்
பிழையோ?

திருமணம் என்பது
வாணிபம் அல்ல
மறுமணம் செய்திட
மனமும் வேண்டும்
இளைஞர் தாமாக
முன்வர வேண்டும்
விதவைப் பெண்களும்
வாழ்ந்திட வேண்டும்

## பட்டினி வயிறு

குட்டினார்கள்
கன்னத்தில் அறைந்தார்கள்
ஏதேதோ
தூஷண வார்த்தையில்
பேசினார்கள்
நான் கோபப்படவில்லை
இருந்தும்
அவர்களுக்காக வியர்வை
சிந்தியிருக்கிறேன்
ஒருபிடி அரிசிக்காக

வருஷத்தில் ஒரு முறை
நடக்கும் எங்கள் ஊர்
இரண்டு கோயில் திருவிழாக்களில் தான்
எம்வயிறு
சாதுவாகக் கொஞ்சம் தலைநிமிரும்

அப்பாவும் இருந்தார்
அம்மாவும் இருந்தார்
முயற்சியும் இருந்தது என்னவோ
நாம் சாப்பிடும் அரிசியில்
எம் பெயர் இருக்கவில்லை

காலி இரப்பையோடு
பல கட்சிப் படிகள் ஏறி
இறங்கினேன்
வேலை தேடி
அவர்கள் நீ
எந்தக் கட்சிக் காரனென்று
கேட்டார்களே தவிர
நீயொரு வறியவனா ...?
என்று கேட்கவேயில்லை

சாம் ரமேஸ்குமார்,
மருதனார்மடம்





## வறுமை வாசலோரம்

காலம் பதில் சொல்லும்..
என்று..
காத்திருப்புக்கள்.....
இலவு காத்த கிளியைப் போல்!!!
நீள்கின்றது.....
நித்தமும் கேட்கும்.....
வறுமைப்பாட்டின் ஓலம்...!!!
இது
கனவாகவல்ல.....
நனவாக....
நம்
வாசலோரம்....
சப்பணமிட்டபடி

தமிழ்நிலா
கெருடயம்பதி

## முத்தம்

இருவரி இணைத்து
ஒரு மொழி பேசினேன்
அந்நியமானது
அவளது கன்னம்

கு. தவசீலன்
பளை

## இது தான் காதலா?

உன்னைச் சுமந்த போது
சுமைகள் கூட சுகங்கள் ஆனது
பாலை வனங்கள் எல்லாம்
பரிசுத்த புலங்கள் ஆனது
படுக்கை விரிப்புக்கள்
பஞ்சு மெத்தை ஆகின
கோயில் தெய்வங்கள் எல்லாம்
நீயாகத் தெரிந்தன
தெருக்கள் எல்லாம்- நம்
காதல் பேசின
கடற்கரை மணல் எல்லாம்-நம்
கால் தடம் சுமந்தது
மனை எல்லாம்- உன்
நினைவுகள் நிறைத்தன.
நினைவுகள் எல்லாம்
கனவுகள் ஆகின
இது தான் காதலா?

க.கீர்த்தி.
கண்டாவளை..



## மனமொத்த மகிழ்வு

கவிக்குயிலன்
சேனையூரான்

மனைவி அமைவதெல்லாம் .
சீதனம் பெறுவதிலே
மகிழ்ச்சி கிடைப்பதென்றால்-அது
மனமொத்த காதலாலே!

துணைவி கிடைப்தெல்லாம் கணவனின்
தூயஅன்பு வருடலாலே மாறாக
அணைக்கின்ற கையைவிட்டு
அடக்கி ஆள்கின்ற போதே
பிணக்கு துணையினை விலக்க நேரும்!

தாய்க்குப் பின் தாரமாகி அன்பை
தாய் போல சொரிபவள் தான் மனைவி
பேயாக மாறாமல் கணவன் -அவளை
பிரியமாக நடத்த வேண்டும்
தேய்கின்ற மெழுகுவர்த்தி -மனைவி
சேய்தனை ஈன்று விட்டால் அவள்
தாய்ப்பாசம் பதியின் பாசம் என்றும்
தலைமேலே தாங்கிக் கொள்வாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு தெரியுமா சிதம்பர இரகசியம்?

**இந்துக்கள் எல்லோருமே தரிசிக்க ஆசைப்படும் தலம் சிதம்பரம்தான். இங்குதான் ஒற்றைக்காலைத்தூக்கியபடி நடராஜவடிவத்தில் சிவனின் நடனக் கோலம் அமைந்துள்ளது. இதை விடவும் இங்கு சிதம்பர ரகசியம் என்ற விடயமும் முக்கியமானது. ஒவ்வொருவருக்கும் அவரவரின் வாழ்வியல் ரகசியத்தை இந்தச் சிதம்பர ரகசியம் வெளிப்படுத்துவதாக ஒரு ஐதீகம்.**

**இவற்றை விடவும் சிதம்பரத்தில் இருக்கும் அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல், மருத்துவ வியல் குறித்த பல்வேறு ஆச்சரியங்கள் புதைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அவற்றில் சில –**

1. இந்தக் கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூமத்திய ரேகையின் மிகச்சரியான மையைப் பகுதி என்று கூறப்படுகின்றது.

2.பஞ்சபூதக் கோயில்களில் ஆகாயத்தைக் குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றைக் குறிக்கும் காளஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயம் என்பன சரியாக ஒரே நேர்கோட்டில் அதாவது சரியாக 79 பாகை, 41 பாகை கிழக்கு நோக்கிய தீர்க்க ரேகையில் (LONGITUTE ) அமைந்துள்ளன. அதாவது இன்று கூகுள் செய்மதி வரைபடத்தின் உதவியுடன் நாம் வானத்தின் மேல் இருந்து பார்த்தால் இந்த ஆலயங்கள் மூன்றும் வெவ்வேறு தொலைவில் இருந்தாலும் ஒரே நேர்கோட்டில் இருப்பதைக் காணலாம். நவீன விஞ்ஞான உலகில் கூட அமைக்கக் கடினமான இந்தத் துல்லிய அமைவிடம் அன்றைக்கே கணிக்கப்பட்டது ஒரு பொறியியல்,புவியியல் மற்றும் வானவியியலின் உச்சகட்ட அதிசயம் தான்.



3. மனித உடலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலில் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களைக் குறிக்கின்றன.

4. ஆலயவிமானத்தின் மேல் இருக்கும் பொற்கூரை 21,600 தங்கத்தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது.இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21,600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கின்றது.

5.இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளை குறிக்கின்றது.இதில் கண்ணுக்குத் தெரியாத உடலின் பல பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும்.

6.திருமந்திரத்தில் திருமூலர்

"மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே"

என்று கூறுகிறார். அதாவது மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே 'அவரின் நடனம் என்ற பொருளைக் குறிகின்றது.

7.பொன்னம்பலம் சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இது நம் உடலில் இதயத்தைக் குறிப்பதாகும். இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும். இந்தப் படிகளை பஞ்சாட்சர படி என்று அழைக்கப்படுகின்றது. அதாவது சி,வா,ய,ந,ம என்ற ஐந்து எழுத்துகளுமே அவை. கனகசபை பிற கோயில்களில் இருப்பதைப் போன்று நேரான வழியாக இல்லாமல் பக்கவாட்டில் வருகின்றது. இந்தக் கனகசபையைத் தாங்க 4 தூண்கள் உள்ளன.இவை 4 வேதங்களையும் குறிக்கின்றன.

8.பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன. இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன. இந்த 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளைக் கொண்டுள்ளன. இவை 64 கலைகளை குறிக்கின்றன. இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள்(CROSS BEAMS) , மனித உடலில் ஓடும் ரத்த நாளங்களைக் குறிக்கின்றன.

9.பொற் கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை சுட்டுகின்றன.அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும்,அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றன.

10.சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவம் என்ற கோலம் அண்டங்களின் அசைவைக் குறிக்கும் நடனம் (COSmic dance) என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் புகழப்படுகின்றது.

# பேஸ்புக் பிரச்சினைகளில் இருந்து விடுபட...

நம் வாழ்வின் ஒருங்கிணைந்த பகுதியாக இணைய வழி சமூக வலைத்தளங்கள் மாறி விட்டன. பேஸ்புக்கானது கிட்டத்தட்ட ஒரு பில்லியன் பேருக்கும் மேலாகப் பயன்படுத்தப்படும் வலைத்தளமாக உள்ளது. உலகம் முழுவதும் பேஸ்புக் வழியாக தொடர்பு கொள்வது மிகவும் எளிய விஷயமாக இருப்பதே இதன் காரணமாகும்.

இது நம்மை அனைவருடனும் தொடர்பில் இருக்க வைக்கிறது. சமூக வலைத்தளங்கள் உதவிகரமாக இருந்தாலும், தொந்தரவுகள் மற்றும் பிரச்சனைகளை சந்திக்காமல் இருக்க அவற்றை கவனத்துடன் கையாள வேண்டும்.

இன்னொருவர் உங்களைப் பற்றி தெரிந்து கொள்ளவும், உங்களுடைய விபரங்களை வைத்தே உங்களைப் பற்றி கணிக்கவும் பேஸ்புக் வகை செய்து விடும். நீங்கள் ஒரு உறவில் உறுதியாக இருக்கும் வேளைகளில் பேஸ்புக்கில் சில அடிப்படையான தவறுகள் நடப்பதைத் தவிர்க்க வேண்டியது அவசியம்.

உங்கள் பெண் நண்பரின் விபரங்களை வேவு பார்த்தல், அனுமதியின்றி ஊடுருவுதல், அவருக்குத் தெரியாமலேயே அவருடைய நண்பர்களுடன் நட்புப் பாராட்டுவது போன்ற செயல்களை இந்தத் தவறுகளில் சிலவாக குறிப்பிட முடியும். பேஸ்புக்கில் நீங்கள் செய்யும் செயல்கள், உங்கள் துணைவருக்கு எதிராகத் திரும்பாத வகையில் செயற்பட வேண்டும்.

**உங்கள் துணைவர் எவ்வளவு தான் உங்களுக்கு நெருக்கமானவராக இருந்தாலும், அவருடைய சுய விபரங்களை அவருக்குத் தெரியாமல் ஊடுருவிப் பார்க்க உங்களுக்கு உரிமை இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.**

சில நேரங்களில், அவருடன் நெருக்கமாக இருக்கும் படங்களை முகநூலில் அவருக்குத் தெரியாமல் வெளியிட்டால் உறவில் விரிசல் ஏற்பட்டு, மீண்டும் இணைய வழியில்லாமல் போய் விடும். உங்கள் துணையின் விபரங்களை எப்பொழுதும் வேவு பார்க்க வேண்டாம். இது அவளுடைய கற்பனை உலகின் தனிமையைப் பாதித்து விடுகிறது.

தங்களுடைய திறமையை நிரூபிக்கவோ அல்லது வேறு ஏதாவது நோக்கத்துடனோ சில பேர் விளையாட்டுத் தனமாக செய்யும் அடிப்படையான தவறுகளில் ஒன்றாக இது உள்ளது.

உங்கள் துணைவர் எவ்வளவு தான் உங்களுக்கு நெருக்கமானவராக இருந்தாலும், அவருடைய சுய விபரங்களை அவருக்குத் தெரியாமல் ஊடுருவிப் பார்க்க உங்களுக்கு உரிமை இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கும் அவளுக்கும் தெரிந்த நண்பர்களுக்கு 'நட்பு கோரிக்கைகள்' அனுப்புவது நல்லது தான்.

ஆனால், அதே விஷயத்தை அவளுக்கு மட்டுமே தெரிந்து, உங்களுக்குத் தெரியாத அழகிய பெண்ணொருத்திக்கு அனுப்பினால், அது கொண்டு வரும் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு நீங்கள் தள்ளப்படுவீர்கள்.

நீங்கள் பேஸ்புக்கை தொடர்ந்து பயன்படுத்துபவராக இருந்து, அவளுடைய 'அப்டேட்ஸ்'களை கவனிக்காமலும், 'லைக்' போடாமலும் இருந்தால் கூட பிரச்சினைகளாக உருவெடுக்கும். நீங்கள் தொடர்பில் இருக்கும் போது, அதுவும் பேஸ்புக் வழியாகவும் தொடர்பில் இருக்கும் போது, நீங்கள் பதிவிடும் எதிர்வாதம் மிக்க மற்றும் கண்ணியமில்லாத பதிவுகளை சற்றே கவனத்துடன் பரிசீலனை செய்யுங்கள்.

பலருக்கும் தெரியக் கூடிய இது போன்ற பதிவுகளால், உங்கள் துணைவியின் நண்பர்களும் கூட கேலி செய்து மோசமான நிலைக்கு அவளைத் தள்ளி விடுவார்கள்.

உங்கள் காதலியுடன் நீங்கள் தனிமையில் செய்பவை அனைத்தும் தனிமையாகவே இருக்க வேண்டும்.

உங்கள் நண்பர்களிடம் பிரபல்யம் பெற வேண்டும் என்ற நோக்கில், நெருக்கமான படங்களை பதிவேற்றம் செய்வதை அறவே நினைத்தும் கூட பார்க்காதீர்கள். ஏனெனில், அது உங்கள் காதலியின் தனிமை மற்றும் உணர்வுகளை பாதிக்கும்.

நீங்கள் அவளுடைய பதிவுகளுக்கு அவ்வப்போது உங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் நீங்கள் அவளைக் கவனிக்கிறீர்கள் என்பது தெரியும். எனினும், எதிர்மறையான கருத்துக்கள் மற்றும் அவரை வெளிப்படையாக விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 7



சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

### வேப்பமரத்தடியில் பாதுகை தரிசனம்

பாயி கிருஷ்ணாஜி அலிபாகர் என்பவர் அக்கல்கோட் மஹாராஜீன் அடியவர். இவர் அக்கல்கோட் மஹாராஜீன் உருவப்படத்தை வழிபட்டார். அவர் ஒருமுறை அக்கல் கோட்டிற்கு (ஷோலாப்பூர் ஜில்லா) சென்று மஹாராஜீன் பாதுகைகளைத் (பாத நமஸ்காரம்) தரிசனம் செய்துகொண்டு தன்னுடைய வழிபாட்டைச் செலுத்திவர நினைத்தார். அவர் அங்கு செல்வதற்கு முன் கனவில் ஒரு காட்சியைக் கண்டார். அக்காட்சியில் அக்கல் கோட் மஹராஜ் தோன்றி அவரிடம் 'இப்போது சீரடியே எனது இருப்பிடம். அங்கு சென்று உனது வழிபாடுகளைச் செலுத்து' என்றார். எனவே அவர் தனது திட்டத்தை மாற்றிக்கொண்டு சீரடிக்கு வந்து பாபாவை வழிபட்டு ஆறுமாதங்கள் அங்கு தங்கி மகிழ்ச்சியடைந்தார். இந்தக்காலப்பகுதியில் பாதுகைகளைத் தயாரித்து புனித தினத்தன்று அவற்றை உரிய சடங்கு சம்பிரதாயங்களுடன் வேப்ப மரத்தடியில் பிரதிஷ்டை செய்தார். அதன் வழிபாட்டுக்கு ஓர் அந்தணர் நியமிக்கப்பட்டார். அதனுடைய நிர்வாகம் ஸகுண், மேரு நாயக் என்ற அடியவரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

### வாழ்க்கையில் மாற்றம்

சரடியில் மொஹத்தின் தாம்போலி என்னும்பெயருடைய ஓர் மல்யுத்தச் சண்டைக்காரன் இருந்தான். பாபாவுக்கும் அவனுக்கும் சில விடயங்களில் உடன்பாடு ஏற்படவில்லை. இருவரும் மல்யுத்தம் செய்யத் தொடங்கினர். இதில் பாபா, தோற்கடிக்கப்பட்டார். அதிலிருந்து பாபா தம்முடைய உடையையும், வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்துக் கொண்டார். கஃப்னி உடை அணிந்தார். லங்கோடு (இடுப்புப் பட்டை) அணிந்து தன் தலையை ஓர் துண்டுத் துணியால் மூடினார். தம்முடைய ஆசனத்திற்கு ஒரு சாக்குத் துணியையும் படுக்கைக்கு ஒரு சாக்குத் துணியையுமே உபயோகித்தார். கிழிந்த மடிந்துபோன கந்தை உடைகளை அணிவதிலேயே திருப்தியடைந்தார். அவர் எப்போதும் 'ஏழ்மை அரசுரிமையை விடநன்று, இறைமையை விட மிக மிக நன்று, கடவுள் ஏழைகளின் நிரந்தர நண்பனானார்' என்று கூறிக் கொண்டிருந்தார்.

கங்காகீர் என்பவரும் மல்யுத்தம் செய்வதில் மிக்க விருப்பமுள்ளவர். அவர் ஒருமுறை மல்யுத்தம் செய்யும்போது ஒரு ஆசையற்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. அப்போது ஓர் சித்தர் அவரிடம் அவரது உடம்பைத் துறந்து கடவுளுடன் நிரந்தரமாக ஈடுபடும்படி கூறும் குரல் கேட்டது. எனவே அவரும் சம்சாரத்தைத் துறந்து கடவுளை நோக்கித் திரும்பினார். புண்தாம்பேக்கு அருகிலுள்ள ஓர் ஆற்றின் கரையில் அவர் ஒரு மடத்தை ஸ்தாபித்தார். சாயிபாபா மக்களுடன் வீண்பேச்சுக்களில் ஈடுபடுவதில்லை. அவரை யாராவது கேள்விகேட்ட போது மட்டுமே அதற்குப் பதில் கூறினார். பகற்பொழுதில் எப்போதும் வேப்பமரத்தடியிலேயே உட்கார்ந்திருந்தார். சில சமயங்களில் கிராமஎல்லையிலுள்ள வாய்க்காலுக்கு அருகிலுள்ள ஓர் ஆலய மரக்கிளையின் நிழலில் அமர்ந்திருந்தார். மாலை நேரங்களில் குறிக்கோள் இன்றி நடப்பது வழக்கம். சில நேரங்களில் நிம்காங்வ் போவார்.

### பாபாவை நோக்கி மக்கள் கூட்டம்

பாபா ஸாஹேப் என்பவர் சீரடிபாபாவின் சிறந்த பக்தர். இவரின் தம்பியான நானா ஸாஹேப்புக்கு இரண்டாவது திருமணம் முடித்தும் குழந்தைகள் ஏதுமில்லை. பாபா ஸாஹேப், நானாஸாஹேப்பை சீரடிபாபாவின் தரிசனத்திற்காக அனுப்பினார். சில காலத்திற்குப் பிறகு பாபாவின் அருளால் நானாஸாஹேப் ஒரு புதல்வனை அடைந்தார். அதிலிருந்து சாயிபாபாவைப் பார்க்க மக்கள் கூட்டமாக திரண்டு வந்தனர். பாபா பகற்பொழுதில் தமது அடியவர்களால் சூழப்பட்டிருந்தார். இரவில் உதிர்ந்து கொட்டும் ஒரு பழைய மசூதியில் படுத்தார். பாபாவிடம் இந்த நேரத்தில் ஹீக்கா, புகையிலை, ஒரு குவளை, நீண்ட கஃப்னி, தலையைச் சுற்றி ஒரு துண்டுத் துணி, ஒரு ஸட்கா (குச்சி) முதலிய சிறுசிறு உடைமைகள் இருந்தன. இவைகளை எப்போதும் வைத்திருந்தார். தலையிலுள்ள அச்சிறுதுணி, நன்கு முறுக்கப்பட்ட முடியைப் போல் இடது காதிலிருந்து முதுகில் தொங்கியது. இது பல வாரங்களாகத் துவைக்கப்படாதது. அவர் எவ்வித காலணியும் அணிவதில்லை. ஒரே சாக்குத் துணித் துண்டே அவரின் ஆசனமாகும். ஒரு கௌபீனத்தை அவர் அணிந்திருந்தார். குளிரை விரட்ட எப்போதும் துனியின் (புனித நெருப்பின்) முன்னால் இடது கையை மரக்கட்டைப் பிடியின் மீது வைத்தவாறு தெற்கு நோக்கி அமர்ந்திருந்தார். அந்தத் துனியில் அஹங்காரம், ஆசைகள், எல்லா எண்ணங்கள் முதலியவற்றைக் காணிக்கையாகப் போட்டார். எப்போதும், கடவுளே ஒரே உரிமையாளர் என்று கூறினார்.

1912இற்குப் பிறகு ஒரு மாற்றம் நிகழ்ந்தது. பழைய மசூதி பழுது பார்க்கப்பட்டு ஒரு தாழ்வாரம் எழுப்பப்பட்டது. இம் மசூதிக்கு பாபா தங்க வருவதற்கு நெடுங்காலத்துக்கு முன் தகியா என்ற இடத்தில் வசித்து வந்தார். அங்கே தான் பாபா கால்களில் சலங்கைகட்டி அழகாக நடனம் செய்துகொண்டு பாடினார்.

### தண்ணீரால் விளக்கெரித்தல்

சாயிபாபாவுக்கு விளக்குகள் என்றால் அதிக விருப்பம். அவர் கடைக்காரரிடமிருந்து எண்ணெய் வாங்கி மசூதியிலும் கோயிலிலும் இரவு முழுவதும்விளக்குகளை எரிய விடுவது வழக்கம். இது சில நாளகள் நடைபெற்று வந்தது. பின்பு எண்ணெயை இலவசமாக அளித்து வந்த வணிகர்கள் எல்லோரும ஒன்று கூடி இனிமேல் எண்ணெய் கொடுப்பதில்லை என முடிவு செய்தனர். வழக்கம்போல பாபா கடைக்காரர்களிடம் எண் ணெய் கேட்கப்போனபோது அவர்கள் எல்லோரும் தீர்மான மாக எண்ணெய் இல்லை எனச் சொல்லிவிட்டார்கள். இதைக் கேட்டு குழப்பமடையாத பாபா மசூதிக்குத் திரும்பி வந்து காய்ந்த திரிகளை விளக்குகளில் இட்டார். வணிகர்கள் மசூதிக்கு திரும்பி வந்து என்ன நடக்கிறது என்பதை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். பாபா சில துளிகள் மட்டுமே எண்ணெய் இருந்த தகரக் குவளையை எடுத்தார். தண்ணீரை அதில் ஊற்றிக் குடித்தார். இவ்விதமாக அதை நிவேதனம் செய்த பிறகு தகர குவளையில் தண்ணீரை மறுபடியும் எடுத்து எல்லா விளக்குகளிலும் அதனையே நிரப்பிக் கொளுத்தினர். வணிகர்களுக்கு ஆச்சரியத்தையும் பயத்தையும் விளைவிக்கும் படியாக விளக்குகள் எரியத் தொடங்கின. இரவு முழுவதும் எரிந்து கொண்டிருந்தன. வணிகர்கள் தங்கள் செய்கைக்கு மனம் வருந்தி பாபாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். பாபா அவர்களை மன்னித்து எதிர்காலத்தில் அதிக உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி கூறினார். (ஞானத்தை இன்னும் தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 615

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | 9 | ■ | 10 | |
| | ■ | 11 | | | 12 | | ■ |
| 13 | 14 | | | ■ | | ■ | 15 |
| ■ | 16 | | ■ | 17 | | 18 | |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |
| 24 | | ■ | 25 | | | | |

**மேலிருந்து கீழ்**

1. காதில மாட்டுவது.
2. விதம்.
3. பழைய சமயக் கதைகள், மதங்களுடன் தொடர்புடையது.
5. இரண்டாவதற்கும் முந்தியது .
6. கொத்துக்கள் , சீப்புக்கள் சேர்ந்து வருவது.
9. ரஷ்யாவை ஆண்ட மன்னர் இனத்தவர்.
11. நுழைதல்.
12. தொடர்பாடலில் முக்கிய இடத்தைப் பெற்ற முன்னைய ஒரு முறைமை.
14. அடுத்தவருக்கு தெரியாமல் பேணப்படுவது.
15. அரசர்.
17. நீர் நிலைக்கு எல்லையில் கட்டுவது.
18. கூறுக.
19. மண்டி.
20. ஒரு பறக்கும் பூச்சி வகை.
23. ஒரே அளவான.

**இடமிருந்து வலம்**

1. எச்சரிக்கை நிறம்.
2. உயர்ந்து வளரும் ஒரு மரம்.
7. அதிகம்.
8. அரசர்.
10. சிரசு.
11. கலவி.
13. கோள்.
16. மண்ணுக்கு முந்தியது.
17. முதல்வன்.
19. நசி.
20. உதவி(யாளன்).
21. பாரமான.
22. நித்திரை.
23. முழு.
24. குத்துவது ,இப்படி.
25. பாரதத்தில் பீஷ்மருக்கு இப்படி ஒரு சிறப்பு .

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 615

சொற்சிலம்பம் போட்டி 615ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் மற்றும் மே07ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 613 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.குங்குமம், 6. துவர்ப்பு, 3. மத, 4. திம்பு, 5.புரட்டு, 8. விடு, 10.மறு, 12.கதர், 14. புத்தி, 17.தருமர், 18.அம்புலி,19.முரண்,21.ஆப்பு,22.பாபா,23.திட

**இடமிருந்து வலம்**

1.குத்துமதிப்பு,6.வதம், 7.ரவி, 9.குமர், 11.புகட்டு, 13.மறுப்பு, 15. தடு, 16.புத்தர்,20.திரு, 21.ஆம், 22.பாரதி, 24.மதிப்பு, 25.பாண்டவர், 26. புலி,

### போட்டி இல. 612 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | டினேஸ்குமார் தேவதாஸ், முருங்கன்பிட்டி, முருங்கன். |
| 2ஆம் பரிசு | G.Z.அம்ஜடீன், 42,அத்கம் நிவாஸ்,எலபடகம, பன்னலை. |
| 3ஆம் பரிசு | செல்வி .ச.இந்திரா , இல-15 பகத்தல வீதி, கொள்ளுப்பிட்டி. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) மதன் வர்ஷனா,
இல;-43/31,திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு.

(2) வி . செல்வநாயகம்,
சிவன்கோவில் வீதி, புத்தூர்.

(3) கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

(4) வ.ஆ. அதிருபசிங்கம்.
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(5) வி. யிந்துசா ,
1ஆம் வட்டாரம்,முள்ளியவளை.

(6) (R)மஞ்சுளா, ,
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி

(7) ஏ.ஜெ. றெக்ஸி,
இல;-20, ஹேன்முல்லை,கொச்சிக்கடை.

(8) M.J.பெர்ணான்டோ,
இல;-30/3, சென்.லூசியஸ் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

(9)இ.அர்த்தனா ,
உதயபுரம், பெரிய கல்லாறு, கல்லாறு.

(10)அன்ரனி பாத்திமா,
இல;199,01/02, நாரன்வலா, கம்பஹா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலா? காமமா?



கொற்றவை

. மனம் மூளையை மட்டும் இடமாகக் கொண்டிருக்கவில்லை, அது உடலெங்கும் முடிவில்லாத நாளமில்லா சுரப்பிகள், நொதியங்கள் கொண்ட குழுவுடன் பயணிக்கிறது. இதயத்தை அறுவை சிகிச்சை செய்துப் பார்த்தால் காதல் எங்கிருக்கிறது என்பதற்கான தடயம் ஏதும் இருப்பதில்லை என்றும் அக்கர்மென் அடித்துக் கூறுகிறார்.

காதலில் எழுவதும் மனவெழுச்சிதான், காமத்தில் ஏற்படுவதும் \ ÷ Øk¿ ñE›V| .ÖËI ñÄD (Orgasm) சிலருக்கு பிடித்த உணவை சாப்பிட்டவுடன் ஏற்படுகிறது, சிலருக்கு பிடித்த இசையைக் கேட்டவுடன் ஏற்படுகிறது. தொலைபேசியில் எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பதில் என்று பல்வேறு நிலையில் உச்சத்தை ஒருவர் அடையக்கூடும். இவையெல்லாம் புறச்சூழலின் உதவியோடு ஒரு உடலில் ஏற்படும் மனவெழுச்சிகளே. இவற்றை யெல்லாம் ஆபாசம் என்று கருதாத சமூகம் உடலுறவு கொள்ளும்பொழுது அங்கு இரு உடல்கள் உறவு கொள்வதை ஆபாசம் என்கிறது.

சுரண்டல்வாத அதிகார மையமாக உருவான மதம் எனும் நிறுவனம் சதா சர்வ காலமும் காமத்தைப் புனிதக் கேடு என்கிறது. அந்த நிறுவனமானது முதலாளி வர்க்கத்துக்கும், (முன்னர் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கு) அரசுக்கும், மக்களுக்கும் இணக்கம் காண முடியாத

ஒரு எச்சைத் தொடர்

ஏற்பாடுகளை செவ்வனே செய்கிறது. இந்தமூன்று அதிகார வர்க்கத்தினருக்கும் உழைப்பதற்கும், விசுவாசத்துக்கும் மனித உடல் தேவைப்படுகிறது. அது அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை மட்டுமே அவர்கள் அதிகார வர்க்கமாக இருக்க முடியும் என்பதை அறிந்து வைத்திருக்கின்றனர். அதை உழைக்கும் மக்கள் அறிந்து கொள்ள முடியாத வகையில் அவர்கள் அறிவு நிலைகள் மழுங்கடிக்கப்படுகின்றது.

எதுவும் பலிக்கவில்லையென்றால் துறவு எனும் ஆயுதத்தைக் கையில் எடுக்கின்றனர். துறவை புனிதமாக எவ்வளவு பேசினாலும், அத்தகைய துறவை மேற்கொள்ளும் உடல் என்பது உடலுறவிலிருந்துதான் பிறந்தது என்பதை மறுக்க முடியுமா. குழந்தையாக இருக்கும் போது ஆராதிக்கப்படும் உடலானது, பருவ வயதெட்டியவுடன், பொருள் ஈட்டும் வயது வந்தவுடன் பல்முனை தாக்குதல்களுக்கு உள்ளாகிறது. அந்த உடலைக் குறிவைத்து பலரும் தங்களது கருத்தாக்க அம்புகளைத் தொடுக்கின்றனர். ஒவ்வொரு உடலும் சமூக உற்பத்தித் தேவையின் மூலதனம் என்பதே இதற்கு காரணம்.


(இன்னும் பேசுவோம்)

# அர்த்தமுள்ள முத்தங்கள்

### பிரிய மனமில்லையே

மென்மையான முத்தத்துக்கு எதிர்மாறான வகையும் உண்டு. அது உதடும் உதடும் வன்முறையோடு மோதிக்கொள்ளல். இதன்போது ஒருவரின் உதட்டை மற்றவர் விழுங்கிவிடுவது போன்ற ஆவேசத்தோடு காதலர்கள் உதடுகள் வழியே இணைந்து கொள்வார்கள். அதிகமாக மேற்குலத்தவர்கள் அடிக்கடி இந்த வித்தையை இடம், பொருள், ஏவல் எதுவுமே பார்க்காமல் நினைப்பு வரும் போதெல்லாம் செய்யத்தொடங்கிவிடுவார்கள். "உன்னை விட்டு ஒரு கணமும் மனதால் கூட பிரியமாட்டேன்" என்ற நம்பிக்கையை தன் துணையிடம் விதைக்கவே இந்த முரட்டு முத்தம். அதிலும் குறிப்பாக போர்க்களத்துக்கு செல்லும் வீரனுக்கோ அல்லது வெளியூருக்கு செல்லும் துணைக்கோ அவர்களின் காதலர் இப்படி இறுக்கி அணைத்து உதட்டை பிரிய விடாமல் முத்தம் கொடுப்பது வழமை. அந்த முத்தத்தின் இனிமையோடே அடுத்த முத்தம் பெறும் வரை காதலர்கள் காலத்தை சபித்தபடி காத்திருப்பார்கள்.

### காதலா? கனவான் தனமா?



மென்மைக்கும் வன்மைக்கும் இடைப்பட்டதாக உதட்டு முத்தத்தில் மூன்றாவது வகையும் உண்டு. அது கொஞ்சம் சிக்கலானது. காதலர்கள் இருவரும் காதல் உணர்ச்சியின் உச்சத்தில் இருந்தாலும் அதை முத்தம் வழியே இயல்பாக வெளிப்படுத்த முடியாதபடி சூழல் அவர்களைத் தடுத்தபடியிருக்கும். அநேகமாக தெரிந்தவர்களின் பிரசன்னத்தாலேயோ, அல்லது காதலர்கள் இருவரும் மன நெருக்கடிகளாலோ சூழப்பட்டிருப்பார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் காதலர்களின் முத்தமிட எண்ணினாலும் சுற்றி உள்ளவர்கள் என்ன நினைப்பார்களோ, அல்லது மன நெருக்கடியில் உள்ள தன் காதல் துணை என்ன நினைப்பாரோ என்ற சிக்கலால் இத்தகைய அழுத்தமும் . மேலோட்டமும் இல்லாத நடுத்தர வகையான முத்தமிடலில் இறங்குவார்கள். இந்த இரண்டுங்கெட்டான் முத்தம் நிலையானது அல்ல. அது துணையின் மனநிலையை முதல் ஸ்பரிசத்திலேயே கண்டுபிடித்துவிடும். அதனால் அடுத்த கட்டத்துக்கு நிலைமாறிவிடும்.

தன் துணையும் அதேபோன்ற காதல் உணர்வோடு இருப்பதை உணர்ந்தால் அழுத்தமான முத்தமாக மாறும். அவ்வாறு இல்லாமல் வேண்டாவெறுப்பாக அந்த முத்ததை துணை ஏற்றுக் கொண்டால் மென்மையான பட்டும் படாத முத்தமாக அமையும். காலமும் நேரமும் சரிவரும் போது நாம் இணைந்தே தீருவோம் என்பதே இவ்வாறான கனவான் தனத்துக்கும் காதலுக்கும் இடைப்பட்ட நடுத்தர முத்தங்கள் சொல்லும் செய்தியாக இருக்கும்.

# காதல் பேசுவோம்

எப்போதும் உங்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளவே உங்கள் காதலி துடிப்பாள். எனவே தொலைபேசியிலும் அப்படியான உங்கள் ஆறுதல் வார்த்தைகளைப் பெற சின்னச் சின்ன பொய்களை உங்கள் பிரியத்துக்குரியவள் சொன்னால் அதையெல்லாம் பொய் என்று தெரிந்தாலும் காட்டிக்கொள்ளக்கூடாது.


உதாரணமாக உங்கள் காதலிக்கும் உங்களுக்குமிடையே சின்னச் சண்டை. இருவரும் அன்றைக்கு முழுதும் ஒரு எஸ்.எம்.எஸ் கூட அனுப்பாமல் காதல் உபவாசம் இருக்கிறீர்கள். அப்போது காதலி தன் உடையை 'அயர்ன்' பண்ணிக்கொண்டிருக்கும் போது எதிர்பாராதவிதமாக அது கையில் சுட்டு சின்னதாகத் தழும்பும் ஏற்பட்டு விடுகிறது. இந்த விஷயத்தைக் கொஞ்சம் காதல் சுவையூட்டி, "நீ என்னோடு கதைக்காததால் தான் இப்படி எனக்கு நானே சுட்டுக் கொண்டேன்" என்று காதலி கண்ணீரோடு போனில் உங்களுக்கு சொல்வாள். காதலி மீது துரும்பு பட்டாலே பொறுத்துக் கொள்ளமுடியாத உங்களால் நெருப்பே பட்டுவிட்டால் தாங்கிக் கொள்ளமுடியுமா? உடனேயே தீப்பற்றிய மெழுகாக உருகி, வழிந்து, கண்ணீர் மல்கி நொடிக்கொரு தடவையாவது அவளின் உடல்நலம் பற்றி விசாரிக்காவிட்டால் உங்களுக்கு தூக்கமே வராது.

அத்தோடு உங்களுக்கு தெரிந்தவர்கள்,அறிந்தவர்கள் எல்லோரிடம் "தீக்காயத்துக்கு என்ன செய்தால் மாறும்?" என்று விசாரித்து அதையெல்லாம் கிரிக்கெட் நேரலை வர்ணனைபோல ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள். ஏறக்குறைய அந்தக்காயத்துக்கு உங்களுக்கு மருந்து கட்டாதது ஒன்றுதான் குறையாக இருக்கும்.மற்றும்படி அந்தக்காயத்தின் வலியென்னவோ உங்களுக்குத்தான்.

இப்படியெல்லாம் பதைத்து துடித்து இருக்கையில் அடுத்த நாள் உங்கள் காதலி 'அயர்ன்' பண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் அந்தக்காயம் பட்டதென்ற உண்மை உங்களுக்கு தெரியவருகிறது. அப்போது "பார்த்தியா? என்னோட கதைக்காததால தான் கையில சுட்டதெண்டு பொய் சொல்லிப்போட்டாய்" என்று வானத்துக்கும் பூமிக்கும் எகிறிப்பாய்ந்தால், உங்கள் காதல் பயிருக்கும் அதனால் ஏகப்பட்ட சேதங்கள் வந்துவிடலாம்.

ஆகவே உண்மை உங்களுக்கு தெரியவந்தாலும், அவள் சொன்ன பொய்தான் உண்மையென்று இன்னமும் நம்புவது போல இருங்கள். ஒன்றும் குறைந்துவிடப்போவதில்லை. சின்னதாக அவள் சொன்ன பொய் தன் மீதான உங்கள் காதலை அதிகரிக்கச் செய்வதற்குத்தானே. ஆகவே அவள் நினைத்தபடி கணக்கற்ற காதல் கடலுக்குள் அவளை மூழ்கடித்து, இனிமேலும் உங்கள் இருவருக்குமிடையிலான செல்லச்சண்டைகள் கூட வராதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

(அடுத்த வாரமும் உரையாடுவோம்)




# ஈரடியில் இதயங்கள் பற்றி...! 4

— சரவணா கார்த்திகேயன்

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.
(குறள் 1088)

உலகம் என் காலடியில்
மொத்தமும் ரத்து செய்து
அரைப்பிறை ஒளிர்நுதல்
கண்டு மண்டியிடுகிறேன்.

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணியெவனோ ஏதில தந்து.
(குறள் 1089)

தீராத வரதட்சணையாக
வாங்க வேண்டும் அவள்
24 கரட் அச்சத்தையும்
37 கிராம் நாணத்தையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கேரளாவின் புதிய வரவு

'தாவணிக்காற்று' எனும் படத்தின் மூலம் திரையுலகில் காலடி பதித்திருக்கிறார் ஆராத்யா. கேராளாவில் இருந்து தமிழுக்கு படையெடுத்த நடிகைகள் பட்டியலில் தற்போதைய புதிய வரவுதான் ஆராத்யா. லட்சுமிமேனன் பிறந்த அதே கேரளாவில் உள்ள கொச்சினில் இருந்துதான் இவரும் வந்திருக்கிறார். தாவணிக் காற்று வெளியாகும்போது ரசிகர்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்கும் எனக் காத்திருக்கும் ஆராத்யா கேரளத்தில் இருந்து தமிழுக்கு வந்த அசின், நயன்தாரா போன்ற நடிகைகளில் உங்களது ரோல் மொடல் என்றால், ஜோதிகா, சிம்ரன்தான் எனது ரோல் மொடல் என்கிறார்.

## சைவத்தில் உன்னி கிருஷ்ணனின் மகள்

இயக்குநர் விஜய், குழந்தை நட்சத்திரம் சாராவை வைத்து சைவம் என்னும் படத்தை இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் நாசர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். சமீபத்தில் 'சைவம்' படத்திற்காக நா. முத்துகுமார் இயற்றிய ' அழகே அழகே' என்ற பாடல் ஜி. வி .பிரகாஷ் இசையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்தப் பாடலைப் பாடியது பின்னணிப் பாடகர் உன்னி கிருஷ்ணனின் மகள் உத்ரா. குழந்தை நட்சத்திரம் சாராவுக்கு பொருத்தமான குரல் வேண்டும் என்று இயக்குநர் விஜய் தேடலை ஆரம்பிக்க, கிடைத்த பொக்கிஷம்தான் உத்ரா. உத்ராவின் குரலில் சாராவின் அபிநயத்தில் 'அழகே அழகே' மிக வித்தியாசமான ஒரு அனுபவமாக இருக்கும். இயக்குநர் விஜய் உடன் இணைந்து நான் பணியாற்றிய படங்கள் அனைத்தும் இசையில் பெரும் வெற்றி பெற்றன. இந்த படமும் விதிவிலக்கல்ல' என்று குரலில் பெருமை பொங்க கூறுகிறார் இசை அமைப்பாளர் ஜி. வி .பிரகாஷ்.

சொனி மியூசிக் நிறுவனம் 'சைவம்' படத்தின் இசை உரிமையை பெற்றிருக்கிறது.





இரண்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட திருமணம் எனும் நிக்காஹ் படம் முடிவடைந்து பல மாதங்களாகிவிட்ட நிலையில், அடுத்த மாதம் படத்தை வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளார் படத்தின் தயாரிப்பாளர் ஒஸ்கார் ரவிச் சந்திரன்.

மிக வித்தியாசமான கதை, வித்தியாசமான கதைக்களம் என்ற வகையில் எல்லோராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வரும் படம் - திருமணம் எனும் நிக்காஹ். புரிதல் அவசியம் என்ற உன்னத கருத்தை வலியுறுத்தும் இந்த படம் புரிதலின் முக்கியமான பங்களிப்பை பற்றி கூறுகிறதாம்.

திருமணம் எனும் நிக்காஹ் படத்தைப் பற்றி அப்படத்தின் இயக்குனர் அனீஸ், கூறுகையில், பிரதானமான இரு மதங்களின் சம்பிரதாயங்களையும், கலாசாரத்தையும் பின்னணி ஆக வைத்து எடுக்கப் பட்ட படம்.

நஸ்ரியாவின் நடிப்பும் சரி, தோற்றப்பொலிவும் சரி, அவருக்கு ஏன் இப்படி ஒரு புகழ் கிடைத்தது என்பதற்கு இந்தப் படம் விடை சொல்லும். எங்கேயும் எப்போதும் எல்லோரையும் எப்போதும் கவரும் வகையில் சிறப்பான நடிப்பைப் கொடுத்திருக்கிறார் ஜெய். படத்திற்கு இசையமைத்திருக்கிறார் கிப்ரான்.

...ம்: திருமணம் எனும் நிக்காஹ்

## மகனுக்காக களமிறங்கும் விஜயகாந்

சகாப்தம் என்ற படம் மூலம் தனது மகன் சண்முகப்பாண்டியனை அறிமுகம் செய்யவிருக்கும் விஜயகாந்த், தானும் அப்படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கவிருக்கிறார்.

விஜயின் ஆரம்ப காலத்தில் அவருக்காக செந்தூரபாண்டி என்ற படத்தில் நடித்த விஜயகாந்த், சூர்யா வளர்ந்து வந்தபோதும் பெரியண்ணா என்ற படத்தில் நடித்தார். விஜயகாந்தின் படங்கள் கொடிகட்டிப் பறந்த காலம் அது. ரசிகர்களைக் கொள்ளை கொண்டிருந்ததால் அவர் நடித்தது விஜய், சூர்யாவுக்கு பலமாக அமைந்தன. கடைசியாக 2010ல் விருதகிரி என்ற படத்தை தானே இயக்கி நடித்த விஜயகாந்த், அதன்பிறகு முழுநேர அரசியல்வாதியாகி விட்டதால் எந்த படத்திலும் நடிக்கவில்லை. இந்நிலையில், சகாப்தம் என்ற படம் மூலம் தனது மகன் சண்முகப்பாண்டியனுடன் விஜயகாந்த் தானும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கவிருக்கிறாராம்.

இப்படம் மகனுக்காக காதல் கதையில் தயாரானபோதும், விஜயகாந்த்தும் நடிப்பதால், அவர் தோன்றும் காட்சிகளில் அதிரடியான அரசியல் 'பஞ்ச்' வசனங்களும் பறக்கப்போகின்றதாம்.



## வெங்கட்பிரபு இயக்கத்தில் சூர்யா?

அஜித்துக்காக வெங்கட்பிரபு தயார் செய்த கதை ஒன்றில் சூர்யா நடிக்கவுள்ளார். அஜித்தை வைத்து மாங்காத்தாவை இயக்கி அசத்தல் வெற்றிகொடுத்த வெங்கட்பிரபு, அதையடுத்து சூர்யாவுக்குத்தான் கதை சொன்னார். ஆனால், அவர் 'சிங்கம் 2' படப்பிடிப்பில் இருந்ததால், அந்த இடைவெளியில் அவரது தம்பி கார்த்தியை வைத்து 'பிரியாணி' சமைத்தார் வெங்கட்பிரபு.

இந்த நிலையில், 'சிங்கம் 2' இற்குப் பின்னர் கௌதம்மேனன் உட்பட சில இயக்குநர்கள் சொன்ன கதையில் திருப்தி ஏற்படாமல் இப்போது லிங்குசாமியின் 'அஞ்சான்' படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் சூர்யா, அதற்கடுத்து நடிக்க சரியான கதை அமையாததால் வெங்கட்பிரபுவை அழைத்து தனக்கு கதை தயார்செய்யும்படி சொல்லியிருக்கிறார்.

கௌதம்மேனன் இயக்கும் படம், வேறு சில இயக்குனர்களின் படங்களில் நடிப்பதால் தனக்கு இப்போதைக்கு 'தல' யின் தரிசனம் கிடைக்காது என்பதால், அவருக்காக தயார்ப்படுத்தி வைத்திருக்கும் கதையில் சூர்யாவை நடிக்கவைத்துள்ளாராம் வெங்கட்பிரபு. அஞ்சான் படப்பிடிப்பு முடிந்ததும், சூர்யாவைக் கொண்டு அடுத்த மாங்காத்தா ஆட்டத்தை ஆரம்பிக்கிறாராம் வெங்கட்பிரபு.

## ஏர்பிளேன் VS வொல்கனோ

விமானப் பயணத்தை அடிப்படையாக வைத்து வெளிவந்திருக்கம் படம்தான் 'எயார் பிளேன் VS வொல்கனோ'.

பயணிகளுடன் நடுவானில் விமானம் ஒன்று பறந்து கொண்டிருக்கிறது. தரையிறங்க தயாராக உள்ள நிலையில், விமானத்தை சுற்றி புகை மண்டலம் சுற்றிக்கொள்கிறது. இதனால் பாதை தெரியாமல் விமானிகள் தவிக்கின்றனர். உதவிக்கு விமானநிலையத்தை தொடர்பு கொள்ள முயற்சி செய்கிறார்கள். ஆனால், இவர்களுடைய இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடுகிறது.

புகைமூட்டத்துக்குள் விமானம் செல்ல செல்ல ஒரு நெருப்பு குழம்பு வட்டத்திற்குக்குள் மாட்டிக்கொள்கிறார்கள். இதிலிருந்து தப்பிக்க விமானிகள் முயற்சி செய்கின்றனர். எனினும் விமானிகள் இருவரும் இறந்துவிடுகிறார்கள். விமானம் தடுமாறும் நிலையில் விமானத்தில் பயணம் செய்யும் சிறிதளவு விமானம் ஓட்டத்தெரிந்த நாயகன் ரெயான் பட்ஸ், பயணிகள் காப் பற்றப்பட வேண்டும் இங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் விமானி யாக களம் இறங்குகிறார். இவருக்கு நாயகி நடாலி பர்ட்னி உதவி செய்கிறார்.

இவர்கள் விமானத்தில் பயணம் செய்யும் தொழில்நுட்ப நிபுணரின் உதவியால் இராணுவத்தை தொடர்பு கொள்கிறார் கள். இராணுவம் இவர்களை காப்பாற்ற முயற்சி செய்கிறது. இறுதியில் இராணுவத்தினர் விமானத்தை காப்பாற்றினார்களா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

படத்தில் ரெயான் பட்ஸ், நடாலி பர்ட்னி ஆகியோர் திறமையாக நடித்திருக்கிறார்கள். குறிப்பாக ரெயான் பட்ஸ் விமானத்தை ஓட்டும் காட்சிகள் அருமை. மற்றபடி திரையில் வரும் அனைத்து கதாபாத்திரங்களும் திறமையாக நடித்துள்ளனர்.

அலெக்சாண்டர் ஏலெனின் ஒளிப்பதிவு படத்திற்கு மேலும் பலம். குறிப்பாக விமானத்தில் எடுக்கப்பட்ட காட்சிகள் சுவாரஸ்யம். பூமி வெப்பமடைவதால் ஏற்படும் எரிமலை வெடிப்பின் விளைவுகளை தத்ரூபமாக எழுதி இயக்கிய ஜேம்ஸ் காண்டிலிக், ஜான் காண்டிலிக்-யை பாராட்டலாம்.





## மின்சாரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜித், ஜஸுக்கு இரட்டை வேடங்கள்

சிறுத்தை சிவா இயக்கத்தில் நடித்த 'வீரம்' படத்தை அடுத்து அஜித் தற்போது, கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் அஜித்திடம் ஒரு கதையை கூறியிருக்கிறார் ஷங்கர். அஜித்தும் இக்கதைக்கு தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளார்.

இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கவிருக்கிறாராம். படத்தில் அஜித்திற்கு இரட்டை வேடமாம். அது மட்டும் இல்லாமல், ஐஸ்வர்யாராய்க்கும் இரட்டை வேடமாம் என்பது தற்போதைய தக வல்.

'ஜகஜால புஜபல தென்னாலி இராமன் படத்தில் வடிவேலுடன் இணைந்து நடித்திருப்பவர் மீனாட்சி தீட்ஷித். இந்தப் படத்தில் நடிப்பதற்கு ஆரம்பத்தில் பல நடிகைகள் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். ஆனால் திரை யுலகில் சிலரின் மிரட்டலினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட சில நாட்களிலே வந்த நடிகைகள் ஓடிவிட்டனர்.

இந்நிலையில் இறுதியாக வந்தவர்தான் மீனாட்சி தீட்ஷித். இவரிடமும் அதேபோல் மிரட்டல்கள் சென்றன. ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது துணிவுடன் வடிவேலுடன் களமிறங்கினார் தென்னாலி இராமனுக்காக. இப்படத்திலே வடிவேலுடன் நடித்தது பற்றி தீட்ஷித் கருத்துக் கூறுகையில்,

வடிவேலுவுடன் நான் நடிக்க ஒப்பந்தமானபோது தமிழில் நடிக்கிற முதல் படத்திலேயே வடிவேலுவுடன் தான் நடிக்க வேண்டுமா? வேறு நடிகர் கிடைக்கவில்லையா? இவருடன் நடித்தால் அடுத்து எந்த கதாநாயகர்களும் சந்தர்ப்பம் தரமாட்டார்கள் என்றெல்லாம் என்னை சிலர் பயமுறுத்தினர்.


ஆனால்நான் எதையும் செவிகொடுத்து கேட்காமல் வடிவேலுவுடன் நடிக்கத் தொடங்கினேன். அப்போது அவரது நடிப்பைக்கண்டு வியந்தேன். என்னைக்கேட்டால் ச... ஒரு நகைச்சுவை சுனாமி. அந்த அளவுக்கு திறமையாக நடித்தார். அதோடு எனக்குள் இருந்த நகைச்சுவை நடிப்பையும வெளியே கொண்டு வந்தார். ஆக இந்த படத்திற்கு பிறகு எனக்கு தமிழில நிறைய படங்கள் கிடைக்கப்போவது உறுதி என்கிறார் மீனாட்சி தீட்ஷித்

## மிரட்டலுக்கு மிரளாத நாயகி



படம்: ஜகஜால புஜபல தெனாலிராமன், மீனாட்சி தீட்ஷித்.

## அரசியலுக்கு இழுக்காதீர்!



ஏ.ஜி.எஸ். எண்டர்டெயின்மெண்ட் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'ஜகஜால புஜபல தெனாலிராமன்'. வடிவேலு இரட்டை வேடங்களில் நடிக்கும் இப்படத்துக்கு ஆரூர்தாஸ் வசனம் எழுதுகிறார். டி. இமான் இசையமைப்பில் யுவராஜ் தயாளன் கதை எழுதி இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இங்கு வடிவேலு உரையாற்றுகையில்,

சினிமாவில் எனக்கு ஏற்பட்ட இடைவெளி என்பது காலத்தின் கட்டாயம். 3 ஆண்டுகள் ஓய்வு என்பது எனக்கு கிடைத்த சந்தோஷம். இந்த இடைவெளியில் என்னைத் தேடி நிறைய படங்கள் வந்தன. அவற்றில் சிறந்த படத்தை தேடிக் கொண்டிருந்தேன். மீண்டும் வரும் போது 'கிங்'காக வர வேண்டும் என எண்ணினேன்.

என்... வைத்து மீண்டும் படம் தயாரிக்க பலர் தயங்கினார்கள் பயந்தார்கள். அந்த நேரங்களில் மலையாளம் உள்ளிட்ட பல சினிமாக்களில் வாய்ப்புகள் தேடி வந்தன. ஆனால் அவை எவற்றையும் ஏற்கவில்லை. அப்படி ஏற்று நடித்திருந்தால் "வடிவேலு ஊரை விட்டு ஓடி விட்டான்' என பெயர் கட்டியிருப்பார்கள். அதனால்தான் அவற்றை ஒப்புக் கொள்ளவில்லை. இம்சை அரசன் 23 ஆம் புலிகேசிக்குப் பிறகு எதிர்பார்த்து காத்திருந்த ஒரு கதை 'தெனாலிராமன்'. இயக்குநர் யுவராஜ் சொன்ன கதையை கே... கல்பாத்தி அகோரம்தான் என்னை இதில் நடிக்க வைக்க விரும்பினார். '23' ஆம் புலிகேசி படம் மாதிரி... இப்படத்திலும் எனக்கு இரட்டை வேடங்கள். மாமன்னன், தெனா... என இரண்டு கதாபாத்திரங்களுமே நகைச்சுவையாகத்தான் இருக்கும்.

இந்தப் படத்தில் ஓரிடத்தில் 'லட்சியம் நிறைவாகும் வரை மறைவாக இருத்தலே, உலகின் அனைத்து போராளிகளுக்கும் நியதி' என்கிற ஆரூர்தாஸின் வசனம் எனக்குப் பொருந்துவதாக இருக்கும். மீண்டும் அரசியலுக்கு என்னை இழுக்காதீர்கள். நகைச்சுவையின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதை வைத்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் மகிழ்விப்பதே இனி என் வேலை என்றார் வடிவேலு.

## ...ம் வழங்கிய 'அழகிய பாண்டிபுரம்

...தநர் ராஜன் இயக்கத்தில் பரத்வாஜின் இசையில் தயாராகிக்கொண்டிருக்கும் ...ம் அழகிய பாண்டிபுரம். இப்படத்தின் படப்பிடிப்பு இடம்பெற்றபோது கிராமம் முழுவதற்கும் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கியது அழகிய பாண்டிபுரம் பட குழு.

இதுபற்றி இயக்குனர் கூறுகையில், எல்லா பெரிய பகைக்கும் ஒரு சிறிய பிரச்சினைதான் காரணமாக இருக்கிறது. அந்த பிரச்சினையை தீர்த்துவிட்டால் பகையே வராது என்பதுதான் கதையின் கரு. கதாநாயகன் கதாநாயகியின் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்கு மாடியிலிருந்து கயிற்றில் தொங்கியபடி செல்லும் காட்சி படமாக்கப்பட்டது. இவ்வேளையில் மின்சாரம் தடைப்பட்டது.

அந்த பகுதி முழுவதும் வெளிச்சமாக்கும் வகையில் படப்பிடிப்புக்கு கொண்டுவரப்பட்ட மின்பிறப்பாக்கி மூலமாக கிராமம் முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டு படப்பிடிப்பு நடத்தப்பட்டது. ஒரு பகுதியில் மட்டும் மின்சாரம் இருந்தால் போதும் என்றாலும் மக்கள் தேவைக்காக சிறு கிராமம் என்பதால் மின்சாரம் வழங்கினோம் . இதற்கு கிராம மக்கள் ஒத்துழைத்தனர் என்றார்.

K +

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலம் - 10

### 3 கிராமங்களின் கதை

# அது ஓர் அழகிய நிலாக்காலம்

மகாலிங்கம் பத்மநாபன்

**பண்டமாற்று**

கறுத்தக் கொழும்பான் மாம்பழம், பலாப்பழம், முருங்கைகாய் கட்டு இவை மீசாலை, சாவகச்சேரி மண்ணில் விளையும்போது அவற்றின் சுவையே தனிதான். கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை இப்போது நினைத்தாலும் வாயெல்லாம் இனிக்கும். மூன்று கிராமங்களிலும் பனை வளம் இருந்தாலும் கருப்பனி(பதநீர்) இறக்குதலும், பனங்கட்டி காய்ச்சுதலும் இல்லை. நேரமும் இல்லை, மீசாலைக் காரரின் கைவண்ணமும் இல்லை. எனவே மீசாலை உறவினர்கள் எப்போது வருவர். மாம்பழம், பலாப்பழம் ஒரு கைப்பார்க்கலாம் என்றும் பனங்கட்டியைச் சுவைக்கலாம் என்றும் மூன்று கிராமத்துச் சிறுவர்களும் காத்திருப்பர்.

**நெல் இனங்கள்**

அதேபோன்று மொட்டைக் கறுப்பன் அரிசி, நெய், தேன், இறைச்சி வத்தல் வன்னிக்குப் பெருமை சேர்ப்பன. வன்னியிலிருந்து உறவினர் எப்போ வருவர் மொட்டைக் கறுப்பன் அரிசிச் சோறும் வத்தல் கறியும் எப்போ சாப்பிடலாம் என்று மீசாலை உறவினர் காத்திருப்பர்.

மொட்டைக் கறுப்பன், சீனட்டி, பச்சைப் பெருமாள் என்று நெல் இனங்களின் பெயர்கள் புதிய தலைமுறைக்குத் தெரியாது. மாட்டெரு மட்டும் போட்டு நோய் எதுவும் தொற்றாது. இயற்கையாக வந்த நெல்லரிசியைச் சாப்பிட்டு மக்கள் நோயின்றி வாழ்ந்தனர். பசளை, களை கொல்லி, பூச்சி கொல்லிகளை மூன்று கிராம மக்களும் அறிந்திருக்கவில்லை.எக்ஸ் 4, ஐ.ஆர் 8, பி.ஜி 11 என்று தொடங்கி ஆட்டக்காரி என்ற பெயரிலும் நெல் இனங்கள் வந்துவிட்டன. இரசாயனங்கள் பயன்படுத்தியதால் நோய்களும் புதிது புதிதாய் சேர்ந்து வந்தன.

**மேய்ச்சலுக்கு மாடனுப்புதல்**

மீசாலை, சாவகச்சேரியில் மாடுகளுக்குப் போதிய உணவு இருக்காது. வன்னியில் புல்லும் வைக்கோலும் நிறைந்து காணப்படும். சுட்டதீவுக் கடற் கரையிலிருந்து மூன்று கிராமம் வரையான பொட்டல் காடும் சிறந்த மேய்ச்சல் தறைதான். எனவே தென்மராட்சி மாடுகளை மேய்ச்சலுக்காக மூன்று கிராமத்து உறவினர்களிடம் அனுப்பி வைப்பர். சிலர் இரண்டு, மூன்று பேர் இணைந்து மாடுகளை கொடிகாமம், பளை, ஆனையிறவு ஊடாக சாய்த்துக் கொண்டு வருவர். முதல் நாள் இரவு கரந்தாய்க்குளத்தில் தங்கி, தமது கட்டுச்சோறுகளைச் சாப்பிட்டு மாடுகளைக் காலாற விடுவர். இரண்டாம் நாள் பெரிய பரந்தனை அடைவர். இன்னும் சிலரோ கன்றுகளை வள்ளங்களில் ஏற்றி மாடுகளை வள்ளங்களில் கட்டி இழுத்து வருவர். மாடுகளும் முதலில் கடலில் இறங்கப் பயந்தாலும் பின் தலையை மட்டும் நீரின் மேல் வைத்துக் கொண்டு அழகாக நீந்தி வந்து சேரும்.

வரும்போது வற்றி வத்தலாக இருக்கும் மாடுகள் திரும்பப் போகும்போது புசுபுசுவென்று கொழுத்து, மினுமினுத்துச் செல்லும்.

சிலர் வருடக்கணக்கிலும் மாடுகளை வன்னியில் விட்டு வைப்பர். கன்றுகள் பிறந்து குறி சுடும் காலத்தில் அரைவாசிக் கன்றுக்கு உரிமையாளரின் குறியும் மிகுதி அரைவாசிக்கு பார்வையாளரின் குறியும் சுடப்படும்.

பால் தேவைக்காக இடைக்கிடை இரண்டு, மூன்று பசுக்களை தென்மராட்சி கொண்டு செல்லும் உரிமையாளர் தம்மிடம் வாடி வதங்கிய பசுக்களையும் கன்றுகளையும் மீண்டும் வன்னிக்கு அனுப்புவர்.

வன்னி மக்கள் பசுக்களிலிருந்து சிறிது பாலை மட்டும் கறந்து விட்டு மிகுதியைக் கன்றுக்கு விட்டு விடுவர். கன்றுகள் வாயால் நுரை தழும்ப வயிறு நிறையப் பால் பருகி விட்டுத் துள்ளி ஓடும் அழகை நாள் முழுக்கப் பார்த்து இரசிக்கலாம். கன்றுகள் நிறைந்த பால், நிறைந்த புல் என்பவற்றால் விரைந்து வளர்ச்சியுற்றன.

வயலில் பட்டியடைப்பதனால் வன்னி மண் வளம் நிறைந்தாக ஆயிற்று.

**(இன்னும் நிலம் விரியும்)**



# வேள்வித் திருமகன் - ஆற்றுகைக்குத் தயார்!



யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது. வழமைபோன்று 238, பிரதான வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கிலேய இந்த ஆற்றுகை அளிக்கை செய்யப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடனும் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும் மேடையேற்றப்படவுள்ள வேள்வித் திருமகன் ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குனர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் முதன் முதலாக கடந்த 2012 ஆம் ஆண்டு மேடையேற்றம் கண்ட வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி மேலும் புதிய மாற்றங்களுடன் இந்த முறை இரண்டாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. ஆயினும் இந்தமுறை ஆற்றுகையினை திருமதி வைதேகி செல்மர் எமில் நெறியாள்கையை செய்யவுள்ளார். திருப்பாடுகளின் காட்சி வரலாற்றில் பெண் ஒருவர் அதனை நெறியாள்கை செய்கின்றமை இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாதே ...போகாதே..!



அண்மையில் நான் படித்த பாடசாலைக்கு ஒரு சான்றுப்பத்திரம் பெறுதல் தொடர்பாகச் சென்றிருந்தேன். அது ஒரு பிரபலமான பாடசாலை. காலம் காலமாக பல சாதனைகளைப் பதிவு செய்து வந்த பாடசாலை. ஆனால் தற்போது சிறிது காலமாக அதன் செயற்பாடுகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவுக்கு - பாராட்டப்படக்கூடியவையாக - இல்லையென மற்றவர்கள் கூறிக் கேட்டிருக்கிறேன்.

பாடசாலைக்கு சென்றதும் பழைய ஆசிரியர் ஒருவரை தேடிப்பிடித்துக் கொண்டேன். அவரோடு அளவளாவிக்கொண்டே தேவையை நிறைவுசெய்தேன். அப்போது இடைநடுவில் அவரொரு விடயத்தைச் சொன்னார்

"குறிப்பிட்ட ஒரு மாதத்துக்குள் மாத்திரம் அந்தப்பாடசாலையில் கல்விகற்கின்ற மூன்று மாணவிகள் தமது கல்வியை இடை நிறுத்தி விட்டு வீட்டாருக்குத்தெரியாமல் திருமணம் செய்திருக்கிறார்கள். மூவருமே கல்வியில் சளைத்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களினுடைய மனம் திட்டமிட்டோ அல்லது அத்தகைய சூழலாலோ திசை திருப்பப்படுகிறது."

"இத்தகைய பதின்மவயதுத் திருமணங்கள், கருக்கலைப்புக்கள் என்பவற்றுக்கான தேவை எமது சமூகத்தில் இருக்கிறதா..? பிள்ளைகள் அதுவும் குறிப்பாக பருவவயதுப்பெண்பிள்ளைகள் இவ்வாறு எளிதில் மாறிப்போவதற்கு காரணம் என்ன..? வெறும் எதிர்ப்பாலினக் கவர்ச்சி மட்டும்தான் இதற்குக் காரணமா?'' என்று பேசிக்கொண்டிருக்கின்ற போது தான் இன்னொரு உண்மை வெளிவந்தது.

குறிப்பிட்ட மூன்று மாணவிகளில் இருவர் ஏற்கனவே திருமணம் செய்த நபர்களை- அதுவும் வெளியூர்க்காரர்களை- மணம் முடித்துள்ளனர். ஒரு மாணவி வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் வேறொரு இடத்தில் இருப்பதாகவும் அங்கிருந்து பரீட்சை எழுதிவிட்டு திரும்ப வீடு வருவதாகவும் கூறியிருக்கிறார். குறித்த ஆண் கள் இந்த மாணவிகளுக்கு ஆசைகளைக் காட்டி தம்மோடு வந்தால் வசதியாக வாழலாம் என்று ஆசை காட்டியிருக்கிறார்கள். அதனை நம்பியே இந்த மாணவிகளும் திருமணமானவர்கள் என்றும் பாராமல் அவர்களோடு வாழப்புறப்பட்டிருக்கலாம்.

பருவவயதென்பது கத்தியிலான பாதை மாதிரி. கவனமாக இருக்கவேண்டும். பெற்றோரும் சரி பிள்ளைகளும் சரி உரிய முறையில் ஒவ்வொன்றையும் அணுகவேண்டும்.

கண்ணுக்குத் தெரிகின்ற முள்ளைக் குத்திய பிறகும் எடுக்கலாம். ஆனால் கண்ணுக்குத் தெரியாத கிருமிகளுக்கு முற்பாதுகாப்பு என்ற ஒன்று கட்டாயம் தேவை. பறிகொடுத்தது போதும். இனி இருக்கின்ற சமூகத்தையாவது காப்பாற்ற முயற்சி செய்யுங்கள். இளவயதுத்திருமணம். இது உங்கள் ஒவ்வொருவர் வீட்டுப்பிரச்சினை. முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்யுங்கள்.





## கண்ணுக்கு மை அழகு..!

'கண்ணுக்கு மை அழகு கவிதைக்கு பொய்யழகு.' முன்னைய காலங்களில் பெண்கள் தம் கண்ணுக்கு மை வைக்கின்ற பழக்கம் காணப்பட்டது. அநேக காப்பியங்கள் பெண்களின் கண்மை பற்றிய அழகைப் பாடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இன்றும் பெண்கள் கண்ணுக்கு மையிடுகிறார்கள் என்றாலும் அது முன்பு பெண்கள் மையிட்ட பலனையும் ஆரோக்கியத்தையும் தருவதில்லை.

முன்பு பெண்கள் தமக்கான கண் மையை தயார்செய்வதற்கு இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தினார்கள். கரிசலாங்கண்ணியை தேடியெடுத்து அதைச் சாறாக்கி அந்தச் சாற்றை மெல்லிய துணியில் நனைத்து அதை உலரவைப்பார்கள். இப்படிப் பல முறை உலர்த்திய துணியை திரியாகத் திரித்து அதை குத்துவிளக்கில் நெய்யிட்டு எரித்து அதில் வந்த கருமைநிறப்பசையை சிற்றாமணக்கு எண்ணெயில் குழைத்து கண்மையாக்கி கண்ணுக்கு வைப்பார் கள். அந்தக் கண்மையானது கண் தொடர்பான பொதுவான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக அமையும்.

ஆனால் இன்று எம் பெண்கள் பல்வேறு இராசயனச்சேர்க்கைகளிலான கண்மையினை வெறும் அழகுக்காக மட்டும் பயன்படுத்துகிறார்கள். இது ஆரோக்கியத்தை விற்று நோயினை விலைக்கு வாங்குவது போலல்லவா அமையும். கொஞ்சம் சிந்தியுங்கள் சகோதரிகளே. எம் முன்னோரின் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் ஏதோவோர் அர்த்தம் இருந்தது. அதை பாதுகாக்க வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை. இயற்கையோடு இணைந்திருப்போம். சமுதாயத்தைக் காப்போம்.






'பெண்களின் பாதுகாப்புக்காக' என்ற பெயரில் பல்வேறு முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற ஆபிரிக்கக் கண்ட நாடான கமருனில் மார்பகச் சூடு என்கின்ற இன்னொருவகையான கொடுமையும் தற்காலத்தில் நடைபெற்று வருகின்றது. தங்களினுடைய பருவவயதுப் பெண் குழந்தை களைப் பாலியல் கொடுமைகளிலிருந்து பாதுகாத்தல் என்ற போர்வை யில் இந்தச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கமருன் நாட்டில் நான்கு பெண்குழந்தைகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இந்தக் கொடுமைக்கு குழந் தைகள் ஆளாகிறார்கள். இதுவரை கிட்டத்தட்ட 8.3 மில்லியன் பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக் கிறார் கள்.

சுமார் 9 வயதுடைய பெண்களிலிருந்து இந்தக் கொடுமை ஆரம்பிக்கின்றது. பருவமடைகின்ற பெண்கள் மற்றும் அந்த வயதை ஒத்த பெண்கள் அவர்களினுடைய தாய்மாரால் சூடான கல், உலக்கை, சுத்தியல், சாணைக்கற்கள் போன்றவற்றால் மார்புப் பகுதிகளில் சூடு வைக்கப்படுகின்றனர். பெண்குழந்தைகள் மீதான பாலியல் பலாத்காரம் மற்றும் இளவயதுத் திருமணத்தை தடுக்கவே தாம் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கப் பன்னாட்டு உதவி நிறுவனாங்கள் மற்றும் சமூக நல அமைப்புக்கள் தொடர் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன. இந்த மார்பகச்சூட்டுக் கொடுமையால் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய், மனஅழுத்தம், ஏனைய பல்வேறு எதிர்விளைவுகள் ஏற்படுகின்ற அபாயம் காணப்படுகின்றது. எனினும் தம் குழந்தைகளைப் பாதுகாக்க தமக்கு இதுதான் வழி என அவர்களின் பெற்றோர் கூறுகின்றனர்.

முறையற்ற பாலியல் பலாத்காரங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஒரு சமூகமே சிதைந்து போகின்ற நிலை தேவைதானா..?

முறையற்றஆசைகளும்செயற்பாடுகளும்அவசியந்தானா..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பித்து வா பார்க்கலாம்

– விநாயகமுருகன்

அண்மையில் 'டிஸ்கவரி' தமிழ் அலை வரிசையில் 'சர்வைவல் தட் ' என்றொரு நிகழ்ச்சியை ஒளிபரப்பினார்கள்.

ஒரு அமெரிக்க இராணுவ வீரர் நான் எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் தப்பி வந்துவிடுவேன் என்று அவரது சக இராணுவ நண்பர்களிடம் கர்வமாகச் சவால் விடுகின்றார். ஏனெனில் எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் எப்படித் தப்பி வருவது என்று அவருக்கு ஏற்கனவே தெரியும். அவர் பலமுறை ஆளில்லா பாலைவனங்களில், மலைகளில், காடுகளில் ஆபத்தான இடங்களில் மாட்டி தப்பிப் பிழைத்துள்ளார். அவரது நண்பர்கள் "சரி நாங்கள் சொல்லும் சவாலை ஏற்க நாளை தயாராக இரு" என்று சொல்கின்றார்கள்.

மறுநாள் ஒரு விளையாட்டு மைதானத்தில் அந்த இராணுவ வீரர் ரக்பி விளையாடிக் கொண்டிருக்கின்றார். அங்கு அதிரடியாக நுழையும் அவரது நண்பர்கள் அந்த இராணுவ வீரரைக் கடத்திச் செல்கின்றார்கள். அவர் தப்பிக்காமல் இருக்க கையைக் கட்டி விடுகின்றார்கள். பிறகு அவரை ஒரு ஹெலிகொப்டரில் ஏற்றிச்சென்று ஐஸ்லாந்தில் – ஆளரவமற்ற – பல மைல்களுக்கு பனி உறைந்த ஒரு மலையுச்சியில் தனியாக இறக்கி விடுகின்றார்கள். இறக்குவதற்கு முன்னர் அந்த இராணுவ வீரரைச் சோதனையிடுகின்றார்கள். அவரது சட்டைப் பொக்கெற்றில் திசைகாட்டி, ஒரு கத்தி, ஒரு உளி என்பன இருக்கின்றன. சிரித்தபடியே அதை எல்லாம் பிடுங்கி வைத்துக்கொள்கின்றார்கள்.

"எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் தனியாக தப்பி வந்துவிடுவேன் என்று சவால் விட்டாயல்லவா. இப்போது தப்பித்து வா. பார்க்கலாம்" என்று சிரித்தபடியே அவருக்கு ஒரு 'ஜெர்கினை' மட்டும் கொடுத்துவிட்டுதனியாக வந்துவிடுகின்றார்கள். பிறகு அந்த நண்பர்கள் அனைவரும் பல மைல்கள் தள்ளி இருக்கும் ஒரு கண்காணிப்புப் பகுதியில் இருந்துகொண்டு தங்கள் நண்பர் எப்படித் தப்பி வருகின்றார் என்று ஒரு 'ட்ரக்கில்' அமர்ந்துக்கொண்டு கமரா மற்றும் செயற் கைக்கோள் தரவுகள் மூலம் கண்காணிக் கின்றார்கள்.

அந்த இராணுவ வீரர் பனிமலையில் இருந்து தப்பித்து வரும் வழியில் பல சிரமங்களைச் சந்திக்கின்றார். மைனஸ் பன்னிரெண்டு டிகிரி குளிர். அங்கு இருக்கும் பனிக்கட்டியை உருக்கி தண்ணீராக்கி குடிக்கின்றார். மலையில் சூரிய ஒளியை கணித்து இறங்கி வந்து உணவுக்கு ஏதாவது கிடைக்குமா என்று தேடுகின்றார். பனி ஆற்றில் ஓடும் மீன்களை பிடிக்கின்றார். அவர் செய்யும் சேட்டைகளையும் பாதுகாப்பு உத்திகளையும் கமெராவில் பார்த்து நண்பர்கள் எல்லோரும் சிரிக்கின்றார்கள். அங்கிருந்து எப்படியாவது தப்பித்து தனது நண்பர்களிடம் போட்ட சவாலில் தப்ப வேண்டுமென்று வெறியுடன் முன்னேறி பல ஆபத்துகளை தாண்டித் தாண்டி செல்கின்றார்.



இதுதான் அந்த நிகழ்ச்சி. பார்ப்பதற்கு ஒரு அதிரடிப்படம் பார்ப்பது போல உணர்வு. ஆனால் அந்த நிகழ்ச்சியை என்னால் தொடர்ந்து பார்க்க முடியாமல் சோக நினைவொன்று மனதில் எழுந்தது.

**பல வருடங்களுக்கு முன்பு என்னை இப்படித்தான் எனது நண்பர்கள் அனைவரும் சேர்ந்து பெண் பார்க்க அழைத்துச் சென்றார்கள்.**

பல வருடங்களுக்கு முன்பு என்னை இப்படித்தான் எனது நண்பர்கள் அனைவரும் சேர்ந்து பெண் பார்க்க அழைத்துச்சென்றார்கள். பெண்ணுடன் (இப்போது எனது மனைவி) என்னை தனியாகப் பேசச் சொல்லிவிட்டு எல்லாரும் வெளியே சென்றுவிட்டார்கள்.இந்த நிகழ்ச்சியில் இராணுவ வீரர் ஆபத்தை தாண்டியிருந்தான். நானோ இத்தனை வருடங்களாக அதற்குள்ளேயே சிக்குண்டு....!

துக்கம் தொண்டையை அடைத்தது.

# மூளை மாறாட்டம்




சிவராத்திரி தினத்தன்று தான் எனக்கு அந்தப் பட்டமளிப்பு விழா நடந்தது. கலைக்காக நான் ஆற்றிய சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, அந்த விருதும் வழங்கப்பட்டிருந்தது. என்னுடன் சேர்த்து இன்னும் ஆறு பேருக்கு அந்தக் கௌரவ விருது வழங்கப்பட்டிருந்தது. என்னைத் தவிர ஏனையோர் குடும்ப சமேதராய் வந்திருந்தனர். நான் வீட்டுக் காரியிடம் இதனைப்பற்றி சொல்லவில்லை. சொல்லியிருந்தால் சில வேளை வந்திருக்கலாம். வராமலும் விட்டிருக்கலாம். வந்தாலும், வராவிட்டாலும் 'வாயார வாழ்த்துவதில் ?' குறைவிருந்திருக்காது.– இப்படித்தான் முந்தி ஒரு முறை எனது மாமனாருக்கு பொன்னாடை போர்த்தி – விருது வழங்கியிருந்தனர்.ஒரு நாள் குலைப்பன் காய்ச்சலில் மாமா நடுங்கிக் கொண்டிருந்த போது மாமி "இஞ்சை போர்வைக்கு வழியில்லை... அந்தப் பொன்னாடையை எடுத்துப் போர்த்திக் கொள்ளுங்கோ" என்று சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. அதனை எனது மனைவி அடிக்கடி சொல்லிக் காட்டுவா.

அதனால் சந்தன மாலை, பொன்னாடை, விருது ஆகியவற்றை வலுபக்குவமாக எடுத்து வந்து அவாவின்ரை கண்ணுக்குப் படாமல் வைப்பதில் வெற்றி பெற்றுவிட்டேன். ஆனாலும் ஊர் எல்லாம் கூடி ஆர்ப்பரித்து வாழ்த்தி கௌரவித்தமை, என்னை நெஞ்சை நிமிர்த்தி நடக்க வைத்திருந்தது.

மறுநாள் காலை, முற்றத்தைக் கூட்டி ஒருக்கால் தண்ணி தெளித்து விடும் படி மனைவி கூறியமை எனக்கு ஒருவித தன்மானப் பிரச்சினையாக இருந்தது.



'கலை அரசன்' என்று பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட என்னை –இந்தப் பரமசிவத்தை – 'அதனைச்செய்' 'இதனைச் செய்' என்று எவளோ ஒருத்தி கட்டளை பிறப்பிப்பதா ?" என்ற ஆத்திரத்தில், எனது தோள்கள் தினவெடுத்தன.... கண்கள் சிவந்தன....மீசை இருந்திருந்தால், அதுவும் துடித்திருக்கும். மீசை நரைக்கத் தொடங்கிய உடனேயே, 'இப்பத்தைய ஸ்ரைலில் டொக்டேர்ஸ்' மாதிரி 'கிளீன் சேவிங்'கில் இறங்கியதும் நல்லதாகப் போயிற்று. ஆனாலும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு ஒன்றும் விளங்காதது போல மௌனமாக இருந்தேன். ஆனாலும் மனுசி விட்டபாடாக இல்லை.

'வளவுக்கை போய் தேங்காயைப் 'பொறுக்கி' க் கொண்டு வந்து ஒரு தேங்காயை உரித்துத் தந்துவிட்டு வளவைத் துப்பரவாக்குகிற அலுவலைப் பாருங்கோ.." என்று மீண்டும் கூறினாள்.

.பொறுக்கிக்' கொண்டு வாருங்கோ என்பதில், அந்தப் 'பொறுக்கி' என்பதனை அறுத்துறித்தி வேண்டுமென்றே கூறியது போன்ற ஓர் உணர்வு எனக்கு.அது வேறு ஆத்திரத்தைக் கூட்டியது. பதினாறு மேடைகளுக்கு மேலாக இராஜ தேசிங் ஆகவும், மூன்று நான்குதடவைகள் 'இரண்யாட்சகன்' ஆகவும் வேடம் தாங்கி, கலைத் தாய்க்கு தொண்டு ஆற்றியுள்ள என்னைப் பார்த்து 'பொறுக்கி' என்பதா?. ஆத்திரத்தை அடக்கி , மௌனம் காத்தேன். ஆனாலும் இடி ஓயவில்லை. "நான் இஞ்சை கத்திக் கொண்டிருக்கிறன்.... விளக்கம் குறைஞ்ச ஆக்கள் மாதிரி பேசாமல் இருக்கிறியள்" என்று மீண்டும் முழங்கினாள் எனது பாரியார்.அடக்கி வைத்த ஆத்திரம் ஒன்று திரண்டு எழ இனியும் பொறுக்க முடியாதென்று பொங்கி எழப் புறப்பட்ட சமயத்தில் தான் புறப்படலையில் தட்டியவாறு யாரோ 'அன்ரி' ...... அன்ரி..." என்று ஒரு மெல்லிசையால் மென்குரலால் அழைத்த சத்தம் கேட்டது. மனுசியின் குரல் ஓரளவு அடங்கியது. என்குரலும்தான்....நல்ல வேளை நான் நாலு கேள்வி கேட்குமுன் யாரோவந்து விட்டனர்.

'நாயைப் பிடியுங்கோ'என்று கூறிய வாறே அங்கு வன்னியில் எமது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த கீதா மாமி' படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். எனது மனைவி என்னை நோக்கிக் குரைத்ததைக் கேட்டுத்தான்' நாயைப் பிடித்துக் கட்டுங்கோ' என்று கீதா மாமி கூறினாரோ தெரியாது.

கீதா மாமி வந்ததும் மனைவி மீதான என் பதில் துலங்கலைக் காட்டாது மௌனம் காத்தேன்.

'கீதா மாமியைக்கண்டதும் என் மனைவிக்கு மகிழ்ச்சிக்கு அளவே'யில்லை.... நிறையவே 'கதை அளக்கலாம்" அல்லவா? அதிலும் ஐயாவைப்பற்றி நிறையவே 'கதைஅளக்கலாம்' அல்லவா. எனது மனைவியின் தகப்பனாருக்கு சுகவீனம் என்று அறிந்து அவரைப் பார்க்கவே தான்வந்ததாக கீதா மாமி கூறியது,எனது மனைவியின் மகிழ்வை இரட்டிப்பாக்கியது. அவாவின் தகப்பனாருக்கு எண்பத்தைந்து வயதாகிறது. யாரும் சொன்னால் நம்ப மாட்டார்கள். .... அப்படி .....! அவர் போன கிழமை கிறுதி தூக்கி எறிந்து விழுந்திட்டார். ஆஸ்பதிரியில் ஒருவாரம் இருந்து நேற்றுத்தான் வீட்டுக்கு வந்தார். "ஐயாவுக்கு இப்ப சுகம். ஆனால் மூளை ஒருவித மாறாட்டம்." கீதா என்னை ஐயா ' என்று தான் அழைப்பார். ஐயாவுக்கு 'மூளை மாறாட்டம்' என்று என் மனைவி கூறியது தனது தந்தையைப் பற்றித்தான் ... அவருக்கும் 90 வயது எட்டிப் பார்க்குதெல்லோ! ஆனால் கீதாமாமி என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். ஏதோ எனக்குத்தான் 'மூளை மாறாட்டம்' என்று அவாக்கு விளங்கிட்டு போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘யூலியன்!** என்னதான் நீங்கள் தொண்டைத்தண்ணீர் வற்றுமளவுக்கு உங்கள் பக்க நியாயத்தை நீதிமன்றில் எடுத்துச் சொன்னாலும் சுவீடனுக்கு நீங்கள் நாடு கடத்தப்படுவது உறுதி. ஏற்கனவே இது பற்றி முடிவெடுக்கப்பட்டுவிட்டது’

தூதரக அதிகாரி சொன்ன இந்த முடிவை யூலியன் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தாலும் இப்படித் திடுமென தூதரக அதிகாரி சொன்னதும் அவன் கொஞ்சம் நிலைகுலைந்துதான் போனான்.

“பரவாயில்லை. இதை நான் ஏற்கனவே எதிர்பார்த்தே இருந்தேன். ஆனாலும் அமெரிக்காவை எதிர்த்து கடைசிவரை நான் போராடுவேன். என்னை அவர்கள் அங்கு கொண்டு சென்று மின்சாரக்கதிரையில் கூட இருந்திக் கொல்லட்டும். அதற்குப் பயந்து நான் அடங்கிவிடப்போவதில்லை. ஏதாவது ஒரு வழி கிடைக்காமலா போய்விடப்போகிறது. சரி. இதைச் சொல்லத்தான் என்னை இங்கு அழைத்தீர்களா?” என்று எந்தவித சலனமும் இல்லாமல் சொன்னான் யூலியன்.

“உங்களின் துணிச்சல் யாருக்கு வரும் யூலியன்? உங்களைப்போன்றே நாங்களும் அமெரிக்காவின் அராஜகத்தை எதிர்க்கின்றோம். அதன் உண்மையான முகத்தை உலகின் முன்னால் அம்பலப்படுத்த விக்கிலீக்ஸும் நீங்களும் எங்களுக்கு அவசியம். அதனால் உங்களுக்கு எந்த வழியிலாவது உதவமுடியுமா என்று ஆராயத்தான் அழைத்தோம்” அவர்கள் யூலியனை நோக்கி தங்கள் ஆதரவுக் கரத்தை நீட்டினார்கள். எந்தவித உதவியு மற்று நடுக்கடலில் திசை தெரியாமல் நீரில் மூழ்கியபடியே தத்தளிப்பவன் தன் கைக்கு என்ன தட்டுப்பட்டாலும் அதைக் கெட்டியாகப் பற்றிக்கொள்வான். அதைப் போலவே தூதரக அதிகாரிகளால் தனக்கு எந்தவிதத்தில் உதவி செய்யமுடியும் என்று தெரியாவிட்டாலும் கூட அவர்களின் உதவிக்கரத்தை பற்றிக் கொள்ளவே யூலியன் விரும்பினான்.

“நான் இருப்பது பிரிட்டன். எந்த வழியாலும் நான் வெளியேற முடியாதபடி எல்லாப்பக்கமும் கண்காணிப்பை இறுக்கமாக்கியிருக்கிறார்கள். அப்படியும் அவர்களின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு நான் வேறு நாட்டுக்குச் சென்றால், அமெரிக்காவோடு சேர்ந்து இதுதான் சந்தர்ப்பமென்று பிரிட்டனும் என்னை அதிபயங்கரக் குற்றவாளியாக பகிரங்கப்படுத்தி தேடத்தொடங்கி விடும். இதனால் நிலைமை இன்னும் சிக்கலாகுமே தவிர, என் விடுதலை சாத்தியமாகாது” யதார்த்தம் என்னவென்பதை யூலியன் விளக்கினான்.

“இதெல்லாம் எங்களுக்கும் தெரியும். ஆனாலும் தலைமறைவாக இருந்தால் என்னதான் இன்ரர்போல் தேடினாலும் பிடிக்க முடியாதுதானே” என்றார்கள்.

யூலியன் சிரித்தான்.

“அப்படித் தலைமறைவாவதைத்தான் அமெரிக்காவும் விரும்புகிறது” என்றான்.

“நீங்கள் தலைமறைவாவதை அமெரிக்கா விரும்புகிறதா? என்ன சொல்கிறீர்கள் யூலியன்? உங்களுக்கு என்ன புத்தி பேதலித்துவிட்டதா?” என்று ஒரே குரலில் கேட்டார்கள் தூதரக அதிகாரிகள்.

“உண்மைதான் நண்பர்களே! நான் தலைமறைவாக இருந்தால் என்னைக் கொன்றுவிட்டு காலம் முழுக்க என் னைத் தேடுவது போல நாடகமாடிக்கொண்டே இருப்பார்கள். இதனால் என்னைக் கொன்ற பழி அவர்கள் மீது விழாது. விக்கிலீக்ஸும் முடக்கப்பட்டுவிடும்” என்று சொல்லிக் கண் சிமிட்டினான் யூலியன்.

“அப்படியானால் வேறு ஏதும் திட்டம் வைத்திருந்தால் சொல்லுங்கள். அது பற்றி எங்கள் நாட்டுக்குத் தெரியப்படுத்தி ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று ஆலோசிக்கிறோம்” என்று வந்தவர்களில் ஒருவர் கேட்டார். அவர் ஈக்கு வடோர் நாட்டு தூதரக அதிகாரி.

“இப்போதைக்கு அப்படி எந்தத்திட்டமும் இல்லை. ஆனால் உங்களோடு பேசிக்கொண்டிருக்கும் போதுதான் ஏதும் வழி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வருகிறது. எதற்கும் உங்கள் நாட்டுத் தூதரகத்தின் இயலுமைகள் பற்றி எனக்கு சொல்ல முடியுமா? ஏதாவது ஒரு வழி அதன் மூலம் கிடைக்கிறதா? என யோசிக்கலாம்” என்று விட்டு, சிகரெட் ஒன்றை யூலியன் பற்றத் தொடங்கினான். சிகரெட்டில் இருந்து சாம்பல் வர்ண வளையங்கள் அறையெங்கும் வட்டமிடத்தொடங்கின.

ஒவ்வொரு நாட்டு அதிகாரிகளும் தத்தம் நாட்டு சட்டதிட்டங்களையும், தங்கள் தூதரகத்தின் மூலம் பிரிட்டனில் செய்யக்கூடிய விடயங்களையும் சுருக்கமாக விளக்கினார்கள். நெற்றியைச் சுருக்கியபடி, சிகரெட்டை நன்றாக உள்ளிழுத்து புகையை வெளியே ஊதியபடி எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான் யூலியன்.

அவர்கள் சொன்னவற்றில் இருந்து , பிரிட்டனில் அனுமதி பெறாமல் திருட்டுத்தனமாக ஒரு குண்டூசியைக் கூட வேறு நாடுகளுக்கு கொண்டுபோவது கூட அந்தத் தூதரகங்களால் முடியாத காரியம் என்பதை அவன் விளங்கிக் கொண்டான். என்றாலும் கடைசியில் அவர்கள் சொன்ன ஒரு வார்த்தை அவன் மனதில் மின்னலடிக்க வைத்தது.

“யூலியன்! எங்களால் இவ்வளவுதான் செய்ய முடியும். இன்னும் விரிவாகப் பேச விரும் பினால் இந்த விடுதி வேண்டாம். உங்களை எங்கள் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லலாம். அங்கு பிரிட்டன் படைகள் உள்நுழைய அனுமதி கிடையாது. ஆறுதலாக அங்கே பேசிவிட்டு நீங்கள் பண்ணை வீட்டுக்குச் செல்லலாம்.”

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தான் யூலியன். அவனுக்கு தப்பும் வழி கிடைத்திருந்தது.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**




## உங்கள் செல்போன் ஒரிஜினல்தானா..?!

நீங்கள் அதிகம் விலைகொடுத்து வாங்கிப் பயன்படுத்தும் செல்போன்கள் அனைத்தும் ஒரிஜினல்தானா என்பதை சோதித்துப் பார்ப்பது கட்டாயமாகும். சில ஆயிரம் ரூபாய் முதல் பல ஆயிரம் ரூபாய்வரை கொடுத்து ஒரு புதிய செல்போனை வாங்கும்போது, அதனுடைய உண்மைத்தன்மையை அறிய வேண்டும் அல்லவா? உண்மையான நிறுவனத் தயாரிப்பாக இருக்க வேண்டும் இல்லையா? உண்மையான நிறுவனத்தைப் போன்றே எந்த வித்தியாசமும் தெரியாதவாறு தற்போது போலியான தயாரிப்புகள் ஏராளமாக விற்பனைக்கு வந்துவிட்டன. இதனால் அசல் எது? போலி எது என்று கண்டுபிடிக்க முடிவதில்லை.

**உங்கள் மொபைலில் *#06# என தட்டச்சிடுங்கள். உடனே உங்கள் மொபைல் போனுக்கான IMEI எண் காட்டப்படும். அந்த IMEI எண்ணை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.**

இவ்வாறான போலித் தயாரிப்பு மொபைல்களைக் கண்டறிய கீழ்க்கண்ட வழிமுறைகள் உங்களுக்கு உதவும். முதலில் நீங்கள் உங்கள் 'மொபைல் போன் ஒரிஜினல்'தானா என்பதைக் கண்டறிய International Mobile Equipment Identification எனப்படும் IMEI எண்ணை அறிந்துகொள்ள வேண்டும். உங்கள் மொபைலில் IMEI எண்ணைக் கண்டுபிடிப்பது எப்படி? சாதாரண செயல்பாட்டின் மூலம் IMEI எண்ணைக் கண்டறிய முடியும். உங்கள் மொபைலில் *#06# என தட்டச்சிடுங்கள். உடனே உங்கள் மொபைல் போனுக்கான IMEI எண் காட்டப்படும். அந்த IMEI எண்ணை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

அந்த IMEI எண்ணை ஒரு எஸ்.எம்.எஸ் வடிவில் தட்டச்சிட்டு 53235 என்ற எண்ணுக்கு அனுப்புங்கள் . இப்பொழுது உங்களுக்கு ஒரு எஸ்.எம்.எஸ் வரும்.அதில் Success என்ற செய்தி வந்திருக்கும். அப்படி வரவில்லையென்றால் உங்கள் மொபைல் போலியானது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். இந்த முறையில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் இணையத்தின் மூலமும் நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு**

**29**



● அடேல் பாலசிங்கம்

இலண்டனில் எமது அரசியல் பணியையும் புரிந்தோம். அதேசமயம் பாலா அரைமனதோடு தனது கலாநிதி ஆய்வைத் தொடர்ந்தார். வெற்றுக் கருத்தியல் தத்து வார்த் தங்களால் யாருக்கு என்ன பயன் என்பதே அவர் கொண்டிருந்த கருத்தாக இருந்தது. வருமானம் தேவை என்பதால் இலண்டனில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றில் இரவு வேளையில் பணிபுரியும் மருத்துவத் தாதியாக வேலையில் சேர்ந்தேன். விரைவிலே இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ திரும்பிச் செல்வோம் என்ற எதிர்பார்ப்போடு நாள்களை ஓட்டினேன். ஏனென்றால் , உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தாதித்தொழிலில் சலிப்பு அடைந்து இருந்தேன். மருத்துவத் தாதித்தொழில் எனது அடிப்படைத் தொழில். அதை விட எனக்கு வேறு தொழில் தகைமைகளும் கல்வித் துறைத் தகைமைகளும் இருந்தன. ஆகவே அவற்றை ஏன் பயன் படுத்தக் கூடாது அல்லது அவற்றை மேலும் ஏன் வளர்த்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கத் தோன்றியது. தாதித் தொழிலில் இருந்த ஒரே வாய்ப்புஎன்னவென்றால் , எனது தொழில் நேரத்தை நானே தெரிவு செய்யலாம் என்பதே. அதை விட தாதித்தொழில் ஆயாசம் தருவதாகவே இருந்தது.

பார்க்கும் தொழிலால் எற்பட்ட சலிப்பை ஒருபுறம் ஒதுக்கிவிட்டாலும், குடும்பத்தைப் பற்றியும் நான் சிந்திக்க வேண்டியிருந்தது. பல ஆண்டுகளாக பிள்ளையைப் பெறுவதைப் பற்றி சிந்திக்காமலே விட்டிருந்தேன். எனது வாலிப வயதிலும் இளம் பெண்ணாக இருக்கும் போதும் குழந்தைகள் பெற வேண்டும் என்று பேசுவதும் சிந்திப்பதுமாக இருந்தேன். ஆனால் வளர வளர அதைப் பற்றிப் பேசுவதே குறைந்தது. தாய்மை எய்த வேண்டும் என்ற நினைவே அற்றுப் போயிருந்தது. இப்போது திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழிய , முப்பத்தியொரு வயதில் எல்லா வற்றையும் தூக்கி எறிந்து விட்டு ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று விரும்பிக் கொண்டு இருக்கும் வேளையில் தாய்மை எய்துதல் உட்பட நான் தெரிவுசெய்யக் கூடிய அனைத்து வழிகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். நான் ஏன் கர்ப் பமாக வில்லை? என்பது சென்னையில் உள்ள போராளிகளுக்கு புதிராகவே இருந்தது. ஆனால் அதில் தவறு ஏதும் இல்லை. தமிழ்க் கலாசாரத்தில், திருமணமான உடனே கர்ப்பம் தரிப்பதும், தாய்மை எய்துவதும் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்வது இயல்பு. திருமணமாகி முதல் இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே ஒரு குழந்தையைக் பெற்று விட வேண்டும் என்று எந்தப் பெண்ணும் எதிர்பார்க்கப்படுவாள். பெரும்பாலான பெண்கள் முதல் ஆண்டிலேயே பிள்ளையைப் பெற்று விடுவார்கள். பேசிக் கட்டும் திருமணத்தில் மகப்பேறு, உறவைப்பலப்படுத்தி குடும்பச் சூழலை உருவாக்கிவிடும். இது ஒவ்வொருவர் மீதும் பரஸ்பரம் சிலபொறுப்புக்களைச் சுமத்தும். இதன் பின் கணவன் மனைவியிடையே சுமூக நிலை நிலவா விட்டாலும் , குடும்பத்திலிருந்து உறவை முறித்துக் கொள்வது சுலபமாகி விடாது. திருமணம் புரியும் போது எனது நோக்கம் பிள்ளைகளைப் பெறு வது அல்ல. நான் விரும்பிய மனிதரை மணந்து அவரோடு வாழ்வது சமூகத்தில் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காகவே திருமணம் புரிந்து கொண்டேன்.

(பதிவு தொடரும்)




09.04.2014 -15.04.2014

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சாதகமான வாரம். பொருளாதார நிலை ஏற்றமாக இருந்தாலும் தேவையான பொருள் உங்கள் தேவைக்கேற்ப கிடைத்துவிடும். நீங்கள் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி உங்கள் செயல்களில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். எதிரிகள் ஒதுங்கிப் போவார்கள். உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் பளு இருந்தாலும் தைரியத்துடன் அதைக் கடந்து விடுவீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல் நலமாக முடியும். புதிய யுக்திகளை வியாபாரத்தில் புகுத்த நினைப்பீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். . உங்கள் கோரிக்கைகளை தலைமையிடம் கூறிவிட்டு அமைதியாக இருக்கவும். கலைத்துறையினர் பல தடைகள் தாண்டி புதிய ஒப்பந்தங்களைச் செய்வார்கள்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

திருப்திகரமான வாரம். பெயரும் புகழும் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் யாவும் எதிர்பார்த்த முடிவைக் கொடுக்கும். ஆனாலும் திடீரென்று சில குழப்பங்களுக்கு ஆளாவீர்கள். மங்களகரமான நிகழ்ச்சிகள் நடத்துவீர்கள். வியாபாரிகள் படிப்படியாக முன்னேற்றம் அடைவார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். புழு பூச்சிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறைந்தே காணப்படும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையிடம் கவனமாக இருக்கவும். புதிய வாய்ப்புகளைப் பெற போட்டியிருக்கும். பெண்மணிகள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். மாணவமணிகள் முயற்சிக்குத் தகுந்தபடி கல்வியில் முன்னேறுவீர்கள்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் சமயோஜித புத்தி கைகொடுக்கும். செயல்களில் இருந்த முட்டுக்கட்டைகள் விலகும். விரக்தி, விரயங்களும் நீங்கி வருவாய் பெருகும். அதேசமயம் மற்றவர்களுக்கு உங்கள் பெயரில் பணம் வாங்கிக் கொடுப்பதைத் தவிர்க்கவும். வியாபாரிகள் சுறுசுறுப்புடன் வியாபாரம் செய்வார்கள். கவனத்துடன் இருந்தால் வீண் விரயங்களைத் தவிர்க்கலாம். விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி நன்றாக இருக்கும். பழைய குத்தகை பாக்கிகள் வசூலாகும். அரசியல்வாதிகளின் முயற்சி இவ்வாரம் வெற்றி பெறாது. மாணவமணிகள் பெற்றோர் மற்றும் சகோதரர்களால் நன்மை அடைவார்கள். ஆர்வத்துடன் எல்லா விளையாட்டுகளிலும் ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்கள் வேலையின்போது தொந்தரவுகள் அதிகரிக்கும். அதை புத்தி சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். சுபச் செய்திகளால் மன நிம்மதியடைவீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல் விஷயங்கள் சாதகமாக முடியும். ஆனாலும் கூட்டாளிகளுடன் கவனமாகப் பழகவும். விவசாயிகள் விளைச்சல் அதிகமாகி லாபம் பெறுவார்கள். புதிய குத்தகைகளா[illegible] மனம் திருப்தியடைவார்கள். அரசியல்வாதிகள் அனைத்து வேலைகளையும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பார். பெண்மணிகள் விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இல்லத்தில் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கலாம். மாணவமணிகள் முன்கூட்டியே கல்வியில் போதிய அக்கறை காட்டுங்கள்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

குதூகலமான வாரம். ஆக்கப்பூர்வமான சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பீர்கள். அதேசமயம் சமூகத்தில் உங்கள் மதிப்பு சற்று குறையும். உடல் ஆரோக்கியத்திலும் அசிரத்தையாக இருக்க வேண்டாம். மற்றபடி பணப்புழக்கத்திற்கு குறைவு இராது. வியாபாரிகள் கடுமையாக உழைத்து வருவாய் ஈட்டி, முக்கியப் பிரச்னைகளைச் சமாளித்து விடுவார்கள். விவசாயிகள் எதிர்பார்த்ததற்கும் மேலான பலன்களைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளைத் தேடி புதிய பொறுப்புகள் வந்து சேரும். பெண்மணிகள் இல்லத்தில் நிலவும் நிம்மதியான சூழ்நிலையால் திருப்தியடைவார்கள். மாணவமணிகள் கல்வியில் நல்ல முன்னேற்றத்தை அடைவார்கள்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்களின் விடாமுயற்சிகள் யாவும் வெற்றி பெறும். உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவினால் வேலையில் சுமை குறையும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் சலிப்பில்லாமல் உழைத்தால் பலன்களைப் பெறலாம். அரசியல்வாதிகளுக்கு பெயரும் புகழும் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் பாராட்டப்படுவீர்கள். தொண்டர்களின் ஆதரவுடன் நன்மை தரும் பயணங்களைச் செய்வீர்கள். பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். ஆன்மிக பலத்தைக் கூட்டிக் கொள்வீர்கள். மாணவமணிகள் படிப்பில் கவனம் செலுத்துவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இவ்வாரம் பெரிய திருப்பங்கள் எதையும் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அதனால் செய்யும் செயல்களை நேர்த்தியாகச் செய்து முடிக்க முயற்சி செய்யுங்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் தென்படும். அலுவலக வேலைகளில் இருந்து வந்த பிரச்னைகள் குறையும். மேலதிகாரிகளின் ஆதரவு சிறப்பாக இருக்கும். வியாபாரிகளைப் பொறுத்தவரை வ[illegible] செலவு விஷயங்களில் கவனமாக இருக்கவும். விவசாயிகளுக்கு கொள்முதல் லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு சமூகத்தில் அந்தஸ்து உயரும். புதிய படைப்புகளைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துவார்கள். பெண்மணிகள் ஆடை ஆபரணங்களை வாங்கி மகிழ்வார்கள். மாணவமணிகள் படிப்பில் முன்னேற்றத்தைக் காண்பார்கள்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

வேலைத் தொந்தரவுகளுக்கு ஆளாவீர்கள். இதனால் திட்டமிட்டபடி செயல்பட முடியாமல் போவதால் வீண் அலைச்சல்களும், உடல் சோர்வுகளும் உண்டாகும். ஆனாலும் வார இறுதியில் மாற்றங்கள் நிகழும். உயர்ந்த எண்ணங்களுடன் நீங்கள் செய்யும் முயற்சிகள் வெற்றியடையும். பணவரவும் நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் சுமுகமான சூழல் தென்படும். விவசாயிகளுக்கு லாபமும் நஷ்டமும் மாறி மாறி வரும். அரசியல்வாதிகளின் திட்டங்கள் சிறப்பாக நிறைவேறும். மாற்றுக் கட்சியினரும் ஒத்துழைப்பு அளிப்பார்கள். பெண்மணிகளுக்கு நெருங்கியவர்களுடன் விரோதம் ஏற்படலாம். எனவே கவனமாக இருக்கவும். மாணவமணிகள் சோம்பேறித் தனத்திற்கு இடம் தராமல் படித்து, நல்ல மதிப்பெண்களைப் பெறவும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

சந்தோஷமான வாரம். எந்த ஒரு காரியத்தையும் ஆழ்ந்து சிந்தித்து நன்கு செயல்படுத்துவீர்கள். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடியும். மனதிற்கு இனிய செய்திகள் வந்தடையும். உத்யோகஸ்தர்களுக்கு உழைப்பு கூடும். இருப்பினும் சக ஊழியர்கள் உங்கள் வேலையில் பங்கு கொள்வார்கள். வியாபாரிகளுக்கு கொள்முதலில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் கண்டனத்திற்கு ஆளாகலாம். ஆகையால் எதையும் தீர ஆலோசித்துச் செய்யவும். பெண்மணிகள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மாணவமணிகள் உழைப்பிற்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பதில் சிரமங்கள் ஏற்படும். இருப்பினும் மன உறுதியுடன் உங்கள் செயல்களைச் செய்வீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. வியாபாரிகளுக்கு கொள்முதல் வியாபாரம் நல்லபடியாக முடியும். விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டால் நஷ்டங்களைத் தவிர்க்கலாம். அரசியல்வாதிகள் பொறுப்புகளை உணர்ந்து செயல்படவும். பெண்மணிகள் ஆடை ஆபரணங்களை வாங்குவார்கள். கணவரிடம் தேவையான ஆதரவைப் பெறுவார்கள். மாணவமணிகள் பாடங்களை ஆழ்ந்து படிக்கவும். விளையாட்டுகளில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டால் வெற்றி பெறலாம்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உற்சாகமான வாரம். பொருளாதாரத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். உறவினர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவார்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அலுவலக ரீதியான பயணங்கள் செய்வதன் மூலம் புதிய அனுபவங்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு இந்த வாரம் சுமாராக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். அரசியல்வாதிகளிடம் கட்சி மேலிடம் கருணையுடன் நடந்து கொள்ளும். பெண்மணிகள் கணவரிடம் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். மாணவமணிகள் முயற்சிக்கு ஆசிரியரிடம் பாராட்டு கிடைக்கும்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சிறப்பான வாரம். எதிர் வரும் இடையூறுகளைத் தகர்ப்பீர்கள். மூத்த சகோதர சகோதரிகளால் ஆதாயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துகளில் இருந்த இல்லங்கங்கள் விலகும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். வியாபாரிகள் புதுப்புது யுக்திகளைக் கையாண்டு வியாபாரத்தைப் பெருக்குவார்கள். அதோடு புதிய முதலீடுகளிலும் நீங்கள் ஈடுபடலாம். விவசாயிகள் முயற்சிகளைத் தீவிரப்படுத்தி வருமானத்தைப் பெருக்குவார்கள். அரசியல்வாதிகளின் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். இதனால் சமூகத்தில் பெயரும் புகழும் அடைவீர்கள். பெண்மணிகள் கணவரிடம் நேசமாகப் பழகி பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளவும். மாணவமணிகள் நீண்டகாலத் திட்டங்களைத் தீட்ட இது உகந்த நேரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயத் தீவில் மந்திரக் கிழவி




மாயக்கிழவிக்கு ஆத்திரம் மேலிட்டது. வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாக பலிகொடுக்கும் நேரத்தில் இளவரசர்கள் இருவரும் காணாமல் போனதால் பெரும் குழப்ப மடைந்தாள். எனினும் சட்டெனத் தன் னைச் சுதாகரித்துக் கொண்டு மாயக் கண்ணாடி யை வெளியே எடுத்தாள்.

''ஏய் மாயக்கண்ணாடியே! அந்த இரண்டு குட்டிச்சாத்தான்களும் எங்கோ ஒளிந்திருக்கிறார்கள் என்று காட்டு" என்று கூவினாள். ஆனால் அதற்கிடையில் பலி கொடுக்கும் இடத்திற்கு அண்மையாக வுள்ள சிறு குன்று ஒன்றில் இருந்த ஒலித்த இந்திரவர்மனின் குரல் அவளைத் திடுக்கிட வைத்தது.

"அட! அற்ப பாதர்களே! என்னுடைய வசியப்புகையில் இருந்து எப்படித் தப்பினீர் கள்" என்று ஆச்சரியமும் ஆத்திரமும் கலந்த குரலில் கேட்டாள் மந்திரக்கிழவி. அதற்கு பதில் ஒன்றும் கூறமால் வெறும் சிரிப்பை மட்டுமே உதிர்த்தான் இந்திரவர்மன். உடனே மந்திரக்கிழவி திரும்பவும் தன்னு டைய மாயக்கோலைச் சுழற்றி இளம் பச்சை நிற வசியப் புகையை உண்டு பண்ணி இளவ ரசர்களை நோக்கி ஏவினாள்.

"கிழவியே! உன்னுடைய மாயப்புகை எங்களை ஒன்றும் செய்யாது. நீ முன்னர் வசியப் புகையை ஏவியபோது நாம் எமது குருநாதரை நினைத்து உச்சரித்த மந்திரங்கள் எம்மைக் காப்பாற்றின. எனவே இப்போதும் எங்க ளால் உன்னிடமிருந்து இலகுவாகத் தப்பிக்க முடியும்" என்று சிரித்தபடியே கூறினான் சந்திரவர்மன்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

## கவனச்சிதறல் தோல்வியைத் தரும்




ஒரு துறவி அவரது சீடன் ஒருவன் தோட்டத்தை சுத்தம் செய்வதை பார்த்துக் கொண்டிருந்தார். அவன் அதிக நேரமாக ஒரே வேலையை செய்தும் சுத்தம் இல்லாமல் இருந்தது.

ஜென் துறவி அவனை அருகில் அழைத்து ஒரு கதையை கூறினார்.

ஒரு முறை ஓர் சிறந்த ஓவியன் அவருடைய திறமையை முன்வைத்து ஒரு ஓவியத்தை வரைந்து, பின் அவருடைய சக தோழனிடம் எப்படி இருக்கிறது என்று கேட்டார்.

தோழனும் இது நன்றாக இல்லை என்று கூறினார். மீண்டும் மீண்டும் அந்த ஓவியர் வரைந்த வற்றை சரிசெய்ய, தோழனோ நன்றாக இல்லை என்று சொல்லி கொண்டு இருந்தார்.

அதனால் அந்த ஓவியர் தன் தோழனிடம், நீ போய் எனக்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா! என்று தோழனை அனுப்பி விட்டு, பின்பு அவர் ஓவியத்தில் முழு கவனம் செலுத்தி ஓவியத்தை வரைந் தார்.

தண்ணீர் கொண்டு திரும்பிய தோழன், அந்த ஓவியத்தை கண்டு ஆச்சரியத்துடன் படு அற்புதம் என்று சொல்லி, அவரை பாராட்டி னான். ஆகவே எந்த ஒரு செயலையும் நாம் நம் முழு கவனத்துடன் செய்வதால் வெற்றி நிச்சயம்.

அதைவிட்டு அந்தச் செயலை பிறர் பார்க்கின் றனரே என்று ஒரு பயத்துடன் செய்தால், அது ஒரு முழுமையை தராது என்று துறவி அந்த சீடனுக்கு கூறினார்

## அமிலங்கள் பலவிதம்

- எலுமிச்சை பழத்தில் உள்ள அமிலம் எது?
  சிட்ரிக் அமிலம்.
- சிறுநீரில் உள்ள அமிலம் எது?
  யூரிக் அமிலம்.
- எறும்பின் கொடுக்கில் உள்ள அமிலம் எது?
  போர்மிக் அமிலம்.
- புளித்த பாலிலில் உள்ள அமிலம் எது?
  லாக்டிக் அமிலம்.
- கெட்டுப்போன வெண்ணெயில் உள்ள அமிலம் எது?
  பியூட்டிரிக் அமிலம்.
- புளி, திராட்சை, அப்பிள் இவற்றில் உள்ள அமிலம்எது?
  டார்டாரிக் அமிலம் .
- வினிகரில் உள்ள அமிலம் எது?
  அசிட்டிக் அமிலம்.
- அப்பிளில் மட்டும் உள்ள அமிலம் எது?
  மாலிக் அமிலம்.
- தக்காளியில் உள்ள அமிலம் எது?
  ஒக்ஸாலிக் அமிலம்.
- கொழுப்புகளில் உள்ள அமிலம் எது?
  ஸ்டீயரிக் அமிலம்.
- பித்தநீரில் உள்ள அமிலம் எது?
  கோலிக் அமிலம்.

## விடுகதைகளும் விடைகளும்

**01.** பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்த வாய். அவள் யார்?
-கிளி-

**02.** அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள். அது என்ன?
-அம்மி, குளவி-

**03.** கன்று நிற்க கயிறு மேயுது. அது என்ன?
-பூசணிக்கொடி-

**04.** கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
-கரும்பு-

**05.** பிடுங்கலாம். நடமுடியாது. அது என்ன?
-தலைமுடி-

**06.** வாலால் நீர் குடிக்கும், வாயால் பூச்சொரியும். அது என்ன?
-விளக்கு-

**07.** நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய். அது என்ன?
- நாய்-

**08.** உயரத்தில் இருப்பிடம். தாகம் தீர்ப்பதில் தனியிடம். அது என்ன?
-இளநீர்-

**09.** குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும். அவன் யார்?
-கத்தரிக்காய்-

## சிறுவர் உலகு



## பிரபலமாகாத தினங்கள்

காதலர் தினம், நண்பர்கள் தினம், பெண்கள் தினம் என நாம் தற்போது பல்வேறு தினங்களைக் கொண்டாடி வருகிறோம். இதுபோன்று இன்னும் எத்தனையோ பிரபலமடையாத தினங்கள் உள்ளன. இதையெல்லாம் நினைவில் கொள்ளுங்கள். ஒரு வேளை எதிர்காலத்தில் இவற்றையும் நாம் கொண்டாட வேண்டி வரலாம் .


- ஜனவரி 19 - சர்வதேச மதங்கள் தினம்
- பெப்ரவரி 2 - புனித வாழ்வுக்கான தினம்
- பெப்ரவரி 21 - சர்வதேச தாய்மொழிகள் தினம்
- மார்ச் 6 - சர்வதேச புத்தகங்கள் தினம்
- மார்ச் 8 - சர்வதேச பெண்கள் மற்றும் அமைதி தினம்
- மார்ச் 22 - சர்வதேச தண்ணீர் தினம்
- மார்ச் 23 - சர்வதேச தட்பவெப்ப நிலை தினம்
- ஏப்ரல் 15 - சர்வதேச நூலகர்கள் தினம்
- ஜூன் 15 - சர்வதேச மேஜிக் வித்தை தினம்
- ஜூன் 20 - சர்வதேச அகதிகள் தினம்.
- ஜூன் 27 - சர்வதேச நீரிழிவு நோய் ஒழிப்பு தினம்.
- ஒகஸ்ட் 12 - சர்வதேச இளைஞர் தினம்
- ஒக்ரோபர் 1 - சர்வதேச முதியோர் மற்றும் ரத்ததான தினம்
- ஒக்ரோபர் 2 - சர்வதேச அகிம்சை தினம்
- ஒக்ரோாபர் 10 - சர்வதேச மனநல நாள்
- ஒக்ரோபர் 30 - சர்வதேச சிக்கன நாள்
- டிசெம்பர் 3 - சர்வதேச ஊனமுற்றோர் தினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைந்து போகும் வாழ்வு

ஏ.சஜிதா
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய மகா வித்தியாலம்.

புகைத்தல் பழக்கம்போல் உலக மக்களைப் பிணித்துள்ள கெட்ட பழக்கம் வேறொன்றுமில்லை. புகையாகவோ, பொடியாகவோ, மென்று சாறாகவோ அல்லது நிக்கொட்டின் தண்ணீராகவோ - எந்த வடிவத்தில் அதைப் பயன் படுத்தினாலும் கெடுதல் தான். அதனால் 'புகைத்தலால் நன்மை உண்டு' என்று எதையுமே குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. உண்மை இப்படி இருக்க



இன்னமும் ஏராளமானோர் புகைப்பழக்கத்தை நாடும் காரணம் என்ன? புகைத்தல் மூலம் கிடைக்கும் மயக்க சுகத்தை மக்கள் விரும்புகின்றனர். மூளையையும் நரம்புகளையும் அப்பொழுது பரபரப்பு நீக்கிச் சாந்தப்படுத்திக் கவலை, களைப்பு, பசி, சிடுசிடுப்பு இவற்றினின்றும் தற்காலிக விடுதலையைப் புகைத்தல் வழங்குகின்றது. நாளா வட்டத்தில் 'இது கெடுதல்" என்று மனதில் படும். ஆனால் அப்பொழுது இந்தப்பழக்கத்தை விட்டு விடுவதென்பது சுலபமல்ல. இந்தக் கெட்ட பழக்கத்துக்கு கொத்தடிமை ஆகிவிட்டவனுக்கு எப்படியாவது இதைவிட்டு விட வேண்டுமென்று நினைக்கக்கூட நெஞ்சு துணியாது.

புகைத்தலில் உள்ள நிக்கொட்டின் மனிதனுக்கு தெரிந்த கொடிய விஷங்களில் ஒன்று. கலப்பற்ற சுத்தமான நிக்கொட்டினில் அரைத்துளி போதும்,உயிருக்கு ஆபத்தை விளைவிக்க. ஏனெனில் இந்த நஞ்சுக்கு முறி மருந்து ஒன்றும் இல்லை. புகைத்தல் பொருள்களை முதன் முதலாக உபயோகிக்கும்பொழுது அருவருப்பும் ,கிறுகிறுப்பும், வாந்தியும் ஏற்படுகின்றன. ஆயினும் உட்கொண்டு பழக்கப்பட்டதும் இவையெல்லாம் மறைந்து போகின்றன. ஆனால் விஷம் உடம்பில் ஏறிக் கொண்டேயிருக்கும். அதில் ஒரு சுக மயக்கம்! போதை ஊட்டும் மற்றப் பொருள்கள் மாதிரியே புகைத்தலையும் அளவில் கூட்டிக் கொண்டே போக வேண்டும். அப்பொழுதுதான் அந்த சுகம் கிட்டும்.

### புகைப்பதால் என்ன நடக்கும்?

புகைப்பொருள்களில் காணப்படும் நிக்கொட்டின் நரம்பையும், இரத்தக் குழாய்களையும் சீர்குலைத்து விடும். இதனால் வாய், உதடு ஆகியவற்றின் திசுக்களும் கெட்டுப்போகின்றன.


நரம்பைப் பாதிப்பதால் புகைத்தல் என்பது கைவிடமுடியாத ஒரு பழக்கமாக மாறிவிடும். நரம்பின் முறுக்கைத் தளர்த்தி பிறகு உடம்பில் ஒரு வேகத்தை உண்டாக்குகின்றது. நெஞ்சு நெறுக்கெண்ணும் போது, நரம்பில் ஏறும் சூட்டைத் தணிக்க எதையாவது நாடுகிறார்கள். ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து அதன் மூலம் அந்த ஆறுதலைத் தேடுகிறார்கள். முதல் இழுப்பில் நிக்கொட்டின் உள்ளே போகும். கொஞ்சமானாலும் நரம்பைத் தளர்த்தி விட அது போதும். அதனால் சிகரெட்டை முழுவதும் குடித்து முடித்து விடுகிறார்கள். ஒரு சிகரெட்டைக் குடித்து முடிந்ததும் உள்ளே சென்ற விஷம் இப்பொழுது வேகத்தை பிறப்பித்து இன்னொரு சிகரெட்டை நாடப் பண்ணுகிறது. புகையுடன் உட்புகுத்த நிக்கொட்டினும் தாரும், மூச்சுக்குழல், நுரையீரல் ஆகியவற்றின் உட்புறங்களை பாதித்து புற்றுநோய்க்கு வித்திடுகின்றன. புகைபிடிக்காதவர்களை விட புகை பிடிப்பவர்களுக்கு புற்று நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.வயது வந்தவர்கள் புகைபிடிப்பதால் 1.8 பாகை அளவுக்கு இரத்தக் குழாய்களை சுருங்கப்பண்ணி விடுகிறது. இதனால் இரத்தக் குழாய்கள் இறுக்கமாகி மாரடைப்பு உண்டாகலாம்.

### புகைத்தலை எவ்வாறு நிறுத்துவது?

பொல்லாத இந்தப்பழக்கத்தை நிறுத்துவது என்பது கடினமான காரியம் தான். இதைச் சாதிக்க நிறைய மனஉறுதி வேண்டும். தேவையற்ற கவர்ச்சிக்கு உட்படாதிருக்க புகைத்தலைத் தூண்டும் இடங்களுக்குச் செல்லக்கூடாது. புகை பிடிப்பவர்களோடு பழகுவதும் உதவாது. புகைப்பழக்கத்தை விட்டுவிட நினைக்கும் போது எத்தனையோ சோதனைகள் வரும். அவற்றையெல்லாம் பொறுமையைக் கடைப்பிடித்து சமாளிக்க வேண்டும். உள்ளேயிருந்தும் சோதனைகள் வரலாம். வெளியில் தோழர்கள் மூலம் வரலாம். வாட்டம் தரும் உணவையும் நிறைய பழம், காய்கறி வகைகளையும் உட்கொண்டு தேகப்பயிற்சியும் நிறையச்செய்தால், புகைத்தல் மோகத்தை கட்டுப்படுத்தி விடலாம்.

"செத்தாலும் சாவேனே தவிர இந்த முயற்சியில் தோல்வியை ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்னும் அளவுக்கு நெஞ்சில் உறுதி நிலைத்திருக்க வேண்டும். முயன்று முயன்று இந்தக்காரியத்தில் வெற்றி கண்டவர்கள் அதிக ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். "எனக்காக இந்த ஒரு தடவை மட்டும்" என்று சிகரெட்டை நீட்டிக் கேட்டுக் கொள்ளும் நண்பர்கள் வார்த்தைகளுக்கு இணங்கிவிடலாகாது. இணங்கினால் பிறகு இந்தக் கெட்ட பழக்கத்தை விட்டு விடுவது அத்தனை சுலபமன்று.

இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் இந்தப் புகைத்தல் அசுரப் பிடியாகப் பற்றிக் கொள்வதைப்பார்க்கும் போது இந்தப் பழக்கம் சிறுவர்களைப் பற்றாமல் இருக்கச் சொந்த நடத்தையாலும் நற்போதனையாலும்அவர்களுக்குக் கற்பிப்பதில் எத்தனை கவனம்




செலுத்தவேண்டுமென்பது தெளிவாகிறது. நன்றாக வாழ அவர்களுக்கு நாம் கற்பிக்க வேண்டும். நல்ல சகவாசம் வெகு வெகு முக்கியம் . நண்பர்கள் எப்படியோ அப்படித்தானே அவர்களும் இருப்பார்கள். எனவே ஒவ்வொருவரும் தத்தம் பிள்ளைகளைக் கண்காணித்து இது போன்ற தீயபழக்கங்கள் அவர்களை நெருங்காதிருக்க வழி செய்யவேண்டும்.

## இன்னொரு இணையக்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பெண் தன்னைத்தானே பிடித்துக் கொண்ட புகைப்படமாகவோதான் அவற்றில் அநேகமானவை உள்ளன. எனவே இருவருக்கும் இடையிலான காதல் குறித்த பலமான ஆதாரங்களாக இவற்றைக் கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியே.

இயல்பிலேயே மென்மையான மனமும் தனிமை விரும்பியுமான நிருபன் தனது உயிரை மாய்த்துக்கொள்ளும் முடிவை எடுத்த பின்னர் ஏன் தனது காதலியின் மானத்தை கப்பல் ஏற்ற முடிவெடுத்தார் என்பதும் புரியாத புதிரே. சிலவேளைகளில் தன்னுடைய சாவின் மூலம் அவளைத் தண்டிக்க நினைத்திருக்கலாம். ஆனால் அந்தப் பெண்ணின் விபரங்களையும் புகைப்படங்களையும் பகிரங்கப்படுத்தியதன் மூலம் குறித்த பெண்ணை மாத்திரமல்லாது அவள் சார்ந்த குடும்பத்தவரையும் மீளமுடியாத உளத் தாக்கத்துக்கு நிருபன் உட்படுத்தியிருக்கிறான்.

இதைவிட அநேக இணையத்தளங்கள் தங்கள் பரபரப்புக்காக நிருபனின் கடைசி வாக்கு மூலத்தையும் குறித்த பெண்ணின் புகைப்படங்களையும் விற்பனைப் பொருள்களாக்கின. இதனால் ஏற்படுகின்ற பின்விளைவுகளை அந்த இணையங்கள் கிஞ்சித்தும் கணக்கில் எடுக்கவில்லை. அவசரத்தனமான முடிவெடுத்து உயிரைத் துறந்த இளைஞனின் வாக்குமூலத்தை எந்தவித மறுபரிசீலனைக்கும் உட்படுத்தாமல் அப்படியே வெளியிடுவதன் மூலம் தங்கள் ஊடக தர்மத்தை அவை கொன்று புதைத்திருந்தன.

காதல் தோல்விகளுக்கு தற்கொலைதான் தீர்வென்றால் உலகில் உள்ள அனைவரும் தூக்கில்தான் தொங்கியிருக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் எடுக்கும் அவசரத்தனமான முடிவுகள் தவறான காதலுக்கும், தோல்விக்கும், அதன் பின்னான தற்கொலை போன்ற முடிவுகளுக்கும் காரணமாகின்றன. நிருபனின் சாவு துயரமானது. அந்த இளைஞன் நிதானித்திருந்தால் இந்தத் தோல்வியில் இருந்து வெளியேறி தன் ஒளிமயமான எதிர்காலம் நோக்கிப் பயணித்திருக்க முடியும். ஆனால் தன்னம்பிக்கையற்ற சூழலில் அவன் எடுத்த முடிவு அவன் குடும்பத்தையே கண்ணீர்க்கடலில் தள்ளிவிட்டது. இனியாவது சமூக வலைத்தளங்களை அளவோடு பயன்படுத்தவும், தோல்விகளுக்கு தற்கொலைதான் தீர்வென்ற நிலையில் இருந்து மாறவும் இளைஞர்கள் முயலவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - டயானா தம்பதியின் 2ஆவது மகன் ஹரி. இவர் இராணுவத்தின் விமானப் படையில் அப்பாச்சி ஹெலிக்காப்டரின் விமானியாக பணியாற்றி வருகிறார்.
முடிசூட்டும் இளவரசர்கள் பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளார். இவர் கிரஸ்சிடா போனஸ் என்ற பொப் பாடகியை காதலிக்கிறார்.
விரைவில் இவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறும் என்று இவர்களின் நண்பர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.




## பறக்கும் கார் தயாரிப்பில் நிறுவனங்கள் போட்டி

டிரான்ஸ்சிஷன் என்ற பெயரில் உலகின் முதல் வணிக ரீதியிலான பறக்கும் காரை அமெரிக்காவின் டெர்ராஃபியூஜியா நிறுவனம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது. ரூ.1.43 கோடியில் அறிமுகம் செய்யப்பட்ட அந்தக் காருக்கு 100 பேர் முன்பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில், அடுத்ததாக மின்சாரம் பறக்கும் காரை தயாரிக்கும் பணியில் டெர்ராஃபியூஜியா இறங்கியுள்ளது. டிஎஃப்-எக்ஸ் என்ற பெயரில் வடிவமைக்கப்படும் இந்த புதிய பறக்கும் மின்சாரக் காரை வடிவமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாகவும், இத்திட்டம் நிறைவுபெறுவதற்கு 8 முதல் 12 ஆண்டுகள் பிடிக்கும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
மேலும், புதிய பறக்கும் மின் காரின் விபரங்களையும் வெளியிட்டிருக்கிறது.

1. இந்த கார் மின் மோட்டார் மற்றும் பெற்றோல் எஞ்சின் ஆகிய இரண்டிலும் இயங்கும் வகையில் வடிவமைக்கப்படும். 4 பேர் பயணம் செய்யும் வசதியை கொண்டிருக்கும்
2. தரையில் செல்லும்போதும், உயர எழும்புவதற்கும், இறங்குவதற்கும் மின் மோட்டார் துணைபுரியும். ஆகாயத்தில் பறக்கும்போது பெற்றோல் எஞ்சின் துணைபுரியும்.
3. கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட டிரான்ஸ்சிஷன் பறக்கும் காருக்கு ஓடுபாதை அவசியம். ஆனால், இந்த பறக்கும் கார் தரையில் இருந்து ஹெலிகாப்டர் போன்றே செங்குத்தாக மேலே எழும்பும் என்பதால் ஓடுபாதை தேவையில்லை.
4. இதனை ஓட்டுவதற்கு வெறும் 5 மணி நேர பயிற்சி போதுமானது.
5. குறைந்தது 800 கிமீ தூரம் இடைநில்லாமல் செல்ல முடியும்.



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள Museum of Hunting and Wildlife என்னும் வனவிலங்கு அருங்காட்சியகத்தில் உள்ள கரடியின் வயிற்றில் ஆப்ரகாம் போயின்சேவல்(43) என்ற நபர் தஞ்சம் புகுந்துள்ளார்.
தான் யாருடைய கண்ணிலும் படப்போவதில்லை என கூறிய இவர் விதைகள், காளான், பூச்சிகள், மீன்கள் உள்ளிட்ட தின்பண்டங்களை உண்பதற்கு வைத்துக்கொண்டுள்ளார். இது மட்டுமல்லாமல் 30 லீற்றர் நீர் மற்றும் படுக்கையுடன் கரடியினுள் குடிபெயர்ந்துள்ளார்.
இதுகுறித்து இவர் கூறுகையில், இரண்டு வாரங்களுக்கு கரடியினுள்ளேயே உறங்கி கொண்டிருப்பேன் என்றும் தினமும் இரண்டு மணிநேரம் உடற்பயிற்சி செய்வேன் எனவும் கூறியுள்ளார். இதேபோல் விசித்திரமான முயற்சியை செய்ய எண்ணிய ஆப்ரகாம் கடந்த 2002ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டை நடந்தே வலம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



அனைவரும் வியக்கும் வகையில், சீன ஸ்மார்ட் போன் ஒன்று, உலக தரத்துக்கு உயர்ந்துள்ளது. அது தான், 'ஷவோமி' மொபைல் போன். இது, விற்பனைக்கு வந்த, ஒரு மணிநேரத்தில், ஒரு லட்சம் போன் விற்பனை ஆனது. சீன நிறுவனமான, ஹவேய் தயாரிப்பான ஸ்மார்ட் போன்கள் ஏற்கனவே சந்தையில் இருக்கும்போதே, ஷவோமி ஒரு கலக்கு கலக்கி வருகிறது. விற்பனையில் சாதனை படைத்துள்ள இந்த போன், சீனாவில் பாக்ஸ்கோன் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. இங்கு தான், அப்பிள் ஐபோன் மற்றும் ஐ பாட் என்பன தயாரிக்கப்படுகின்றன.

## அரண்மனையில் ஒரு குடும்பம்

மிசோரம் மாநிலம், பாக்தாங் என்ற கிராமத்தைச் சேர்ந்த, 70 வயது சயோணா சனா என்பவர், 39 மனைவிகளை மணந்து, இருபது படுக்கை அறை கொண்ட அரண்மனை போன்ற வீட்டில் 94 குழந்தைகள் மற்றும் 33 பேரக் குழந்தைகளுடன், வாழ்ந்து வருகிறார்.
இவர் தந்தை, சனா, பல திருமணங்கள் செய்ததால், கிறிஸ்தவ சபையிலிருந்து, வெளியேற்றப்பட்டார். உடனே, அவர், 'சனாபால்' என்றொரு, புதிய கிறிஸ்தவ அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவரானார். அத்துடன், 'இந்த சபையில் சேருவோர் எத்தனை திருமணங்கள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்...' என, அறிவித்தார்.
தந்தையின் மறைவுக்கு பின், இந்த அமைப்புக்கு, தலைவர் ஆனார் சயோணா. இவர், 17 வயதில் முதல் திருமணம் செய்தபோது, மனைவியின் வயது இருபது. ஒரே ஆண்டில், பத்து திருமணங்கள் செய்துதிருக்கிறார். மேலும் பல திருமணங்களை செய்து கொள்ள போவதாக கூறியுள்ளார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராசாத்தியும் பச்சைக்கிளியும் வயசுக்கு வந்து விட்டனர். இளையவளிற்கு பன்னிரண்டு வயது பச்சைக்கிளியோ இரண்டு வயசு இளையவள். மணியத்தார் தங்கமான மனுசன் என்றாலும் ஞாயிற்றுக்கிழமை என்றால் குடிக்கு அடிமை.**

# "பாசத்துக்காக"

**வீ.வினுஷியா**



சிறுகதை

பச்சைப் பசேலன வயல்கள் நிறைந்த கிரா மத்தில் சந்தோஷமாக வாழ்ந்து மணியத்தார் குடும்பம். மணியத்தாருக்கு சொந்தமாக வயல் காணி இருந்தது. பருவ காலம் வந்த தும் எங்கையாச்சும் கடனை வாங்கி நெல்லை விதைச்சு உடம்பைவருத்திவேலைசெய்து கதிர்களை அறுவடை செய்து கடனை அடைக்கும் மணியத்தார் ஊரறிந்த சிறந்த மேசனும் கூட! மூத்தவளான பச்சைக்கிளி பெயருக் கேற்றாற் போல் செல்லம்பேசும் கிளியாகவேஇருந்தாள். இளையவளான இராசாத்தி "ஒரு நாட்டையே ஆளக் கூடிய திறமை வாய்ந்தவளாக இருந்தாள். பெண்கள் செய்யக் கூடாது என ஒதுக்கிய வேலைகளையெல்லாம் திறமை யோடு செய்தாள். ஒரு முறை வயலில் மணியத்தார் மண்வெட்டியால் பண்படுத்தும் போது "கனகம்" மரப்பொந்தினுள் தேன் எடுக்க கை வைக்கை யில் உள்ளிருந்த நாகபாம்பு கொத்தியதால் இறந்து போனாள். தாய் இறந்த நாளிலிருந்து ,குடும்பப் பொறுப்பு முழுவதையும் இரு பிள்ளைகளும் தங்களது தலையில் சுமக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய ஒரு நிலையில் இராசாத்தியும் பச்சைக் கிளியும் வயதுக்கு வந்து விட்டனர். இளையவளிற்கு பன்னிரண்டு வயது பச்சைக்கிளியோ ரெண்டு வயசு இளையவள். மணியத்தார் தங்கமான மனுசன் தான் என்றாலும் ஞாயிற்றுக்கிழமை என்றால் குடிக்கு அடிமை. குடித்து விட்டு வீட்டுக்கு வந்து இரவு சாப்பிடாது ஏதாவது பழங்கதை புசத்திக் கொண்டிருப்பார். மணியத்தாரின் நடவடிக்கை பிள்ளைகளுக்கு சலிப்பை ஏற்படுத்தினாலும் " பெண் பிள்ளைகளாச்சே! தகப்பனை விட்டால் எங்கே போவது?" என்ற எண்ணமே மேலிட்டது. இதை எண்ணியே வாழ்ப்பழகிக் கொண்டார்கள். இருவரும் படிப்பை பாதியிலேயே நிறுத்திக் கொண்டார் கள்.

ஊராரும் " என்னடா உன்ரபிள்ளைகளைப் படிப்பியண்டா" எனப் பலரும்பல விதமாகக்கேட்க, மணியத்தாரும் "பெண்பிள்ளைகள் அதிகம்படிச்சுக் கிழிக்கக் கூடாது அதுகுடும்பத்திற்கும் ஆகாது" எனக் கூறிச் சமாளிச்சுக் கொள் ளுவார்.

இளையவளும் பெரிய மனிசி ஆகிவிட்டாள். மணியத்தாருக்கு பல யோசனைகள் மூளையைக் குழப்பத் தொடங்கின. "என்னைக் கொண்டவளும் தனியே போயிட்டாள். எப்படிக் கஷ்டப் பட்டேனும் பிள்ளைகளைக் கரை சேர்த்திட வேண்டும்" என்ற எண்ணமே அவரின் மனதில் ஓடியது. இதனால் குடிப்பதையே நிறுத்தி கடுமையாக உழைக் கத் தொடங்கினார்.

சில காலத்திற்கு பிறகு பச்சைக்கிளிக்கும் வரன் ஒன்று பக்கத்து ஊரிலிருந்து தேடி வந்தது. அவர்கள் சீதனம் வேண் டாம் என்று கூறியும் மணியத்தார் மனம் கேளாது தன் வயலையே எழுதிவைத்தார். திருமணமும் இரு வீட்டார் சம்மதத்துடன் இனிதே நிறை வேறியது. பச்சைக்கிளியை தங்களு டைய ஊருக்கு கூட்டிச் சென்றுவிட்டார்கள்.

இராசாத்தி இப்ப தனிச் சுப் போயிட்டாள். பேச்சுத் துணை க்கு ஒருத்தருமில்லை. விடியற் காலமை எழும்பி வேலைக் குப் போற தகப்பனுக்கு ஏதாவது சாப்பிடச் செய்து கொடுக் கணும். மதியம்,இரவு எனசாப் பாட் டுப் பட்டியல் நீளும். மாட்டைக் கவனிக்க வேணும், வீட்டைக் கவனிக்க வேணும் என வேலைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும் .

**"என்னடா மணியம் அவளை வைத்தியசாலைக்கு கொண்டு போனால் உயிர் பிழைக்க வாய்ப்பி ருக் கடா! அழுது ஒன்றும் நடக்கப் போவதில்லை. கொண்டு போவம் எழும்படா" தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஊராக்களின் துணையுடன் ஓட்டோ ஒன்றைப் பிடிச்சுக் கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு போனார்கள்.**

இராசாத்திக்கு தாயின்தமையனுடைய மகனைப்பேச மாமனார் குடும்பம் விரும்பியது. "சீதனம்ஒன்றும் வேண்டாம். உங்கள் மகளைத் தந்தாலே போதும்" எனக் கண்டிப்பாகக்கேட்டார்கள். மணியத்தாருக்கு ஒரு புறம் சந்தோஷமாக இருந்தாலும் உடனே சம்மதிக்கவில்லை. "மூத்தவளும் இன்னொரு ஊருக்குப் போயிட்டாள். இப்ப இவளும் போய்விட்டால். நான் கடைசியில யாருமேயில்லாத அநாதையாகத் தான் இறுதி மூச்சு விட வேணும். அதனால் அவள் என்னுடன் இந்த வீட்டில என் கண் முன்னாடி பிள்ளை குட்டியோடை சந்தோஷமாக வாழணும்" என அன்புக்கட்டளை போட்டும் விட்டார்.

கலியாணமும் முற்றாக்கியாச்சு , ஓரிரு நாள்களில் கலியாணம் என்றிருந்த நிலையில் விதி விளையாடியது. காலமை ஒரு ஏழுமணி இருக்கும். இராசாத்திக்கு நாய்க ளைக் கண்டால் அலாதிப் பிரியம். பக்கத்து ஊர் விசர் நாய் ஒன்று அவளுடைய ஊருக்கு வந்தது. "நாயைப் பிடிச்சுக் கட்டுங் கோ" என யாரோ கூற அவளும் அது விசர் என்று அறியாதவளாக அந்த நாயைக் கலைத்துப் பிடித்து கழுத்தில் சங்கிலியை மாட்டிக் கட்டியது தான் தாமதம். "கவக் கவக்" என்று அவளைக் கிடத்தி குதறத் தொடங்கியது நாய். தெய்வாதீனமாக தன்னருகில் ஊன்றியிருந்த அலவாங்கை எடுத்து அந்தநாயின் முகத்தில் முழுப்பலத்தையும் பிரயோகித்து குத்தி னாள். பல்லு உடைந்து குரல்வளையை அலவாங்கு கிழித்தமையால் இரத்த வெள்ளத்தில் மிதந்தது நாய்.

இவற்றை எல்லாம் நாய்ப் பயத்தில் பூவரசம் மரத்திலேறி பார்த்துக் கொண்டிருந்த நடேசன் மணியத்தாரிடம் ஓடோடிச் சென்று செய்தியைக் கூறி னான். ஆனால் அவளோ மெதுமெதுவாக சுய நினைவைஇழக்கத்தொடங்கினாள். பின் னிக் கொண்டிருந்த கிடுகைத் தூக்கி எறிந்து "நீ என்னடா பார்த்துக் கொண்டு நிண்டனி. நீ பெடியன் தானே? பெட்டச்சி மாதிரி ஒழிஞ்சிட்டாய். நீ எல்லாம் இருந் தென்ன பயன்..." எனப் பலவாறாக தூற்றிதலையில்கையை அடிச்சுக்கொண்டே ஓடோடி வந்தார் மணியத்தார். அவளைத் தூக்கி கதிரையில் அமர வைத்தார். "என்ர அம்மாவுக்கு என்ன நடந்தது.." எனப் பலவாறாக புலம்பு வதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவே தோன்றவில்லை. நாய் கடித்த விஷயம் ஊர் முழுவதும் பரவி விட்டது. பக்கத்து வீட்டுத் தனம் நல்லெண்ணையைக் கொண்டு வந்து தலையில் ஊற்றினாள்.

ஊராக்கள் என்ன செய்வதென்றுபுரியாது தடுமாறிக் கொண்டிருந்தார்கள். நேரம் சரியாக இரண்டுமணி இருக்கும். மாமனாரும் வாழைப்பழத்தை கொணர்ந்துராசாத்தியை சாப்பிட வைக்கக் கூறினார். மருத்து விச்சி வந்தாள். "இவள் இன்றைக்கு நடுச்சாமமே இறந்திடுவாள். ஆக வேண்டியதைப்பாருங் கோ?" என்றாள். தகப்பன் அந்த சொல்லைக் கேட்டதும் விம்மி விம்மி அழுதார் .

"என்ன மணியம். அவளை வைத்தியசாலைக்கு கொண்டு போனால் உயிர் பிழைக்க வாய்ப்பிருக்கடா! அழுது ஒன் றும் நடக்கப் போவதில்லை. கொண்டு போவம் எழும்படா" சுதாகரித்துக் கொண்டு ஊரார் களின் துணையுடன் வைத்தியசாலைக்கு கொண்டு போனார்கள். வைத்தியர் கள் அவளுக்கு சிகிச்சை செய்ய மறுத்து விட்டனர். "நாய் கடிச்சால் உடனே கொண்டு வந்திருக்க வேண்டும். உயிர் போற கட்டத்தில கொண்டு வந்தால் என்ன செய்வது?" எனப் பேசினார்கள். மாமாவும் தகப்பனும் ஒருவாறு சம்மதிக்கவும் வைத்து விட்டார் கள்.

சிகிச்சையும் இனிதே முடிந் தது. வீட்டிற்கு குறை சுகத்துடன் திரும்பினாள். இராசாத்தி வெயில் காலங்களில் நாயைப் போல உருண்டு புரண்டு கத்துவாள். பச்சைத் தண்ணியோ சாப்பாடோ அவளால் குடிக்க இயலாது. சாவுடன் போராடுவாள். குளிர் காலங்களில் சாதாரணமான மனுசியாக இருப்பாள். இவ ளது நடவடிக்கையை பார்த்த சிறுபிள்ளைகள் இவளைக் கண்டால் பயந்து நடுங்கி "விசர் வருகுது" என சொல்லிக் கொண்டே ஓடுவார்கள். பச்சைக்கிளி கூட "எப்ப விசர்க் குணம் வருமோ தெரியாது" என்றே பழகினாள்.

மாமனார் அவளைக் கல்யாணம் செய்ய சம்மதிக்காது வேற இடம் பார்க்கத் தொடங்கினார். மணியத்தார் வயது போன காலத்திலும் இராசாத் திக்கு உழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். சில வருடங்களின் பின்னர் அதிகரித்த மனக்கவலையால் விசரும் கூடி வலிப்பு வந்து இறந்து விட்டாள். சொந்த பந்தம் எல்லோருமே வந்து கத்திக் குளறி தங்கள் கடமையைமுடித்து வைத்து விட்டார்கள். கடமையை முடித்துக் கொண்டிருக்கும் போதே மணியத்தாரின் உயிரும் பிரிந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகொப்டரும் மாட்டுவண்டிலும்



உலகத்தின் கண்கள் டாக்கா அரங்கில் குவிந் திருந்தன. "முடிவு தெரிந்த போட்டியாம்" பல ரின் அகங்காரத்துக்கு மத்தியில்போட்டி ஆரம்ப மானது. நாணயச்சுழற்சிக்காக இருதலைவர்க ளும் மைதானத்தை நோக்கி நடுவருடன் நகர்கின்றனர்.

ஏனோ வழமையாக மலர்ச்சியுடன் காணப்படும் மலிங்கவின் முகம் வழமைக்கு மாறாக அமைதி யாக இருந்தது. நடுவர் சுழற்றிய நாணயம் மலிங்கவுக்கு கீழ்ப்படிந்து டோனியை ஏமாற் றியது. ஆயினும் டோனியால் சுதாகரித்துக் கொள்ள முடியவில்லை.

"வெற்றி எமதே. எள்ளளவும் ஐயமில்லை" என்ற வைராக்கியத்தில் டோனி இருந்தார். பக்குவமாக பந்தெறிந்தன இலங்கையின் கரங் கள். இரண்டாம் பந்துப்பரிமாற்றத்தில் மத்தியூஸி டம் மண்டியிட்டார் ரகானே.

"இறுதியில் விளாசித்தள்ளுவோம்! பச்சைப் பிள்ளைகளை கொஞ்சம் விட்டுத்தான் பிடிப் போமே" என்று சிலிர்த்தன தோல்வியின் வாடையே அறியா இந்தியத் துடுப்புக்கள். மெல்ல மெல்லக்கடத்தின இளஞ்சிங்கங்கள், ஈரைந்து பந்துப்பரிமாற்றங்களை.

அப்போதே மெல்லப்புரைதட்டியது இந்தியாவுக்கு, துயிலெழுந்தன அதன்துடுப்புக்கள். ஆயினும் வலிக்க வலிக்க அடித்தும் இம்மியும் நகரவில்லை ஓட்டவேகம். மாறாக மண்டியிடத்தொடங்கியது துடுப்புவரிசை. "ரோகித் சர்மா(29) ,சிக்ஸர் சிங்கம் யுவராஜ்(11), என்னையா செய்யிறியள். இப்ப பாருங்கோ நான் அடிச்சுக் காட்டுறன் " என்று ஆட்டத்தை கையிலெடுத்தார் ஹெலிகொப்டர் புகழ் தலை டோனி.

தலையின் வாலை ஒட்ட நறுக்க ஏற்கனவே தீட்டிய திட்டத்தை இலாவகமாக அரங்கேற்றினார் இலங்கையின் புதிய தலை மலிங்கா. அவரின் வியூகத்தில் ஹெலிகொப்டர் ஷொட்டுகள் எல்லாம் மாட்டுவண்டியில் சவாரித்தன. இறுதியில் பந்துக்கு மேலதிகமாக பத்து ஓட்டங்களையே சேகரிக்கமுடிந்தது துடுப்பாட்டத்தில் ஜாம்பவா னாக திகழும் இந்திய அணியால். சற்றும் எதிர்பார்க்காத வகையில் இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நான்கு இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களையே இலங்கைக்கு எதிராக எட்டமுடிந்தது. தனித்து நின்று போரா- டினார் விராட் கோஹ்லி (77).

இனியேது வழி ? இடையில் தூங்கிய முயலால் வெற்றிக்கம்பத்தை எட்டவா முடியும?

வேறு வியூகங்கள் எதுவும் இல்லாமல் திண்டாடிய இந்திய அணி, சிறுத்தைகளின் வியூகத்தைக் கொப்பியடித்து வெற்றிபெற பகல் கனவு கண்டது. ஆனால் அது இலங்கையிடம் பலிக்கவில்லை. ஆயினும் இலகுவான இலக்கை எட்ட சற்று சிரமப்பட்டு ரசிகர்கள் வயிற்றில் புளியை கரைத்தது இலங்கையின் துடுப்பு வரிசை.

அதிரடி வீரர் குசல் பெரேரா (5),டில்சான்(18), ஜெயவர்த்தனா(24). திரிமன்னே(7). நிலைக்க வில்லை. எனினும் இந்தத்தொடரில் பெரிதாக சோபிக்காத குமார் சங்ககாரா ஆறுதல் தந்தார். இறுதிவரை களத்தில் நின்று அணியை வெற் றிப்பாதைக்கு அழைத்துச்சென்றார். மறுமுனை யில் திசர பெரேரா அதிரடியில் இறங்க இறுதி யில் சற்றும் எதிர்பாராத விதமாக இரு பந்துப் பரிமாற்றமும் ஒரு பந்தும் மீதமிருக்க இலங்கை மடியில் வீழ்ந்தது பல நாடுகள் போட்டியிட்டும் வெல்ல முடியாத வெற்றிக்கிண்ணம். வெற்றிக் கனவுடன் இருந்த இந்திய ரசிகர்களுக்கு முடிவு இடியாகவிழுந்தது. இலங்கை ரசிகர்களுக்கோ ஆனந்த ஆற்றை கரைபுரண்டு ஓடவைத்தது

- சுகந்தன்



# ராசிக்கார மலிங்க

சரஸ்வதி சபதம் என்ற திரைப்படத்தில் பிச்சைக்காரி ஒருத்திக்கு பட்டத்துயானை மாலையிட்ட அதிர்ஷ்டத்தால், அவள் மகாரணி யாகிவிடுவாள். அதேபோன்று திடீர் அணித்தலைவரானவர் தான் மலிங்க. ஏற்கனவே மலிங்கவை இலங்கைக் கிரிக்கெட் சபை வேண்டாப்பெண்டாட்டி போலவே நடத்தி வந்தது. இத்தனைக்கும் இலங்கை அணியின் நம்பிக்கையான வேகப்பந்துவீச்சாளர். அதிலும் துல்லியமான 'யோர்க்கர்' பந்துவீச்சுக்கு உலகில் மலிங்கவை அடிக்க வேறு ஆள் கிடையாது. ஆனால் இலங்கை அணிக்காக விளையாடுவதை விடவும் அவர் 'ஐ.பி.எல்' போன்ற பணத்தை வாரியிறைக்கும் தொடர்களில் விளையாடுவதிலேயே மலிங்க ஆர்வம் காட்டுவதாக இலங்கைக் கிரிக்கெட் சபை குற்றம் சுமத்தி வந்தது. இதனால் அவருடனான் ஒப்பந்தம் கூட பலத்த இழுபறிகளின் பின்னரே கைச்சாத்தானது.

இந்த நிலையில் இலங்கை 20/20 அணியின் தலைவ ராக டினேஷ் சந்திமாலும்,உப தலைவராக மலிங்கவும் நியமிக்கப்பட்டார்கள். இந்தத் தலைமைத்துவத்தின் கீழேயே இந்த முறை உலகக்கிண்ண 20/20 போட்டிகளில் பங்கேற்க இலங்கையணி பங்களாதேஷ் புறப்பட்டுச் சென்றது.

ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் இலங்கை அணி கலக்கிய போதும், அணித்தலைவர் டினேஷ் சந்திமால் எந்தவொரு போட்டியிலும் பிரகாசிக்கவில்லை. இந்த நிலையில் இங்கிலாந்துடனான போட்டியில் 190 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தும் சரியான களத்தடுப்பு வியூகம் அமைக்கததால் தோல்வியடைந்தது.

குறித்த போட்டியில் இலங்கை அணி பந்துவீச நிர்ண யிக்கப்பட்ட கால அளவைத்தாண்டியிருந்ததால், நியூ ஸிலாந்துடனான போட்டியில் அணித்தலைவர் சந்தி மால் விளையாட சர்வதேசக் கிரிக்கெட் சபை தடை விதித்தது. இந்தத் தடைதான் மலிங்கவுக்கும் இலங்கை அணிக்கும் அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொடுத்தது.

ஏனெனில் சந்திமாலுக்குத் தடை விதிக்கப்பட்டதால், உப தலைவராக இருந்த மலிங்க அணிக்கு தலைமையேற்று நியூஸிலாந்துடன் மோதி- னார். நாணயச்சுழற்சியில் மலிங்க வென்று முதலில் இலங்கை துடுப்பெடுத்தாடிய போதும் வெறும் 119 ஓட்டங்க ளுக்குள் சுருண்டது. இலங் கைக்கும் நியூஸிலாந் துக்கும் வாழ்வா? சாவா? என்ற போட்டி அது. குறித்த போட்டியில் வெல்லும் அணியே அரையிறுத் திக்கு முன்னேற முடியும். அப்படிப்பட்ட முக்கியமான போட்டியில் வெறும் 119 ஓட்டங்களை இலங்கை பெற்றதால், இத்தோடு இலங் கையின் கதை முடிந் தது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அங்குதான் மலிங்கவின் அதிர்ஷ்டம் வேலை செய்தது. ஏற்கனவே இலங்கை அணிக்கு தலைமை தாங்கியிருந்த மஹேல, சங்ககார, மத்தியூஸ், டில்ஷான் ஆகியோருடன் ஆலோசித்து மிக வித்தியாச மான களத்தடுப்பை மலிங்க அமைத்தார். ஹேரத் சுழலில் சூறாவளியானார். இந்தக் கூட்டுப்பொறிக்குள் குப்புற விழுந்தது நியூஸி லாந்து. வெறும் 60 ஓட்டங்களில் அதன் கதை முடிந்தது. அரையிறுதிக்கு முன்னேறியது இலங்கை.

அதன் பின்னர் எல்லாமே தலைகீழானது. அதுவரை மலிங்கவோடு குரோதம் பாராட்டி வந்த இலங்கைக் கிரிக்கெட் சபை , அவரை வாரியணைத்துக் கொண்டது. சந்திமாலை எட்டி உதைத்தது. 'சுயவிருப்பின் பேரில்' அணித்தலைமையில் இருந்து சந்திமாலை விலகிக்கொள்ள மலிங்கவே தொடர்ந்தும் அணித்தலைவரானார். அரையிறுதியிலும் நாணயச்சுழற்சியில் வெற்றி. போட்டியிலும் வெற்றி. இன்னொரு முறை இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இலங்கை.

இப்போது இறுதிபோட்டியிலும் பலமிக்க இந்திய அணியைப் புரட்டி எடுத்து, 18 வருடமாக எட்டாதிருந்த உலகக்கிண்ணத்தை இலங்கை தன்வசமாக்கி விட்டது. இந்த வெற்றிக்கு இலங்கை அணியின் திறமை,கூட்டு முயற்சி, போராடும் குணம் என்பன மட்டுமல்லாது மலிங்கவின் ராசியும் இன்னொரு முக்கிய காரணி என்று ஊடகங்களும் இலங்கை ரசிகர்களும் கொண்டாடுகின்றன. தலைமையேற்ற 3 போட்டிகளிலும் நாணயச்சுழற்சியிலும், வெற்றி பெற்று 20/20 உலகக்கிண்ணத்தை வசமாக்கிய மலிங்க உண்மையிலேயே ராசிக்காரன் தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஏப்ரல் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.